www.padippakam.com

சூலை 2000 ☆ விலை ரூ.5

# சிந்தனையாளன்

திருவள்ளுவராண்டு 2031 பெரியாராண்டு 122

## ஈழவிடுதலைச் சிறப்பிதழ்



ஈழத் தமிழர் இன்னல் தீர
முதல்வர் கலைஞர் காட்டும் வழி (பக்.13, 14, 15)

★ **தமிழீழ விடுதலை:**
தமிழகத் தமிழரும், உலகத் தமிழரும், தமிழீழத் தமிழரும்

★ கி.பி.2010இல் ஈழத் தமிழர் நிலை

★ உலக அமைச்சரவையில் பிரபாகரன்

படிப்பகம்

www.padippakam.com

## உள்ளே...


**தலையங்கம்**

☆ தமிழீழ விடுதலை:
தமிழகத் தமிழரும், உலகத் தமிழரும்
தமிழீழத் தமிழரும்
— வே.ஆனைமுத்து 1

**கட்டுரைகள்**

☆ எல்லோரும் படியுங்கள்!
என்னைப் பிடித்த பைத்தியம்
உங்களையும் பற்ற வேண்டும் 11

☆ ஈழத் தமிழர் இன்னல் தீர
முதல்வர் கலைஞர் காட்டும் வழி 13

☆ கி.பி.2010 இல்
ஈழத் தமிழர் நிலை — ச.அ. டேவிட் 16

☆ சங்கமித்ரா விடையளிக்கிறார் 28

☆ முல்லைப் பெரியாறு அணை...
— து.தில்லைவனம் 30

☆ தமிழ்வழிக் கல்வி பரப்புரைப் பயணம் 34

**கவிதை**

☆ வெல்ல முடியாத ஆயுதம் — தமிழேந்தி



# சிந்தனையாளன்

(தமிழ் மாத இதழ்)

| | |
|---|---|
| தனி இதழ் | ரூ. 5 |
| ஓர் ஆண்டுக் கட்டணம் | ரூ. 60 |
| 5 ஆண்டுகளுக்கு 1.5.2000 முதல் | ரூ.250 |
| வாழ்நாள் கட்டணம் 1.5.2000 முதல் | ரூ.1000 |

இன்றே சந்தா செலுத்துங்கள்!

ஒவ்வொருவரும் உறுப்பினராகுங்கள்!!

பணம், டி.டி. அனுப்பிட

'சிந்தனையாளன்'

SINTHANAIYALAN

19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம்

சென்னை-5. தொலைபேசி: 852 28 62


## ஈழத் தமிழர் ஆதரவுப் பேரணி - பொதுக் கூட்டத்திற்குத் தடை

### தடையை மீறி ஆயிரக்கணக்கானோர் கைது

தமிழீழத்தை அங்கீகரிக்கக் கோரியும் தமிழ் நாடு அரசின் 'கருத்துரிமைக்கு' எதிரான போக்கைக் கண்டித்தும் தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் சார்பில் 15.6.2000 அன்று தமிழகம் முழுவதும் பேரணிகளும் பொதுக் கூட்டங்களும் நடைபெற இருந்தன. ஆனால் தமிழ் நாடு அரசு 14.6.2000 அன்று இதற்குத் தடை விதித்து விட்டது. தடையை மீறி 15 ஆம் தேதியன்று தமிழகம் முழுவதும் பல்லாயிரக்கணக்கில் தோழர்கள் கைதானார்கள். சென்னையில் அன்று மாலை 4மணியளவில் எழும்பூர் ஆதித்தனார் சிலை அருகில் இருந்து புறப்பட இருந்த பேரணியில் கவிஞர். தமிழேந்தி, புலவர் இறைக்குருவனார், மு.பாலகுரு, ஆனூர் ஜெகதீசன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். தடையை மீறி ஊர்வலமாகப் புறப்பட முயன்ற தோழர்களைக் காவல் துறையினர் கைது செய்து அன்றிரவே அனைவரையும் விடுவித்தனர்.

---

## எச்சரிக்கை!

— ஓவியப் பாவலர் த.மருதமுத்து

தனி ஈழ விடுதலைக்கு வாழ்வா சாவா
தருணத்தின் உச்சியிலே புலிகள் நிற்க
மனிதரென இங்குசில நரிகள் கூட்டம்
வாய்கிழியக் கத்துவதை என்ன வென்பேன்;
''பனிவடக்கின் எல்லையிலே இதுவ ரைக்கும்
பாகித்தான் பகையிருந்து வருதல் போன்று
தனி ஈழம் அமையுமெனத் தெற்கே எல்லை
தனிலிருந்தும் பகையாக வருமாம் ஈழம்:''

கிழக்கு வங்க விடுதலைக்குத் தோள்கொ டுத்தோம்:
மேற்குவங்கம் தனிநாடாய்ப் பிரிந்தா போச்சு?
அழகான தமிழீழம் அமையு மானால்
அதனாலே தமிழ்நாடு தனிநாடாமா?
பிழைமனத்துப் பேதைகளே புழுதி வாரி
பெருமைமிகும் தமிழர்மேல் வீசா தீர்கள்!
'பழி தூற்றி விடுதலையைக் கெடுக்கும் எண்ணம்'
பாவிகளே படையாதீர் எச்சரிக்கை!

படிப்பகம்

www.padippakam.com

## சமதர்மக் காவலர்கள்



மார்க்சு லெனின் சிங்காரவேலர் பெரியார்

## சமூகநீதிக் காவலர்கள்



புலே பெரியார் அம்பேத்கர் லோகியா

இந்தியாவில் பொதுவுடைமை மலர மார்க்சிய - பெரியாரிய நெறியில் தேசிய இனவழிப் பட்ட சம உரிமை உடைய சமதர் மக் குடிஅரசுகள் ஒருங்கிணைந்த உண்மையான கூட்டாட்சி அமைய ஆவன செய்தல்

# சிந்தனையாளன்

சுவடி : 22 மாத இதழ் ஏடு : 11

### கொள்கை முழக்கம்:

உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்!

— மார்க்ஸ்-எங்கெல்ஸ்

ஒடுக்கப்பட்ட தேசிய இன மக்களே ஒன்று சேருங்கள்!

— லெனின்

ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களே ஒன்று சேருங்கள்!

— பெரியார்

ஆசிரியர்

**வே.ஆனைமுத்து**

ஆசிரியர் குழு

வே. ஆனைமுத்து
சங்கமித்ரா
க.முகிலன்
து.தில்லைவனம்
புலவர் அஞ்சான்
க.நாகராசன்
வாலாசா வல்லவன்
மங்கலம் அரசன்

சென்னை சூலை 2000

விலை ரூ.5/-

## தமிழீழ விடுதலை: தமிழகத் தமிழரும், உலகத் தமிழரும் தமிழீழத் தமிழரும்

தமிழீழ விடுதலைக்கான காரணங்களும் தேவையும் இன்று நேற்று தோன்றியவை அல்ல.

இன்று உள்ள எல்லைக் கோட்டைக் கொண்ட இலங்கை (சிலோன்) அரசு என்கிற ஒன்று 18-2-1833 இல் பிரிட்டிஷ்காரனால் உருவாக்கப்பட்டது. இந்த இலங்கை முழுவதையும் தமிழரே ஆண்ட காலம் ஒன்று இருந்தது. இலங்கை முழுவதற்கும் அன்று ஈழம் என்பதே பெயர்.

இந்தியாவின் ஒரிசா பகுதியிலிருந்து விசயன் என்பவன் இலங்கையை அடைந்தான் என்பது பழைய வரலாறு. அவன் வழியினரே சிங்களர். அதற்கு முன்னர், தமிழரே அங்கு இருந்தனர். பிற்காலத்தில் தமிழர் அரசும் இருந்தது; சிங்களர் அரசும் இருந்தது. இரண்டையும் கைப்பற்றி இணைத்தவன் பிரிட்டிஷ்காரன். பிரிட்டிஷ்காரன் 1948இல் வெளியேறிய போது, இலங்கை முழுவதையும் சிங்களரிடம் ஒப்படைத்தான். அவன் செய்த முதலாவது கேடு இது.

வயது வந்தோர்க்கு வாக்குரிமை பற்றி 1927 இல் டெனோமொர் குழு அறிக்கையில் கண்ட உரிமைகளின் விளைவாக ஈழத் தமிழர் இலங்கை வாக்காளர்களில் சிறுபான்மையினர் ஆயினர். அடுத்து பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே, தமிழரின் தாயக மண்ணில் சிங்களரைக் குடியேற்றி வேளாண்மை செய்கிற திட்டத்தை 1936லேயே அறிமுகப்படுத்தினான், சிங்கள அமைச்சன் டி.எஸ்.சேனநாயகா. அது படுவேகத்தில் வளர்த்தெடுக்கப் பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



தமிழர் மண்ணில் சிங்களர் பெரிய அளவில் குடியேறிவிட்டனர்.

வெள்ளையன் வெளியேறிய உடனேயே இலங்கையிலுள்ள இந்தியர் வழித் தோட்டத் தொழிலாளத் தமிழர்களின் எல்லா உரிமைகளும் பறிக்கப்பட்டன. 1948 டிசம்பரில் இவர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது; 1949 இல் இவர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது; இவர்கள் கொத்தடிமைக் கூலிகளாகவும், நடைப்பிணங்களாகவும் சிங்களர்களால் ஆக்கப்பட்டனர்.

அன்றே - இவர்களுக்கு இலங்கையில் எல்லா உரிமைகளும் கொடுக்கப்பட்டிருக்க இந்திய அரசும், இந்திய மக்களும், தமிழக மக்களும் முழு மூச்சோடு முயன்றிருக்க வேண்டும். அவ்வாறு செய்யாதது மாபெரும் குறையாகவே இன்றுவரை உள்ளது. இவர்களைத் திருப்பி இந்தியாவுக்கு அழைத்துவர நேருவும், சாஸ்திரியும், இராசாசியும் செய்த முயற்சிகளை அன்றே தந்தை பெரியார் கண்டனம் செய்தார். சாஸ்திரி - சிறீமாவோ ஒப்பந்தம் இன்றும் இவர்களை அங்கே அடிமைகளாக வைத்திருக்கவே பயன்படுகிறது.

ஈழத் தமிழ் மக்களின் நிலை 1956 முதல் மிகப் பெரிய உரிமை இழப்புகளுக்கு உள்ளாயிற்று:

1. சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்கிற அரசமைப்பு விதி 5.6.1956 இல் சட்டமாக்கப்பட்டது.

இன்றைய 1972 சிறீலங்கா அரசமைப்புச் சட்டத்தில் பிரிவு 7 என இது உள்ளது.

2. எல்லாச் சட்டங்களும் சிங்கள மொழியில்தான் இருக்கும் என்கிற சட்டம் 24.6.1971 இல் நிறைவேற்றப்பட்டது.

இது இன்றுள்ள 1972 ஆம் ஆண்டைய சட்டத்தில் பிரிவுகள் 9,10,11 இல் உள்ளது.

3. சிறீலங்கா அரசில் முதன்மைச் சிறப்பிடத்தையும், பாதுகாப்பையும் பெறுவது பௌத்தம் ஆகும் என்கிற சட்டம் 1971 இல் நிறைவேற்றப்பட்டது.

1972 ஆம் ஆண்டையச் சட்டத்தில் இது பிரிவு 6 ஆக உள்ளது (பார்க்க: பக்கம் 11, 12)

சிறீலங்கா அரசமைப்புச் சட்டப்படி தமிழ், தமிழர் சமயம், பௌத்தம் அல்லாத பிற சமயத்தினர் அனைவரும் இரண்டாம் நிலை, மூன்றாம் நிலைக் குடிமக்கள் ஆக்கப்பட்டுவிட்டனர். அதாவது வெள்ளையன் காலத்தில் தமிழ் இனமும், தமிழர் சமயமும், பிற சமயத்தினரும் பெற்றிருந்த சம உரிமைகள் 1949க்கும் 1972க்கும் இடையில் சிங்களர்களால் பறிக்கப்பட்டுவிட்டன.

இவை இப்படி இருக்கிற நிலையில், 'சிறீலங்கா அரசின் ஒருறுப்புத் தன்மையும், ஒருங்கிணைந்த எல்லையும், இறையாண்மையும் காப்பாற்றப்பட வேண்டும்' என்று, இந்திய தேசியவாதிகளும், இந்தியப் பொதுவுடைமை வாதிகளும், இந்தியப் பார்ப்பன - பனியா - மார்வாரி இனத்தினரும், இந்தியப் பார்ப்பன - பனியா - மார்வாரி பத்திரிகையாளர்களும், இந்தியாவிலுள்ள உயர் அதிகார வர்க்கமும், இந்தியாவிலுள்ள பிழைப்புவாதக்கட்சிகளும் - இந்திய அரசும் கூறுவது, மேலே கண்ட ஈனத் தனமான நிலைமையைக் கட்டிக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத்தான். இது தீய உள்நோக்கம் கொண்டது.

இது தமிழீழத்தைத் தாயகமாகக் கொண்ட ஈழத் தமிழர்க்கும், இந்தியத் தமிழர் வழிவந்த தோட்டத் தொழிலாளத் தமிழர்க்கும் மாபெருங் கேடானது; இழிவானது; நீடித்து விட்டு வைத்திருக்கக் கூடாதது.

இந்த இழிநிலையிலிருந்து இலங்கையிலுள்ள தமிழர் அனைவரையும் விடுவிக்க அன்று முயன்றவர்கள் ஜெ.ஜெ. பொன்னம்பலம், தந்தை செல்வநாயகம், நடேசன், பொன்னம்பலம் இராமநாதன் முதலான மாமேதைகள் ஆவர்.

அமைதி வழியில் - நாடாளுமன்ற நெறியில் 1936 முதல் இவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் எளிமையானவை அல்ல. இவர்களின் இடையறாத முயற்சிகளால் சிங்கள அரசுடன் 1958 இலும், 1967 இலும் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் சிங்களர்களால் கிழித் தெறியப்பட்டன; அடியோடு மீறப்பட்டன.

இங்குள்ள இந்தியப் பார்ப்பன - பனியாக் கும்பல் ஆதிக்க இந்திய அரசுக்கு, இவையெல்லாம் தமிழர்க்கு இழைக்கப்பட்ட அநீதிகள் - உரிமைப் பறிப்புகள் - உரிமை மீறல்கள் என அன்றும் தென்படவில்லை; இன்றும் தென்படவில்லை என்றால், இவர்களைப் பற்றி நாம் என்ன சொல்லுவது?

இது மட்டுமா?

படிப்பகம்

www.padippakam.com



1977க்கும் 1982க்கும் இடையில் இலங்கை அரசிலும் இராணுவத்திலும் காவல் துறையிலும் தமிழர் பெற்றிருந்த வேலை வாய்ப்புகள் முற்றிலுமாகப் பறிக்கப்பட்டன.

1977 இல் இராணுவத்தில், மிகவும் கூடுதலாகவே, 40% இடங்களைத் தமிழர் பெற்றிருந்தனர்; 1982 இல் இது 3% ஆனது.

1977 இல் அரசுப் பணிகளில் உயர் பதவிகளில் தமிழர் 30% என்பது, 1982 இல் 5% ஆக்கப்பட்டது; நிர்வாகப் பதவிகளில் 1950 இல் 50% இடம் பெற்றிருந்த தமிழர், 1970 இல் 5% அளவுக்குக் குறைக்கப்பட்டனர்; எழுத்தர் வேலைகளில் 40% என்பது 5% ஆக்கப்பட்டது. அன்று 17,000 பேர் இருந்த காவல் துறையில் 3% பேரே தமிழர் இடம் பெற்றிருந்தனர்.

இலங்கை மக்கள் தொகையில் தமிழ் பேசும் தமிழர், இஸ்லாமியர், கிறித்துவர் ஆகியோர் அன்றும் இன்றும் மொத்தம் 32% பேர் ஆவர்; சிங்களர் ஆன பௌத்தர் 68% பேர் ஆவர்.

சிறீலங்காவின் எந்த அரசுத் துறையிலும் தமிழர் 18%, தமிழ் இஸ்லாமியர் 7%, தமிழ் கிறித்துவர் 7% வேலை பெற்றிருக்க உரிமை பெற்றவர் ஆவர்.

இந்த உரிமைகள் அரசமைப்புச் சட்டப்படியும், நடப்புப்படியும் அடியோடு பறிக்கப்பட்ட பின்னர், எதற்காக - எந்த நியாயத்தின் கீழ் - சிறீலங்காவின் ஒருமைப்பாட்டை, ஒருறுப்புத் தன்மையை, இறையாண்மையை ஈழத் தமிழன் காக்க வேண்டும்? தன்னை - தன் மொழியை - தன் சமயத்தை - தன் மரபை - தன் மண்ணை - ஆட்சி அதிகாரத்தில் தனக்குள்ள பங்கை எல்லாம் விட்டுக் கொடுத்துவிட்டு, வெறும் சோற்றுத் துருத்தியாக இருந்து கொண்டு, சிறீலங்காவின் இறையாண்மையை ஈழத் தமிழன் மதிக்க வேண்டும் - காப்பாற்ற வேண்டும் என எதற்காக நினைப்பான்? ஏன் நினைப்பான்? ஏன் நினைக்க வேண்டும்?

ஈழத் தமிழன் அப்படி நினைக்க வேண்டும் எனச் சொல்லுவதற்கு இந்திய அரசுக்கு - பார்ப்பானுக்கு என்ன உரிமை இருக்கிறது? எந்த உரிமையும் இல்லை.

ஆனால் ஒன்று.

100 கோடி மக்கள் உள்ள இந்தியாவில் - சுதந்தர இந்தியா என்பதில், 50 ஆண்டுகளாகப் பிரதமர்களாக, குடி அரசுத் தலைவர்களாக, முக்கிய அமைச்சர்களாக, உயர் ஆளும் வர்க்க அதிகாரிகளாக, உயர் நீதிபதிகளாக, உயர் காவல் துறை அதிகாரிகளாக வெறும் 4 கோடிப் பேர் மட்டுமே இருக்கிற இந்தியப் பார்ப்பனர்களே — 15 கோடிப் பேர்களான மேல் சாதியினரே பெரிதும் பதவி வகித்தனர்; வகிக்கின்றனர். இது மனித உரிமைக்கும் - மக்கள் நாயகத்துக்கும் எதிரானது என்பது இன்னமும் இங்குள்ள காந்தியவாதிகளுக்கும், தேசியவாதிகளுக்கும், மார்க்சிய வாதிகளுக்கும் ஏன் புரியவில்லை? புரியாமலா இவர்கள், ஒரே குரலில், ''சிறீலங்காவின் இறையாண்மை'' பற்றிப் பேசுகின்றனர்? இல்லை. நன்றாகப் புரிந்தே பார்ப்பனரும் - பனியாவும் மற்ற மேல் சாதியினரும் இதைப் பேசுகின்றனர்.

இதை அன்றே புரிந்திருந்த ஒரே காரணத்தால்தான், ''இந்தியாவின் இறையாண்மை'' என்பதை முதன்முதலில் தமிழ்நாட்டுத் தமிழர்கள் எதிர்த்தார்கள். இக் கோரிக்கையை முதன் முதலில் முன் வைத்தவர்கள் டாக்டர் டி.எம். நாயரும், தந்தை பெரியாரும் ஆவர்.

''சுதந்தரத் தமிழ்நாடு வேண்டும்'' என்பதில் 1945 முதல் 1973 வரை எந்த வித நடுக்கமும் இன்றி நிலைத்து நின்றவர் தந்தை பெரியார். இதனைப் பெற்றிட இலட்சக்கணக்கான தமிழர் உயிர்ப் பலியாக வேண்டும் என, 1960 முதல் ஓங்கி ஓங்கிக் கூவினார், பெரியார். ஏமாற்றமே அவர் கண்ட விடை. இது இங்குள்ள உண்மை நிலை. இதை நாம் உணர வேண்டும்.

இதை உணர்ந்து, இதற்கு ஒரு பத்தாயிரம் பேர் கூட ஆயத்தம் ஆக்கப்பட வக்கற்ற நிலையில், 'உலக உருண்டையில் தமிழனுக்கு என்று ஒரு சுதந்தர நாடு வேண்டும்' என்று பேசுவதும் எழுதுவதும் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளுவதாகும்; வெறும் உணர்ச்சி வயப்பட்டதாகும்.

''இந்தியாவின் இறையாண்மை'' என்பது காப்பாற்றப்படுவதால்தான் பார்ப்பன - பனியா - மார்வாரிகளின் அரசியல் சமூக பொருளாதார மேலாண்மையும் ஆதிக்கமும் 85 கோடிப் பேரான பார்ப்பனரல்லாதார், இஸ்லாமியர், கிறித்துவர், சீக்கியர், பௌத்தர் பேரில் கி.பி. 2000 ஆண்டிலும் கொடி கட்டிப் பறக்கின்றன.

அன்று இந்தக் கொடியைக் கிழிக்க நினைத்த தமிழகத் தமிழர் இன்று படுத்து விட்டனர். பஞ்சாபியரும், வட கிழக்கு மாநிலத்தவரும் துண்டு துண்டாக முயன்று முயன்று அடக்கப்படுகின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com



இப்படித்தான், 1977 பொதுத் தேர்தல் வரை அடங்கிக் கிடந்தனர், சிறீலங்காவில் தனித் தமிழீழம் கேட்ட அரசியல் கட்சித் தலைவர்கள். தந்தை செல்வா அவர்கள் 27.3.77 இல் மறைந்தது ஒரு பேரிழப்பு ஆயிற்று.

தந்தை செல்வா அவர்களால் அடையாளம் காட்டப்பட்ட வன்னிய சிங்கம், டாக்டர் இராம நாதன் ஆகியோரும் சடுதியில் மறைந்தனர்.

ஆட்சியில், அதிகாரத்தில் சிங்களரால் ஈழத் தமிழர் அனைவர்க்கும் இழைக்கப்பட்ட அநீதி, அடுத்துத் தமிழ் இன மாணவர்களைப் பதம் பார்த்தது.

'உயர் கல்வியைத் தரப்படுத்துதல்' என்கிற பேரால், ஒரே படிப்பில் சேருவதற்கு, சிங்களர்க் குக் குறைந்த மதிப்பெண் போதும் என்றும்; தமிழ் மாணவர்க்கு அதிக மதிப்பெண் வேண் டும் என்றும் தகுதி வரையறுக்கப்பட்டது. தமி ழின மாணவர்களின் எதிர் காலம் கேள்விக்குறி யாயிற்று.

இலங்கை நாடாளுமன்ற அரசியல் கட்சித் தமிழர்கள், 1962 இல் இங்கு தி.மு.க செய்தது போல், பதவிக்காகத் தமிழீழ விடுதலைக் கோரிக்கையைத் தலை முழுகினர்; மாவட்டக் குழுக்கள் அமைந்து, அவை போதிய அதிகாரம் பெற்றால் போதும் என்றே கருதினர்.

ஈழத் தமிழர்கள் 1956 இல் குறி வைத்துத் தாக்கப்பட்டனர்.. 1977, 1981, 1983 ஆம் ஆண்டு களில் தமிழர் பேரில் சிங்களர் தொடுத்த தாக்குதலில் எண்ணற்ற தமிழர்கள் கொல்லப்பட் டனர்; பலநூறு தமிழ்த்தாய்மார்கள் கற்பழிக்கப் பட்டனர்.

இதனை எதிர்த்து எழுந்த இளைஞர்கள் 23-7-1983 இல் 13 இராணுவ வீரர்களைக் கொன்ற னர். இதற்குப் பகரமாக, 12-8-1983க்குள், ஆயிரக் கணக்கான தமிழர்கள் சிங்களர்களால் கொல்லப் பட்டனர்; நூற்றுக்கணக்கான தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்பட்டனர்; ஆயிரக்கணக்கான தமிழர் வீடுகள் எரிக்கப்பட்டன; தமிழரின் கறி கடை வீதியில் விற்பனை செய்யப்பட்ட கொடுமை யும் நடந்தது.

இந்தக் கொடுமைகளை ஊக்கியவர்கள் யார், யார்?

1. உயர் அதிகாரம் படைத்த சிங்கள பௌத்த பிட்சுக்கள்
2. ஜெயவர்த்தனே அரசு
3. ஜெயவர்த்தனேயின் கட்சியினர்
4. அய்க்கிய தேசியக் கட்சியினர்
5. ஜனதா விமுக்தி பெரமுன என்கிற பொதுவுடைமைக் கட்சியினர்.
6. இவர்களின் பாதுகாவலர்களான — கையாலாகாத இலங்கை இராணுவத்தினர்.

இவ்வளவு கொடுமைகளும் எதற்காக?

''இலங்கையின் ஒருறுப்புத் தன்மை'', ''இலங்கையின் இறையாண்மை'' என்பவற் றைக் காப்பாற்றி, என்றென்றும் சிங்களர் ஆதிக் கத்தை ஏற்று, அடிமைகளாக ஈழத் தமிழர் இருந்திட வேண்டும் என்பதற்காகத் தான்!

இந்த இக்கட்டான சூழலில்தான், தமிழ கத்தை நோக்கி — இந்தியாவின் ஒரு பகுதியாக உள்ள தமிழ்நாட்டை நோக்கி 2 இலட்சம் ஈழத் தமிழர்கள் அகதிகளாக வந்து சேர்ந்தனர்.

ஈழத் தமிழர்க்காகத் தன்னெழுச்சியாக 1983 இல் தமிழகத் தமிழரிடம் தோன்றிய எழுச்சி 1990 வரை மறையாமல், குறையாமல் இருந்தது.

1987 இல், அ.தி.மு.க ஆட்சியிலிருந்த காலத்தில் எம்.ஜி.ஆர். விருப்பத்துக்கு மாறாக வும், விடுதலைப் புலிகளின் எதிர்ப்பை மீறியும் இந்திய அமைதிப் படை என்கிற கூலிப் படையை இராஜீவ் காந்தி ஈழத்துக்கு அனுப்பி னார்.

ஜெயவர்த்தனாவுக்குப் பண்ணையடிக்கப் போன அந்தப்படை, ஈழப் பொது மக்களைக் கொன்று குவித்தது; பல நூறு தமிழ்ப் பெண்க ளைக் கற்பழித்தது; தமிழர்களின் வீடுகளைக் கொள்ளையடித்தது. இந்தியப் படையுடன் இலங்கைப் படையும் சேர்ந்து குண்டுவீசி தமிழி னத்தைச் சார்ந்த எண்ணற்றோரின் வீடுகளைச் சாம்பலாக்கின; போட்டிக் குழுக்களால் அடை யாளம் காட்டப்பட்ட விடுதலைப் புலிகள் கொன்று குவிக்கப்பட்டனர்.

இரு நாட்டுப் படைகளும் செய்த இத்தனை அழிப்பு வேலைகளும் அரச பயங்கரவாதம் (State Terrorism) அல்லவா? மனித உரிமை மீறல்கள் அல்லவா? இந்த ஈனச் செயலைச் செய்வதற்காக ''ஒன்று பட்ட இலங்கை'' வேண் டுமா? இதற்காக, ''இலங்கைக்கு இறையாண் மை'' ஒரு கேடா?

1987 இல் எம்.ஜி.ஆர். மறைந்தார். 30 நாள் சானகி ஆட்சி கலைக்கப்பட்டது. 1989 தேர்தலில் தி.மு.க ஆட்சிக்கு வந்தது.

இலங்கையிலும் பிரமதாசா ஆட்சி வந்தது.

படிப்பகம்

www.padippakam.com



பிரமதாசாவும், தம்பி பிரபாகரனும் தந்த அழுத்தத்தில் 1990 இல் இலங்கையிலிருந்து இந்திய அமைதிப்படை வெளியேறிற்று.

தி.மு.க ஆட்சி செய்த 1989 - 1990 இல் பல தடவைகள் காங்கிரஸ் தலைவர் இராஜீவ் காந்தி தமிழ்நாட்டுக்கு வந்து பத்திரமாகவே திரும்பிப் போனார்.

தி.மு.க ஆட்சி பொய்யான ஒரு காரணம் கூடக்காட்டப் படாமல், ஆளுநரின் அறிக்கைக்கும் மாறாக அநியாயமாகக் கலைக்கப்பட்டது.

ஆளுநர் ஆட்சிக் காலத்தின் போது, தமிழகத்துக்குத் தேர்தல் பணியை முன்னிட்டு - வேண்டப்பட்டாத பயணத்தை மேற்கொண்ட இராஜீவ் காந்தி, 21.5.1991 இல் தமிழ்நாட்டில் மனித குண்டுக்கு இரையானார். அவருடைய சாவுக்கு தி.மு.க ஒரு காரணம் எனப் பொய்யாகக் கூறி, தி.மு.கவினரைத் தாக்கினர் — காங்கிரஸ் காலிகளும், கண் கெட்ட கூலிகளும்.

தமிழ்நாட்டுத் தமிழர்கள் ஈழ விடுதலை பற்றிப் பேசவும், விவாதிக்கவும், உதவி செய்ய முன்வரவும் அஞ்சிக் கொஞ்சம் கொஞ்சமாக விலகினர்.

பல்லாயிரக் கணக்கான ஈழத் தமிழர்கள் மேலை நாடுகளுக்குப் புகலிடம் தேடிச் சென்றனர்.

இதற்கிடையில், ஈழத்தில் சிறீ சபாரத்தினம் கொல்லப்பட்டதும், சென்னையில் பத்மநாபா குழுவினர் கொல்லப்பட்டதும், ஈழத்தில் அமிர்தலிங்கம் கொல்லப்பட்டதும் தமிழகத் தமிழரிடையேயும், ஈழத் தமிழரிடையேயும் விடுதலைப் புலிகளின் பேரில் அந்நியமான ஓர் உணர்வை வளர்த்தன, இவை உண்மை.

பிரமதாசா கொல்லப்பட்டு, அடுத்து நடந்த தேர்தலில் வெற்றி பெற்ற சந்திரிகா குமர துங்கா, ஈழச் சிக்கலுக்கு உரிய தீர்வு காணப் போவதாகத் தமிழருக்கு வாக்களித்தார்; உலகுக்கும் அறிவித்தார்.

இவருடைய காலத்தில் நடப்பது என்ன?

தன்னுடைய நாட்டுக் குடிமக்களான தமிழீழ மக்கள் பேரில் முப்படைத் தாக்குதலை ஏவிவிட்டு பல்லாயிரம் தமிழரையும் ஆயிரக் கணக்கான விடுதலைப் புலிகளையும் கொன்று குவித்ததுதான்.

தமிழகத்தின் கடல் எல்லை இந்திய ஆட்சி ஆதிக்கத்துக்கு உட்பட்டது. இந்தக் கரையிலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள இலங்கைக் கடற்கரையிலுள்ள தமிழர்கள் முப்படைகளால் கொல்லப்பட்ட போதும், வாழிடங்களை விட்டு அவர்கள் வெளியேறிய போதும், தப்பிப் பிழைத்து அகதிகளாக வெளியேறிட முயன்ற போதும் - அக் கொடுமைகளைக் குறித்து, இந்திய அரசும், தேசியவாதிகளும், பொதுவுடைமை வாதிகளும், பார்ப்பனர்களும், "அது இலங்கையின் உள் நாட்டுப் பிரச்னை; இந்தியா அதில் தலையிடாது" என்றே கூறினர்.

முப்படைத் தாக்குதலின் அழிவிலிருந்து யாழ் நகர மக்களையும், புலிகளையும் காப்பாற்ற நினைத்த தம்பி பிரபாகரன் 1995இல் யாழ்ப்பாண நகரைக் காலி செய்தார். அது முதல் 2 இலட்சம் மக்கள் காடுகளில் துன்ப வாழ்க்கை நடத்துகின்றனர்.

இலங்கையில் முப்படைத் தாக்குதல் நடப்பதன் உடனடி விளைவு என்ன?

1) இந்தியத் - தமிழகக் கடற்கரையை நோக்கி ஆயிரக்கணக்கான ஈழத் தமிழர்கள் தமிழகத்துக்கு வருவது;

2) தமிழகத்தை அடைந்த ஈழ அகதிகளுக்கு இந்திய அரசும், தமிழக அரசும் புகலிடமும், பராமரிப்புச் செலவும் அளிப்பது;

3) 1983 ஆகஸ்டு முதல் கடந்த 17 ஆண்டுகளாக இந்திய அரசின் பேரிலும், தமிழக அரசின் பேரிலும் இந்தப் பொறுப்பையும் சுமையையும் இலங்கை அரசு ஏற்றுவது.

இவையும், இன்னும் பலவும் இதன் விளைவுகள்.

இந்த விளைவுக்கு ஒரே காரணம் தன் குடிமக்கள் பேரில் சிறீலங்கா அரசு தொடுக்கும் முப்படைத் தாக்குதலே. இது மானிட உரிமைக்கு எதிரானது இல்லையா? அண்டை நாடான இந்தியாவுக்குத் தொல்லையை விளைவிக்கும் தலையீடு இல்லையா?

இந்தச் சூழலில், "முப்படைத் தாக்குதலை நிறுத்து; விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வு கண்டிடு!" என்று சிறீலங்காவுக்கு அழுத்தம் தர வேண்டியது இந்திய அரசின் நீங்காக் கடமை அல்லவா?

இந்திய அரசுக்கு அழுத்தம் தந்து, இக் கோரிக்கையை இந்திய அரசினர் சிறீலங்கா அரசிடம் வலியுறுத்திடத் தமிழக அரசியல் கட்சிகளும் தலைவர்களும் 1992 முதலே முயன்றிருக்க வேண்டாமா? ஏன் எவரும் முயலவில்லை?

படிப்பகம்

www.padippakam.com



கடந்த அய்ந்தாண்டுகளாக இவ்வளவு கொடுமைகளையும் தாங்கிக் கொண்டு இலங்கை இராணுவத்தைத் திணற வைத்த மறஞ்செறிந்த விடுதலைப் புலிகள், 2000 மார்ச்சுக்குப் பிறகு மேற்கொண்ட உச்சக் கட்டப் போரில் யாழ்ப்பாணத்தை நெருங்கிவிட்டார்கள்; யாழ்ப்பாண மக்களை அடக்கி ஆளுகிற 40 ஆயிரம் பேர் கொண்ட இலங்கை இராணுவத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டார்கள்.

சேலை கட்டிய செயவர்த்தனாவான சந்திரிகாவுக்கு இப்போதுதான் அச்சம் வந்தது; சந்திரிகாவின் முந்தாணியைப் பிடித்துக் கொண்டு நிற்கும் இலட்சுமண் கதிர்காமர் என்கிற ஈனத் தமிழனான அயலக அமைச்சருக்கு இதன்பிறகு தான் அறிவு வந்தது. இவர்களையும் சிங்கள அரசியல் வாதிகளையும் ஆட்டிப் படைக்கும் பௌத்த குருமார்கள் என்கிற கொடிய இரண்டு கால் விலங்குகளுக்கு இப்போதுதான் ஞானம் பிறந்தது; எதிர்க்கட்சித் தலைவரான இரனில் விக்ரம சிங்கேவுக்கும் உடனே சூடு பிறந்தது; பொதுவுடைமை பேசும் சிங்கள இன வெறியர்களான ஜனதா விமுக்தி பெரமுனக் காடையர்களுக்கோ இன வெறி மிகவும் மேலாடியது. இதன்பிறகும் இவர்கள் செய்வது என்ன?

இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து, இஸ்ரேல், பாக்கிஸ்தான், சீனா என எல்லா நாடுகளுக்கும் ஓடி இவர்கள் ஆயுதம் கேட்கிறார்கள்; பெருந்தொகை கடன் கேட்கிறார்கள். நடப்பு ஆண்டுக்கு இராணுவத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையான ரூ 5400 கோடி, இப்போது ரூ 7500 கோடியாக உயர்த்தப்பட்டுவிட்டது. இஸ்ரேல், பாக்கிஸ்தான், சீனா முதலிய நாடுகளிலிருந்து புதிய ஆயுதங்களைப் பெற்ற பிறகு — இந்தியாவில் இரகசியமாக இராணுவப் பயிற்சி பெற்றுக் கொண்டு — இஸ்ரேலில் விமானங்களும், விமான ஓட்டிகளும், மொசாத் அடியாள் படையும் பெற்றுக் கொண்டு, தற்காலிகமாக, விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தை நோக்கி முன்னேறுவதைத் தடுத்து நிறுத்தி வைத்திருக்கிறார்கள், இலங்கைப் படையினர்.

சிறீலங்கா அரசு 17 ஆண்டுகளாக ஈழத் தமிழர்க்கு இழைக்கும் தொடர் கொடுமைகளுக்கு ஒரு முடிவு வர வேண்டும் என்கிற உணர்வு தமிழ்நாட்டுத் தமிழரிடையே ,1995 முதல் தலை தூக்கிவிட்டது.

'தமிழீழம் விடுதலை பெற்றால் மகிழ்ச்சி அடைவேன்' என எப்போதும் கூறும் தி.மு.க தலைவர் கலைஞர் மு.கருணாநிதி, தம் 77 ஆம் ஆண்டைய பிறந்தநாளில், 3.6.2000 அன்று, சிறீலங்கா அரசுக்கு இரண்டு ஆலோசனைகளை முன்வைத்தார்.

1. இலங்கையில் சிங்களர்களும் தமிழர்களும் சம உரிமை பெற்று வாழ வேண்டும்.

2. அது முடியாத பட்சத்தில் செக்கோஸ்லோவக்யா - செக் என்றும், ஸ்லோவக்யா என்றும் பிரிந்து கொண்டது போல் பிரிந்து வாழ வேண்டும்.

இவையே கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் தம் பிறந்தநாள் விழாவில் ஆற்றிய சிறந்த உரையின் கருத்து. (பார்க்க: பக்கம் 13, 14, 15) இன்று வரையில் இதில் அவர் உறுதிப்பட நிற்கிறார். இனியும் இதில் இவர் உறுதியாக இருக்க வேண்டும்.

தி.மு.கவின் தலைவர் — தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருப்பவர் சிறீலங்கா அரசுக்குக் கூறிய இந்த ஆலோசனையை ஏற்பதும் ஏற்காததும் சந்திரிகாவின் விருப்பம்.

ஆனால் இந்திய தேசியவாதிகளும், பொதுவுடைமை வாதிகளும், தமிழரின் பிறவி எதிரிகளான பார்ப்பனர்களும் கலைஞரின் பேச்சு பொறுப்பற்றது - தரக் குறைவானது என்று கூறிவிட்டு, ''சிறீலங்கா அரசின் இறையாண்மை என்ன ஆவது? இலங்கையின் இறையாண்மைக்குப் பங்கம் விளைக்கும் கருத்தை இவர் எப்படிக் கூறலாம்?'' எனக் கூறிப் புழுதி வாரித் தூற்றினர்.

பார்ப்பன நல — தமிழர் நல விரோத ஏடுகளான ''தி இந்து'', ''தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்'', ''துக்ளக்'' முதலான ஏடுகள் இதுபற்றி நஞ்சை உமிழ்ந்துவிட்டன.

6-6-2000 அன்று ''THE HINDU'' எழுதிய தலையங்கம், ''AN IRRESPONSIBLE STANCE'' கண்டனத்துக்குரிய ஒரு நிலைபாடு என்பது. அதன் தொடக்கப் பகுதியில் நெருப்பையே வாரிக் கொட்டிவிட்டது. ''தி இந்து''

அப்பகுதி என்ன கூறுகிறது?

''தமிழ்நாட்டு முதலமைச்சர் திரு. மு.கருணாநிதி சிறீலங்கா பற்றி அண்மையில் ஓங்கிக் கூறியது சற்றும் பொருத்தமில்லாதது; ஏற்கப்பட முடியாதது. (ஒரு வேளை தமிழர்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்படாத நிலைமை ஏற்பட்டால்) செக்கோஸ்லாவகியா மாதிரியைப் பின்பற்றி நாட்டைப் பிரிவினை செய்ய சிறீலங்கா

படிப்பகம்

www.padippakam.com



அரசு ஒத்துக் கொள்ள வேண்டும் என்று அவர் கருத்துக் கூறியுள்ளார். இத்தீர்வு, சரியாகச் சொன்னால் மிகவும் குழப்பமானது; அதன் தவறான தன்மையைச் சுட்டினால் மிகமிகப் பொறுப்பற்றது. எப்படிப்பட்ட திட்ட வட்டமான ''கூடுதல் உரிமைகளை'' அவர் கருத்தில் கொண்டுள்ளார் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லாமல் அவர் வெளியிட்டுள்ள இக்கருத்து கண்டனத்துக்குரியது. இது அவருடைய கருத்தில் உள்ள குறைந்த பட்சக் குறைபாடு. இதில் மிகவும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய செய்தி என்ன? கொஞ்சங் கூட மறைமுகக் கூற்றாகக் கூறாமல் இத் தீவக நாட்டை இன அடிப்படையில் பிரித்துவிடுங்கள் என்று அவர் பரிந்துரைப்பது தான். இது, இந்திய அரசு 1980களின் மத்திய காலத்திலிருந்து மேற்கொண்டுள்ள ஒன்றுபட்ட சிறீலங்காவைப் பேணுவது என்கிற கோட்பாட்டுக்கு நேர் முரணானது.....''

''சிறீலங்காவின் இறையாண்மை'' என்றால் - சிங்களரின் ஆதிக்க ஆட்சி தான் இருக்கும்; அந்த ஆதிக்கத்தின் கீழ் தமிழர்கள் அடிமைகளாக வாழ்ந்தே தீர வேண்டும் என்பது தானே இதன் பொருள்.

இந்தியாவில் 2000 ஆண்டாகப் பார்ப்பான் பெற்றுள்ள சமூக, மத, அரசியல் ஆதிக்கம் இன்றளவும் குலைக்கப்படாமல் இருக்கிறது. இந்தியப் பார்ப்பான் - ஒரிசா இந்தியனான சிங்களவன், ஈழத் தாயகத் தமிழன் பேரில் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்று அன்றும் இன்றும் நினைப்பது இதனால்தான்,

பார்ப்பானின் கூட்டாளியான பனியா நடத்தும் 'தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்', *6-6-2000* இல் எழுதிய தலையங்கம் ''KARUNANIDHI'S **Non-Solution:** Eelam by another name can't be the cause of any NDA ally''

''கருணாநிதியின் பொருத்தமற்ற தீர்வு: ஈழ விடுதலையை இன்னொரு பெயரில் கூறுவது தேசிய மக்கள் நாயக முன்னணியிலுள்ள எந்த ஓர் உறுப்புக் கட்சியின் வேலையும் ஆகாது.''

தொடர்ந்து, 'தி இந்து' ஏடு எழுதுகிறது, *14-6-2000* அன்றைய தலையங்கத்தில்:

**CLEARING THE AIR** அய்யுறவு நீக்கம்''

''சிறீலங்காவின் ஒன்றுபட்ட மற்றும் ஒருங்கிணைந்த எல்லை பற்றிய கருத்துக் குழப்பம் நீங்கிட ஜஸ்வந்த் சிங்கின் பயணம் பயன்பட்டது.....''

இந்து, தன் கருத்தை, இதே தலையங்கத்தில், மேலும் இப்படி முன் வைக்கிறது: ''சிறீலங்கா அரசமைப்புச் சட்டத்தின் ஒருறுப்புத் தன்மை சிறுபான்மை இன மக்களுக்கு மிகப் பெரிய மன உறுத்தல் அளிப்பதாக இருந்துள்ளது. எனவே எல்லா வகுப்பினர்க்கும் கல்வி, வேலை பெறும் உரிமை உத்தரவாதம் செய்யப்பட வேண்டும்; மத்தியக் கூட்டாட்சிக்கான மத்திய அரசு அதிகாரங்களின் பட்டியல், மத்திய - மாகாண அரசுகளுக்கான பொது அதிகாரப் பட்டியல் போன்ற கூறுகளும் சட்டத்தில் இடம் பெறச் செய்ய வேண்டும்.......''

ஈழத் தமிழர்க்குத் தனிநாடு தரக்கூடாது. ஆனால் இன்னின்ன ''கூடுதல் உரிமைகளை'' அவர்களுக்குத் தரலாம் என்று குறிப்பிட்டு, ஈழத் தமிழர்க்குப் பரிந்து பேசுவது போல் 'தி இந்து' நடிக்கிறது.

இதில் அடங்கியிருப்பதும், சிறீலங்காவின் இறையாண்மை சிதறாமல் காக்கப்பட வேண்டும் என்கிற ஆரியப் பார்ப்பன ஆதிக்க எண்ணம்தான்.

*14-6-2000* அன்று, 'THE NEW INDIAN EXPRESS' எழுதியுள்ளது.

**''APPREHENSIONS ALLAYED: Now NDA must face the Challenge within on Sri Lanka.''**

''அச்சம் அகற்றப்பட்டுவிட்டது: சிறீலங்கா பற்றி தேசிய மக்கள் நாய்க முன்னணியினர் தங்கள் முன்னுள்ள அறைகூவலை அவர்களே எதிர்கொள்ள வேண்டும்.''

ஜஸ்வந்த் சிங் பயணம் ஏற்படுத்திய விளைவு பற்றிய எக்ஸ்பிரஸின் கருத்து இது.

'THE HINDU' *9-6-2000* தலையங்கத்தில்

**'AN ANNIHILATIONIST STRATEGY** மனிதக் கொலைப் போர்த் தந்திரம்'

என்ற தலைப்பிட்டு, இலங்கை அமைச்சர் சி.வி. குணரத்னா கொல்லப்பட்டதற்குக் கண்டனம் தெரிவித்து 'தி இந்து' மேற்கண்ட தலைப்பில் ஒரு தலையங்கம் எழுதியுள்ளது.

இவை மட்டுமா?

தமிழ்க் கொலைக் களமாக விளங்குகிற ''சன் டி.வி'' என்கிற தொ(ல்)லைக் காட்சி நிறுவனத்தின் மதிப்பு மிக்க அரசியல் விமர்சக விருந்தாளியும், பா.ச.க அரசு வரித்துக் கொண்ட நாடாளுமன்ற மேலவை உறுப்பினரும், தமிழ் - தமிழரின் நிரந்தர எதிரியுமான சோ என்கிற அகம்பாவியின் 'துக்ளக்' ஏடு, 21-6-2000 இதழில், கலைஞரின்

படிப்பகம்

www.padippakam.com



3-6-2000ஆம் நாளைய பேச்சுப் பற்றி, ''கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை'' எனும் தலையங்கக் கட்டுரையில் குத்தல், கேலி, கிண்டல் எல்லாம் கலந்து திமிராக எழுதியுள்ளது.

இவ்வளவும் ஏன்? அதுவும் இவ்வளவும் பார்ப்பனர்களால் கூறப்படுவது ஏன்?

''இந்தியாவின் இறையாண்மை'' என்பது காப்பாற்றப்பட, பார்ப்பன - பனியா - மார்வாரி ஆதிக்கத்துக்கு இந்தியாவிலுள்ள தமிழ்த் தேசிய இனம் உட்பட எல்லாத் தேசிய இனங்களும் பெட்டிப் பாம்பாக அடங்கிக் கிடக்க வேண்டும். இன்று வரையில் இந்த ஆதிக்கத்தில் திளைப்பவர்கள் பார்ப்பனர்கள்.

இதே போன்று, வட இந்திய ஒரிசா இனவழியினரான - ஈழத்துக்கு வந்தேறிகளான சிங்களர்களின் ஆதிக்கத்துக்கு, ஈழம் முழுவதையும் அன்று ஆண்ட தாய்த் தமிழீழ மக்கள் என்றுமே அங்கிக் கிடக்க வேண்டும் என்பது இவர்களின் உள்ளக் கிடக்கை. இவர்கள் கூறும் 'சிறீலங்காவின் இறையாண்மை'' என்பதன் பொருள் இதுதான்.

தமிழகத் தமிழர் இது பற்றிக் கவலையோடு சிந்திக்க வேண்டும். இந்த எண்ணத்தைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டிருக்கிற இந்திய அரசியல் கட்சித் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்திய அரசு உயர் அதிகார வர்க்கத்தினர், இந்தியாவிலுள்ள பன்மொழிகளில் வரும் நாளேடுகளின் அதிபர்கள் — ஆசிரியர்கள் முதலானவர்களுக்கு இதுபற்றிய உண்மை நிலையைத் தமிழகத் தமிழர்கள்தாம் புரிய வைக்க வேண்டும்.

தமிழ்நாடு - தமிழர்கள் - திராவிட இயக்கம் என்ற சொற்களைக் கேட்டவுடன், ''இவர்கள் பார்ப்பன எதிர்ப்பாளர்கள் - இந்தி எதிர்ப்பாளர்கள் - வட இந்திய எதிர்ப்பாளர்கள் - பிரிவினை வாதிகள்' என்று இன்னமும் எண்ணிக் கொண்டிருப்பவர்களே, மேலேகண்டவர்களில் பெரும்பாலோர்.

1962க்குப் பிறகு எல்லாத் திராவிட அமைப்புகளும் நாட்டுப் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டன. அதன்பிறகும், வேண்டும் போது, அந்தக் கோலைக் கொண்டே திராவிடக் கட்சிகளை இவர்கள் அடிக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. உண்மையில் பிரிவினை கோரும் சில நல்ல குழுவினரின் செயல்பாடுகளையும் இது முடக்கி விடுகிறது.

இலங்கைத் தமிழர் - ஈழத் தமிழர் என்று வரும் போதெல்லாம், 'இலங்கைக்குப் பிழைக்கப் போனவன் தமிழன்; பிழைக்கப் போனவன் இலங்கையைத் துண்டாடுவதா' என்று பலரும் பேசக் காண்கிறோம். இது, அங்கே பிழைக்கப் போன இந்திய வழித் தமிழனுக்கும் எதிரானது; ஈழத் தாய்த் தமிழ் மண்ணின் பாரம்பரியச் சொந்தத் தமிழனுக்கும் எதிரானது.

'ஊர் வாயை மூட உலை மூடி உண்டா?' என்பதை நாம் நினைவில் கொண்டு, உள் நோக்கத்தோடும், அறியாமையாலும், வெறுப்பினாலும், பொறுப்பில்லாமலும் ஈழச் சிக்கல் பற்றிய உண்மையை அறியாமல் இழித்தும் பழித்தும் இப்படி இந்தியாவில் பேசுவோருக்கு நாம் தான் அறிவு கொளுத்த வேண்டும்.

''தமிழீழ விடுதலை ஏன்?'' என்பது பற்றித் தமிழ் மொழியில் கோடிக் கணக்கிலும்; இந்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், பஞ்சாபி, அசாமி, பங்களா, ஆங்கிலம் முதலான மொழிகளில் இலட்சக் கணக்கிலும் அறிக்கைகளை அச்சிட்டு, அவற்றைச் சுமந்து சென்று பரப்பி ஓர் அய்ந்தாண்டுகளில் அனைத்திந்திய அளவில் சரியான ஒரு புரிதலைத் தமிழகத் தமிழராகிய நாம் உண்டாக்க வேண்டும்.

தமிழ்மொழி பேசாத - பிற மொழியாளரான இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் 702 (760-58) பேர் உள்ளனர். 1984க்குப் பிறகு, மாறி மாறி, 5 தடவைகளில் 5 புதிய குழுவினர் இப்படி உறுப்பினர்களாக வந்துள்ளனர். இவர்களில் ஓர் அய்ம்பது பெயர்களுக்காவது ஈழச் சிக்கல் பற்றிப் புரிய வைத்து, நாடாளுமன்ற அவைகளிலும் வெளியிலும் இவர்கள் ஈழவிடுதலைக்கு ஆதரவாகப் பேசும்படி நாம் செய்தோமா என்பதைச் சிந்திக்க வேண்டும். திராவிடக் கட்சியினரான உறுப்பினர்களிடமாவது ஒருமித்த கருத்தை உருவாக்கி எல்லா இடங்களிலும் ஒரே குரலில் இவர்களைப் பேச வைத்துள்ளோமா என்பதையும் நன்கு சிந்திக்க வேண்டும். இனி 3 அல்லது 5 ஆண்டுகளிலேனும் இவ்வளவையும் தமிழகத் தமிழராகிய நாம் சாதித்துக் காட்ட வேண்டும். இதில் உரிய பங்கை ஆற்றிட மா.பெ.பொ.க என்றும் காத்திருக்கிறது.

தமிழகத் தமிழரும், உலகத் தமிழரும், ஈழத் தமிழரும் பாலஸ்தீன விடுதலை - பங்களாதேஷ் விடுதலை முதலானவற்றில் இந்தியா மேற்கொண்ட நிலையை - இயந்திர கதியில், ஈழ விடுதலையுடன் ஒப்பிட்டுப் பார்த்து ஏமாறக் கூடாது.

படிப்பகம்

www.padippakam.com



பாலஸ்தீன விடுதலை *1948* முதல் அய்.நா. வின் கவனத்தில் உள்ளது; இரண்டு தடவைகளில் அய்.நா.தீர்மானம் மூலம் ஆதரவைப் பெற்றது. அதன் பிறகு *50* ஆண்டுகள் போராடியும் இன்றுவரை தனக்குரிய இடப் பரப்பில் *43%* மட்டுமே பெற்றிருப்பது. பாலஸ்தீன விடுதலை முயற்சி அரபு நடுகளின், உலக இஸ்லாமிய நாடுகள் அமைப்பின் (OIC) பெரும் பண உதவியையும், பணக் கடனுதவியையும், ஆதரிப்பையும் பெரிய அளவில் பெற்றது. உலக இஸ்லாமிய நாடுகளின் - அரபு நாடுகளின் நல்லெண்ணத்தைப் பெறுவதற்காக மட்டுமே இதற்கு இந்திய அரசின் ஆதரவு. இதற்கே பல தடவைகள் அராஃபத் இந்திய அரசைத் தொங்குகிறார்.

நெய்க்குத் தொன்னை ஆதாரம்; தொன்னைக்கு நெய் ஆதாரம். அது போல இஸ்ரேல் நாடு அமையவும் வளரவும் அமெரிக்க நாடு ஆதரவானது. அய்.நாவை ஆட்டிப் படைக்கும் அமெரிக்காவில் இன்று செல்வாக்குடன் இருக்கிற செல்வவான்கள் பலர் இஸ்ரேலிய யூதர்கள். அமெரிக்காவின் நடுவப்பணி (தலையீடு) இதனால் இஸ்ரேலுக்கே உண்மையில் சார்பானது. எனவேதான் இன்றளவும் இது இழுபறியாகவே உள்ளது.

எண்ணெய் வளம் கொழிக்கும் அரபு நாடுகளில் ஆதிக்கம் செலுத்துவது அமெரிக்காவுக்கு மிகமிக முதன்மை. எனவே இஸ்லாமிய நாடுகளைப் போல் பாலஸ்தீன விடுதலைக்கு உதவுவதாக அமெரிக்கா நடிக்கிறது. எல்லாமே சுரண்டலைக் குறிவைத்த ஒரு நாடகம்.

பங்களா தேஷ் நிலை என்ன? இது பாக்கிஸ்தானின் ஒரு பகுதியாக இருந்தது. தலைநகரிலிருந்து *2000* மைல் கிழக்கே கிடந்தது.

பாகிஸ்தான், இந்திய அரசின் பார்வையில், இந்தியாவின் முக்கிய எதிரி. 'தனக்கு இரண்டு கண்களும் போனாலும் எதிரிக்கு ஒரு கண் போனால் போதும்', என்பதுதான் இதில் இந்திய அரசின் நிலைப்பாடு; இந்தியாவின் தந்திரம்.

ஈழ விடுதலைக்குக் **களத்தில் நிற்கிற** ஒரே படை தம்பி பிரபாகரனின் **வீரம்மிக்க தலைமை**யிலான புலிப்படை. இன்று வரையில் 12000 வீரர்களை இப்படை இழந்துள்ளது. இலங்கை அரசின் வான் - கடல் - தரைப்படைகளை நேருக்கு நேர் மோதி அழிக்கவல்ல திறமையைப் பெற்றது புலிப்படை. ஆனால் இவர்களுக்குப் போதிய ஆயுத வசதி எங்கே? போதிய ஆயுதங்கள் வாங்க, போராளிகள் உயிர் வாழ, போராளிகளுக்குப் பயிற்சி கொடுக்க, தத்தளிக்கும் தமிழ் மக்களுக்கு உதவ வேண்டப்படுகிற, ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் நிதி எங்கே?

இன்றோ, நாளையோ, இரண்டொருஆண்டுகளிலோ, அல்லது யாழ்ப்பாணத்தில் புலிக் கொடியை நாட்டிய உடனோ, ஈழம் விடுதலையாகி விட்டதாக எப்படி ஆகும்? ஆகாது.

இதுபற்றியெல்லாம், ஆழ்ந்து சிந்தித்து இடையறாது எழுதி வருபவர் தமிழீழ அறிஞர் - உலகை வலம் வந்தவர் — ஈழப் போராட்டத்தில் சிறைப்பட்டுத் தப்பிப் பிழைத்தவர் - கட்டடவியல் பொறிஞர் தோழர் ச.அ. டேவிட் ஆவார்.

அன்னார் கி.பி 2000 சனவரி முதற் கொண்டு "**Periyar Era**" (*பெரியார் ஈரா = பெரியார் ஊழி*) ஏட்டில், ஈழ விடுதலை வந்து சேர ஈழத் தமிழரும் உலகத் தமிழரும் செய்ய வேண்டியவை யாவை என்பதை விளக்கிப் பல அரிய கட்டுரைகளை எழுதியுள்ளார். "Periyar Era" *2000* மார்ச்சு இதழில், அவர் "கி.பி 2010 இல் ஈழத் தமிழர் நிலை" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை, தமிழறிஞர் க.முகிலன் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டு, இந்தச் சூலை மாதச் 'சிந்தனையாளன்' இதழில் (பக்கம் *16* முதல் *26* முடிய) வெளியிடப்பட்டுள்ளது. தமிழர் ஒவ்வொருவரும் இதை ஊன்றிப் படித்திட வேண்டும்; கற்றிட வேண்டும்.

1) உலக நாடுகளில் உள்ள நல்ல அளவு ஊதியமும், குறைந்த அளவு ஊதியமும் பெறுகிற ஈழத் தமிழர் ஒவ்வொருவரும், அவரவராகவே முன்வந்து, ஓர் ஆண்டில் 800 கோடி ரூபாய் அளவில் சேர்த்து, வங்கியில் வைத்து, அதன் மூலம் கிடைக்கும் வருமானம் விடுதலைப் புலிகளின் போராட்டத்துக்குப் பயன்பட வழிகாண வேண்டும்.

2) தமிழீழ விடுதலையில் பற்றுள்ள தலைசிறந்த அறிஞர்கள் அய்வர் கொண்ட ஒரு குழுவை உருவாக்கி, அரசியல் கோட்பாடுகளை உருவாக்குதல், உலகத் தலைவர்களைச் சந்தித்தல், பிரிட்டன், இந்தியா, ஆஸ்திரேலியா, சப்பான் முதலான நாடுகளில் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே ஈழ விடுதலைக்கு ஆதரவு திரட்டும் பணியை மேற்கொள்ளல் முதலானவற்றைச் செய்ய வேண்டும்

இவ்வளவும் செய்யப்பட்டால், கி.பி. 2010 இல் தமிழீழம் நிறுவப்படும் என்பது அவருடைய கணிப்பு.

இது இன்னமும் தள்ளிப் போகலாம். ஏன்?

படிப்பகம்

www.padippakam.com



1) விடுதலைப் புலிகள் இரண்டு வகைகளில் ஆயுதங்கள் பெற முடியும். ஒன்று: இலங்கை இராணுவக் கிடங்குகளையும் முகாம்களையும் தாக்கி எஞ்சிய ஆயுதங்களைக் கைப் பற்றுவது. இரண்டு: ஆயுதச் சந்தைகளில் அதிக விலை கொடுத்து ஆயுதங்களை வாங்குவது.

ஆயுதங்களை வாங்குவதற்கு மட்டும் ஆண்டொன்றுக்கு ஓராயிரம் கோடி ரூபாயை விடுதலைப் புலிகளுக்கு ஈழத் தமிழரும் உலகத் தமிழரும் தமிழகத் தமிழரும் வரி போன்று நன்கொடையாகத் திரட்டித் தர வேண்டும்;

2) புலிப்படை சில ஆயிரம் பேர்களான இளம் போத்துகளை மட்டும் கொண்டதாக இருப்பது போதாது. 18 வயது நிரம்பிய, 45 வயதுக்கு உட்பட்ட ஈழத் தமிழ் ஆண் பெண் அனைவர்க்கும் - ஓர் இலக்கம் மக்களுக்கு, கட்டாய இராணுவப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். 'புலிப்படை பதுங்கிப் பாய்ந்து தாக்கும் படையாக' மட்டும் இருப்பதை மாற்றி, 'ஈழத் தமிழ் மக்கள் படையாக' உருவாக்கப்பட வேண்டும்.

3) வடகிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் இஸ்லாமியர்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு தர வேண்டும் என்று அண்மையில் விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளது மிகவும் பாராட்டுக்குரியது. இனி இவர்களை இணைத்திட எல்லாம் செய்ய வேண்டும்.

4) ஈழத் தமிழ்ப் பொதுமக்களும், ஈழத் தமிழர் தேர்தல் வேட்டைக் கட்சிகளும், தோட்டத் தொழிலாளத் தமிழர் கட்சிகளும் வரப் போகிற சிறீலங்கா நாடாளுமன்றத் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்றும், மாகாணக் கவுன்சில் அமைப்பு என்கிற அரசின் திட்டத்தை ஏற்கக் கூடாது என்றும், ஈழ விடுதலைக்கு ஆதரவு தரவேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விட வேண்டும். அவர்கள் அனைவரும் இனியேனும் இவற்றை ஏற்க முன்வரவேண்டும். இது இன்று கைகூடாவிட்டாலும், நாளை - அதாவது அடுத்து வரும் இலங்கை நாடாளுமன்றத் தேர்தலின் போதேனும் கைகூடும்; கைகூட வேண்டும்.

இவை நம் கருத்துகள்.

இவற்றை உருவாக்கிக் கட்டமைப்புச் செய்யவே 5 ஆண்டுகள் ஆகலாம். இவை கட்டமைக்கப்பட்டு, 5 ஆண்டுகள் முழுவீச்சில் போராடினால், அப்போதுதான், அன்றுதான், ''சுதந்தர சமதர்மத் தமிழீழம்'' பிறக்கும்.

இலங்கை மக்களையும் வளத்தையும் எதிர்காலத்தையும் அடகு வைத்தாவது சிங்களரின் ஆதிக்கத்தை நிலைக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பதில் சிங்களர் அமைப்புகள், கட்சிகள் எல்லாம் ஒரே தன்மையில் உள்ளன; ஒரே போக்கில் செயல்படுகின்றன. மக்கள் எண்ணிக்கையிலும் இவர்கள் அதிகம் பேர் ஆவர்.

இன்று உலக நாடுகளில் எதிலும் பௌத்தரிடையே புத்தரின் அறவழிக் கொள்கைகள் இல்லை. எல்லா உலக நாடுகளிலும் உள்ளது ''சடங்கு வழிப்பட்ட பௌத்தமே.'' இதைப் பின்பற்றுவோரும் காப்போரும் மக்களை விலங்குகள் நிலைக்கு, புத்தரின் பேரால், கொண்டு செல்வோரே. இதில் சிங்கள பௌத்தர்கள் தனித்தன்மை வாய்ந்த இன வெறியர்கள். இவர்கள் ஆட்டுவிக்கிறபடியெல்லாம் ஆடுவோர் தாம் இன்றைய ஆளும் வர்க்க சிங்களர்களான கண்டி சிங்களர்களும், கரையோரச் சிங்களர்களும் ஆவர். கம்யூனிசம் பேசுவதனாலேயே பௌத்த சிங்களர்களான - ஜனதா விமுக்தி பெரமுனக் கட்சியைச் சார்ந்த 30 ஆயிரம் இளைஞர்களை 1987 - 1989இல் ஜெயவர்த்தனேவும், பிரமதாசாவும் கொன்று குவித்திடத் தூண்டுகோலாக அமைந்தவர்கள் இக்குணக் கேடர்களான பௌத்த குருமார்களே.

சந்திரிகாவும், இரனில் விக்ரம சிங்காவும் கூடிப் பேசித் தமிழ் மாநிலத்துக்கு அதிக அதிகாரம் தரலாமா என்று இப்போது கருத்து வெளியிடுவதைக் கூட, ஒரு கண நேரமும் தாங்கிக் கொள்ளாத கேடர்கள் இந்த பௌத்த மத விலங்குகள்.

இவ்வளவும், முதலில் ஈழத்திலுள்ள எல்லாத் தரப்புத் தமிழர்களுக்கும் புரிய வேண்டும்; விடுதலைப் புலிகளுக்கும் இதுபுரிய வேண்டும்; விடுதலைப் புலிகளின் ஈகம், உறுதி, வீரம் இவற்றை வியந்து பாராட்டி இவர்களுக்கு ஆதரவு அளிக்கிற ஒவ்வொருவருக்கும் இது புரிய வேண்டும்.

இவ்வளவு சிக்கலும் ஆழமும் அகலமும் கொண்டது தமிழ் ஈழ விடுதலை.

கி.பி. 2010 இல் வென்றெடுத்தாலும், அதன் பின்னர் வென்றெடுத்தாலும், ''ஈழச் சிக்கலுக்குத் தீர்வு ஈழ விடுதலையே!'' - ''தனிச் சுதந்தர, சோசலிசத் தமிழீழமே!'' இது மட்டும் உறுதி. இதை நோக்கி நாம் ஒவ்வொருவரும் உறுதியுடன் செயல்படுவோம்! வெல்வோம்!!

1.7.2000 வே.ஆனைமுத்து

படிப்பகம்

www.padippakam.com



# எல்லோரும் படியுங்கள்!
## என்னைப் பிடித்த பைத்தியம் உங்களையும் பற்ற வேண்டும்

வே.ஆனைமுத்து

நான் 15-1-1951 முதல் இந்திய அரசமைப்புச் சட்டத்தைப் பயின்றும் கற்றும் ஆய்ந்தும் வருகிறேன். 1962 முதல் பத்துக்கு மேற்பட்ட நாடுகளின் அரசமைப்புச் சட்டங்களை அடக்கத்துடன் பயின்று வருகிறேன். இந்த வெளிச்சத்தில், ''இந்திய அரசமைப்புச் சட்டம் போல் வெகுமக்களுக்கு எதிரான சட்டம் எதுவும் இல்லை'' என்பதை உணர்ந்தேன். என் உணர்வுகளை 1974 இல் கட்டுரைகளாக வடித்தேன்; 1980 இல் ஒரு நூலாக வெளியிட்டேன்.

இப்பணியினை மேற்கொண்ட போது, ஈழத் தமிழர்களுக்கான தேச வளமைச் சட்டத்தின் சுருக்கத்தைப் பயின்று பயன்படுத்தினேன். சிறீலங்காஅரசமைப்புச் சட்டம் 22-5-1972 இல் நடப்புக்கு வந்தது. அதனை 10-3-1975 முதல் படித்து வருகிறேன். தேச வளமைச் சட்டத்தின் மூலத்தின் ஒளிப்படி ஒன்று 12-4-2000 அன்று எனக்குக கிடைத்தது; என்னிடம் உள்ளது உலகில் உள்ள இதன் மூன்றாவது படி எனக் கருதுகிறேன். இதையும் ஆழ்ந்து படிப்பேன். இப்படிச் சட்டங்களைப் பயிலுவது என்னைப் பிடித்த பைத்தியம்.

இன்றுள்ள சிறீலங்கா அரசமைப்புச் சட்டம் ஈழத் தமிழர்களுக்கு எந்த உரிமையையும் தராதது என்பதை எல்லாத் தமிழரும் உணருங்கள்.

சிறீலங்கா அரசமைப்புச் சட்டத்தின் இன்றியமையாத பிரிவுகளைத் தமிழாக்கம் செய்து கீழே தந்துள்ளேன்.

படியுங்கள்; சிந்தியுங்கள்; அரசியல் கொள்கைகளை அறிவதில் திளையுங்கள். எல்லோரும் இளைஞர்களை அரசியல் படுத்துங்கள். நீங்களும் அரசியல் சட்டப் பைத்தியங்கள் ஆகுங்கள்.
'அரசியல் விடுதலை என்றால் என்ன?'
என்பது அப்போதுதான் புரியும்.

## சிறீலங்கா அரசமைப்புச் சட்டம் 1972

பகுதி I - மக்கள், அரசு, இறையாண்மை

பிரிவு

1. சிறீலங்கா குடி அரசு
2. ஒற்றை அல்லது ஒருறுப்பு அரசு
3. மக்களின் இறையாண்மை
4. தேசியச் சட்ட மன்றம்
5. அரசு அதிகாரத்தைச் செலுத்தும் உயர் அமைப்பு

பகுதி II பௌத்தம்

6. பௌத்தம்

பகுதி III - மொழி

ஆட்சி மொழி

7. சிங்களமே ஆட்சி மொழி
8. தமிழ் மொழியின் பயன்பாடு
9. சட்ட வடிவாக்க மொழி
10. சிங்கள மொழியில் வெளியிடப் பட்டவுடன் ஆங்கில வடிவம் அகற்றப் பெறல்

நீதிமன்றங்களின் மொழி

11. நீதிமன்றங்களின் பயன்பாட்டு மொழி

சிறீலங்கா அரசமைப்புச் சட்டத்தில் மொத்தம் உள்ள பகுதிகள் 16; இவற்றில் அடங்கியுள்ள பிரிவுகள் அல்லது விதிகள் 134; சிறீலங்கா அரசமைப்புச் சட்டம் 22-5-1972 நிறைவேற்றப் பட்டு நடப்புக்கு வந்தது.

பகுதி I -மக்கள், அரசு, இறையாண்மை

பிரிவு

1. சிறீலங்கா (சிலோன்) விடுதலை பெற்ற, இறையாண்மையுடைய, சுதந்தரமான ஒரு குடி அரசு ஆகும்.

2. சிறீலங்கா குடி அரசு ஒற்றை உறுப்பு அல்லது ஒருறுப்பு அரசாகும்.

படிப்பகம்

www.padippakam.com



3. சிறீலங்கா குடி அரசின் இறையாண்மை மக்களிடம் உள்ளது; இந்த இறையாண்மை பிரிக்க முடியாதது.

4. மக்களின் இறையாண்மை என்பது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அடங்கிய தேசியச் சட்டமன்றம் மூலம் செயல்படுத்தப் படும்.

5. சிறீலங்கா குடி அரசின் அதிகாரத்தைச் செலுத் தும் உச்ச அதிகாரம் படைத்த கருவியாக (அமைப்பாக) தேசியச் சட்டமன்றம் விளங்கும்.

(அ) மக்களுடைய சட்டம் இயற்றும் அதிகாரம்;

(ஆ) குடி அரசுத் தலைவர், அமைச்சரவை மற் றும் சிறீலங்காவின் பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்தின் பேரிலான மக்களின் நிர்வாக அதி காரம்; மற்றும்

(இ) சட்டத்தால் நிறுவப்பட்ட நீதிமன்றங்கள், மற்ற நிறுவனங்கள் மூலம் மக்கள் செலுத்தும் நீதி அதிகாரம் முதலானவை தேசியச் சட்டமன்ற அதிகாரத்துக்கு உட்பட்டவை. இதற்கு விதி விலக்காக உள்ள அதிகாரங்களையும் சிறப்பு உரிமைகளையும் மக்களுக்காக, நேரடியாக, சட் டப்படி, தேசியச் சட்ட மன்றமே கொண்டு செயல்படும்.

பிரிவு 6

சிறீலங்கா குடி அரசு பௌத்தத்துக்குத் தலைமையான இடத்தை அளிப்பதாகும்; அதற்கு ஏற்ப பௌத்தத்தைப் பாதுகாப்பதும் வளர்த்தெடுப்பதும் அரசின் கடமை ஆகும். அதே சமயத்தில் எல்லா மதங்களும் இச்சட்டத் தில் பிரிவு 18(1) (ஈ) பிரிவில் கண்ட உரிமைக ளைப் பெற உரிமை உள்ளவை ஆகும்.

பிரிவு 7

சிறீலங்கா அரசின் ஆட்சிமொழி சிங்களம் ஆகும். இது 1956 ஆம் ஆண்டைய ஆட்சி மொழிச்சட்ட எண் 33 இல் உள்ளபடியானது.

பிரிவு 8(1) தமிழ்மொழியின் பயன்பாடு என்பது, 1958 ஆம் ஆண்டைய தமிழ்மொழிக்கான தனிப் பாதுகாப்புச் சட்ட எண் 28இன் படி நடைபெறுவ தாகும்.

பிரிவு 8(2)

1958 ஆம் ஆண்டைய தமிழ் மொழிக்கான தனிப் பாதுகாப்புச் சட்ட எண் 28இன் படி இந்தச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன் நடப்பி லிருந்து தமிழின் பயன்பாட்டுக்காகச் செய்யப் படுகிற எந்த நெறி முறையும், இந்த அரசியல் அமைப்புச் சட்டப்படிக்கு உள்ள ஏற்பாடு என்று எந்தத் தன்மையிலும் பொருள் கொள்ளப்படக் கூடாது. ஆனால் இந்தச் சட்டத்தின் விதி 12க்கு உட்பட்ட அளவில், ஏற்கெனவே நடப்பிலிருந்த சட்டம் என்கிற தன்மையில், கீழ் நிலையை ஏற்று நடக்க வேண்டிய ஒரு சட்ட ஏற்பாடே இதுவாகும்.

பிரிவு 9(1) எல்லாச் சட்டங்களும் சிங்கள மொழியிலேயே நிறைவேற்றப்படும்.

9(2) அப்படி நிறைவேற்றப்படும் ஒவ் வொரு சட்டமும் தமிழில் மொழி பெயர்த்து வெளியிடப்படும்.

பிரிவு 11(1) சட்டப்படி நீதி வழங்குவதற்கென உள்ள நீதிமன்றங்கள், தீர்ப்பு ஆயங்கள் மற்றும் உள்ள நிறுவனங்கள்; தொழில் தகராறு சட்டம், சமரசப் பேச்சுக்கான பேரவைகளுக்கான 1958 ஆம் ஆண்டைய சட்ட எண்10 இன்படி நிறுவப்ப டும் மன்றங்கள் இவற்றில் சிறீலங்கா முழுவதி லும் சிங்களமே நீதிமன்ற மொழியாக இருக்கும். அதற்கு ஏற்ப நீதிமன்ற ஆவணங்கள், வாதீடுகள், நடவடிக்கைகள், தீர்ப்புகள், ஆணைகள் மற்றும் நீதித் தொடர்பானதும் நிர்வாகத் தொடர்பானதும் ஆன சட்டங்கள் அனைத்தும் சிங்கள மொழியி லேயே இருக்கும்.

பிரிவு 18(1) i

சிறீலங்கா குடிமகன் நாட்டின் எப்பகுதிக் கும் செல்லவும் எங்கும் குடி அமரவும் உரிமை உடையவன் ஆவான்.

பிரிவு 44: தேசியச் சட்ட மன்றமே சட்டம் இயற்றுவதற்கான உச்ச அதிகாரம் படைத்தது. அது பெற்றுள்ள அதிகாரங்களாவன:

(அ) அரசியல் சட்டத்தை முழுமையாக இரத்துச் செய்யவோ அல்லது திருத்தவோ சட்டம் இயற்றுதல்; அல்லது அரசியல் சட்டத்தின் ஏதாவது ஒரு பகுதியை இரத்துச் செய் யவோ திருத்தவோ சட்டம் இயற்றுதல்;

(ஆ) இந்த அரசியல் சட்டத்துக்குப் பதிலியாக புதியதாக ஓர் அரசியல் சட்டத்தை இயற்று தல்;

ஆனால் இந்த அதிகாரத்தைக் கொண்டு,

(இ) இந்தச் சட்டம் முழுவதுமாகநடப்பில் இருப்பதையோ, இந்தச் சட்டத்தின் ஒரு பகுதி நடப்பில் இருப்பதையோ நிறுத்தி வைக்க இயலாது; மேலும்.

(ஈ) முழுவதுமாக புதியதோர் அரசியல் சட் டத்தை இயற்றி நிறைவேற்றாமல், இந்த அரசியல் சட்டத்தை முழுவதுமாக இரத்துச் செய்ய முடியாது.

**இந்தச் சட்டம் இருக்கும் வரை ஈழத் தமிழர்க்கு ஏது விடுதலை?**

படிப்பகம்

www.padippakam.com



# ஈழத்தமிழர் இன்னல் தீர முதல்வர் கலைஞர் காட்டும் வழி

''பனகல் பூங்காவில் நான் பேசிய பிறந்தநாள் பேச்சை முழுமையாகப் படித்திருந்தால் உண்மை தெரிந்திருக்கும். எனது முழுப்பேச்சையும் படித்துப் பார்க்காமல் விமர்சிப்பது தவறு; இலங்கையின் இனப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று பிரதமர் வெளியிட்டுள்ள கருத்திற்கு மேலும் வலுச் சேர்ப்பதே எனது கருத்தாகும்'' என்று முதல்வர் கலைஞர் அவர்கள் இலங்கைப் பிரச்சினை குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக முதலமைச்சர் கலைஞர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

சொகுசான குளுகுளு அறையிலே உட்கார்ந்து கொண்டு கண்ணாடி பரப்பிய மேஜையில் பூகோளப் படத்தை விரித்து வைத்துக் கொண்டு இலங்கையைத் துண்டாடக் கூடாது என்று பேசுவோர் நிலை வேறு; தரையில் உள்ள உண்மைகளைப் புரிந்து கொண்டு பேசுவோர் நிலை வேறு - என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப் படுகிறேன்.

எந்த நாட்டையும் பிரித்துக் கொடு என்று சொல்வதற்கு பிற நாட்டவருக்கு உரிமை யில்லை என்பதை நானும் உணர்ந்தவன்தான். ஆனால் இலங்கையில் நிலைமை என்ன?

## ஈழப்பகுதிவாழ் தமிழர்கள் இலங்கையின் பூர்வீகக் குடிகள்

ஈழப் பகுதியில் வாழ்கின்ற தமிழர்கள் கூலியாகச் சென்று குடி அமர்ந்தவர்கள் அல்ல. இலங்கையின் பூர்வீகக் குடிகள் அவர்கள் என்பதை மறந்து விடக் கூடாது. அவர்களுடைய உரிமைகள் கொஞ்சம் கொஞ்சமாக — ஆனால் முழுவதுமாகப் பறிக்கப்பட்டன.

சுதந்தரத்திற்குப் பிறகு பண்டாரநாயகா - செல்வநாயகம் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதை 'B-C ஒப்பந்தம்'' என்பார்கள். அந்த ஒப்பந்தம்



அமலாக்கப்படாமல் குப்பைக் கூடையில் தூக்கி எறியப்பட்டது. தமிழர்களுக்குத் தொழிற் கல்லூரிகளில் இடம் கிடைப்பதற்குத் தடைகள் விதிக்கப்பட்டன. 'Sinhala Only'' - சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி, பயிற்சி மொழி என்றாக்கப்பட்டது.

## தமிழர்களின் மொழி உரிமை கல்வி உரிமை பறிப்பு

மாணவர்கள் காலையில் பள்ளிக்கு வந்ததும் ''புத்தம் சரணம் கச்சாமி - தம்மம் சரணம் கச்சாமி'' என்று கட்டாயம் சொல்ல வேண்டுமென்று வலியுறுத்தப் பட்டார்கள். இதற்குத் தமிழ் மாணவர்களும், கிறித்தவ மதத்தைச் சேர்ந்த மாணவர்களும், முஸ்லிம் மாணவர்களும் எதிர்ப்புத் தெரிவித்தார்கள்.

எல்லா வேலை வாய்ப்புகளிலும் தமிழர்களுக்கு இடம் மறுக்கப்பட்டது. மொழி உரிமை இல்லை. கல்வி உரிமை இல்லை. வேலை வாய்ப்பில் உரிமை இல்லை. இறுதியாக அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமைக்கும் கட்டுப்பாடு - என்கிற நிலை ஏற்பட்ட பிறகு இலங்கைத் தமிழர்களின் நிலை தலைகீழாக மாறியது.

முதலில் தங்கள் உரிமையைப் பெறுவதற்காக காந்திய வழியில் அறப்போராட்ட முறைகளைத்தான் கையாண்டார்கள். ஆனால் இலங்கை அரசு மிருகத்தனமாக நடந்து கொண்டு தாங்க முடியாத அடக்குமுறைகளை ஏவிச் சித்திரவ

படிப்பகம்

www.padippakam.com



தைக் கூடங்களை உருவாக்கி அதில் அவர்களைக் கொடுமைப் படுத்தியதை இலங்கை அரசே மறுக்க முடியாது. அதற்குப் பிறகுதான் தங்களுடைய உரிமைகளைப் பெறுவதற்காக அவர்கள் வேறு வழியைத் தேர்ந்தெடுத்தார்கள் என்பது வரலாற்று உண்மை.

## உரிமைகளைத் தராமல் தற்காலிகத் தீர்வு காண்பதா?

உரிமைகளைக் கொடுக்காமல் 'தற்காலத் தீர்வு' காண்பதா? இப்போது அங்கே நடப்பது என்ன? அவர்களுக்கு எல்லா உரிமைகளையும் கொடுத்து அவர்களையும் சிங்கள மொழி பேசுவோருக்கு ஒப்பான பிரஜைகளாக நடத்தினால், பிரச்சினை தீரும் என்றால் அதற்கு யாரும் தடை சொல்ல மாட்டார்கள். நிச்சயம் நான் தடை சொல்ல மாட்டேன். ஆனால், உரிமைகளைக் கொடுக்காமல் 'தற்காலிகத் தீர்வு' காண்பது பிரச்சினையை ஒத்தி வைப்பது போன்றதாகும்.

உலகெங்கும் உரிமைக் குரல் மதிக்கப்படுகிறது. பல நூற்றாண்டுகளாகக் கிடப்பில் போடப்பட்டிருந்த ஸ்காட்லாந்திற்கும், வேல்ஸ்க்கும் உரிமைகள் கொடுத்து அங்கே அதிகாரத்தைப் பரவலாக்கி (Devolution செய்து) சட்ட சபைகளை உருவாக்கி இருக்கிறது பிரிட்டன். எனவே, உரிமைகள் மதித்துப் போற்றப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து.

இப்போது இலங்கை அரசு தன்னுடைய பிரஜைகளான தமிழர்களுக்கு என்னென்ன உரிமைகளை வழங்க இருக்கிறது? சிலர் குவாசி-பெடரல் (Quasi-Federal) என்கிறார்கள். சிலர் கான்-பெடரல் (Con-Federal) என்கிறார்கள் - இதுபற்றி இலங்கை அரசு தெளிவாகத் தனது நிலையைத் தெரிவிக்க வேண்டும்.

இதில் இலங்கை அரசும் அங்குள்ள எதிர்க் கட்சியும் பொறுப்பற்றிருப்பது போலவே அங்கே மூன்றாவது கட்சி ஒன்று இருக்கிறது. அதுதான் புத்த மதவாதிகள் ஆவார்கள். அரசியல் வாதிகள் எடுக்கின்ற முடிவுக்குக்கூட அந்த புத்த மதவாதிகள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். அதிபர் திரு. பண்டார நாயகா அவர்களைச் சுட்டுக் கொன்றது ஒரு புத்த சாமியார் என்பதை மறந்துவிடுவதற்கில்லை.

இலங்கை இராணுவத்தைப் பற்றி நம்மனைவருக்கும் தெரியும். இப்போது எதிராளிகள் வைத்திருக்கின்ற போர்க் கருவிகளில் பெரும்பாலானவை இலங்கை இராணுவத்திடம் இருந்து கைப்பற்றப் பட்டவைகளாகும். இலங்கைச் சிப்பாய்களுக்குப் போரிட வேண்டுமென்ற நோக்கமோ போர்க்குணமோ (Motivation) இல்லை என்பதை அந்த நாட்டைச் சேர்ந்தவர்களே ஒப்புக் கொள்கிறார்கள்.

## நிரந்தரத் தீர்வு ஏற்படவேண்டும் என்று கருதுவதில் நான் யாருக்கும் இரண்டாவது அல்ல

ஆயிரக்கணக்கானவர்கள் இராணுவத்தை விட்டு ஓடி விட்டதாக அதிபர் சந்திரிகா அறிவிப்பிலிருந்து தெரிய வருகிறது. அவர்கள் எல்லாம் ஈட்டுத் தொகை பெற்றுக் கொண்டு சுகமாகத் தொழில் செய்ய விரும்புகிறார்கள் என்பதும் பத்திரிகைகளிலே வெளிவந்திருக்கின்றது.

இத்தகைய நிலையில் அந்த அரசுக்கு ஆபத்து வரும் போதெல்லாம் தற்காலிகமாகக் 'கூலிப் படையை' அனுப்பி நிலைமையைச் சரி செய்வது என்பது ஒரு உகந்த வழியாகவும் நிரந்தரத் தீர்வாகவும் இருக்க முடியாது. எனவே தான் இந்தியாவின் கொல்லைப் புறமாக இருக்கிற இலங்கையில் ஒரு நிரந்தரத் தீர்வு - அமைதியான தீர்வு ஏற்பட வேண்டும் என்று கருதுவதில் நான் யாருக்கும் இரண்டாவது அல்ல.

## மாநிலத்திற்கு மாநிலம், மாவட்டத்திற்கு மாவட்டம் கொள்கையை மாற்றிப் பேசுபவனல்ல

மத்திய அரசு எடுத்திருக்கின்ற முடிவை ஆதரித்துவிட்டு இப்போது மாறுபட்டுப் பேசுவதாக நான் இரட்டை நாக்குக் கொண்டவன் என்று என்னுடைய அருமை கம்யூனிஸ்ட் நண்பர் ஒருவர் கூறியிருக்கிறார். மாநிலத்திற்கு மாநிலம் அல்லது மாவட்டத்திற்கு மாவட்டம் கொள்கையை மாற்றிப் பேசுகின்ற கட்சியைச் சேர்ந்தவன் நான் அல்ல என்பது என்னைப் புரிந்து கொண்டவர்களுக்குத் தெரியும்.

இன்னும் எத்தனை நாளைக்கு இந்த உள்நாட்டுப் போர் நீடிக்க வேண்டும்? இரு தரப்பிலும் இன்னும் எத்தனைப்பேர் செத்து மடிய

படிப்பகம்

www.padippakam.com



வேண்டும்? இன்னும் எத்தனை ஆயிரம் பேர் அகதிகளாகத் தமிழ்நாட்டிற்கு வரவேண்டும்? இந்த ஆதங்கத்தில்தான் அரசியல் தீர்வு ஒன்று தான் இதற்கு உகந்த வழி என்று கூறினேன். இராணுவத் தீர்வு உகந்த மார்க்கம் ஆகாது.

### இந்தியாவிற்கோ தமிழ்நாட்டிற்கோ எந்தவித ஆபத்தும் வந்துவிடாது

அரசியல் தீர்வு என்பது என்ன? குவாசி பெடரலா? கான்பெடரலா? அல்லது செக்கோஸ் லோவேக்கியா மார்க்கமா? - என்று நான் கேட்டதில் தவறில்லை. இதில் எந்த மார்க்கத்தை இருவரும் ஒப்புக் கொண்டு கையாண்டாலும் இந்தியாவிற்கோ, தமிழ்நாட்டிற்கோ, தெற்கு ஆசியாவிற்கோ எந்தவித ஆபத்தும் வந்து விடாது என்பது தந்தக் கோபுரத்திலிருந்து (Ivory Tower) கீழே இறங்கி வந்து பார்ப்பவர்களுக்குத் தான் தெரியும்.

பனகல் பூங்காவில் நான் பேசிய என் பிறந்த நாள் விழாப் பேச்சை முழுமையாகப் படித்திருந் தால் அவர்களுக்கு உண்மை தெரிந்திருக்கும்.

என்னுடைய பேச்சு 'மொழி வெறி' காரணமாகத் தெரிவிக்கப்பட்ட கருத்து அல்ல; மனிதாபிமானத்தின் அடிப்படையிலே தெரிவிக்கப் பட்ட கருத்தாகும்.

நான் மீண்டும் சொல்கிறேன். ஏதாவது ஒரு மார்க்கத்தைத் தேர்ந்தெடுத்து அரசியல் தீர்வு கண்டு போரை நிறுத்துங்கள்; தமிழ்நாட்டிற்கு அகதிகளை அனுப்பி எங்களை அவதிக்கு உள் ளாக்காதீர்கள். இந்தியாவின் கொல்லைப் புறத் தில் அமைதி தவழட்டும் - இதுதான் என்னுடைய வேண்டுகோள்.

### அரசியல் தீர்வு கண்டு போரை நிறுத்துங்கள்

கால் நூற்றாண்டிற்கு மேல் முற்றி விட்ட இனக் குரோதத்திற்கும், விரோதத்திற்கும் - கசப் பாக இருந்தாலும் - இதுவே உகந்த மருந்து - நிரந்தரமாக வியாதியைத் தீர்த்து வைக்கும் மருந்து - என்று நான் கருதுகிறேன்.

இலங்கையின் இனப் பிரச்சினை அமைதி யான முறையில் தீர்க்கப்பட வேண்டும் என்றும்; ஈழத் தமிழருக்கு எதிரான கொள்கையை இலங்கை அரசு மாற்றிக் கொள்ள வேண்டும் என்றும் பிரதமர் வெளியிட்டுள்ள கருத்திற்கு மேலும் வலுச் சேர்க்கிற கருத்தாக என் கருத்தை எடுத்துக் கொண்டு, என் முழுமையான பேச்சை அணுக வேண்டும் என்று அவசரக்கார விமர்சகர் களைக் கேட்டுக் கொள்கிறேன்.

(நன்றி: 'முரசொலி', 7.6.2000)

## தமிழ் வழிக் கல்வி ஆதரவு விளக்கக் கூட்டம்

— இரா.முருகேசன் செயலர்

செயங் கொண்டம் நகரில் 20.5.2000 சனிக் கிழமை காந்தி பூங்காவில் தமிழ் ஆர்வலர் பேரவையின் சார்பில் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழாவும், தமிழ் வழிக் கலை ஆதரவு விளக்கக் கூட்டமும் பேரவைத் தலை வர் ந.பாலசுப்ரமணியம் தலைமையில் தொடங்கியது.

இரா.கோவிந்தசாமி, புரவலர் ந.கிருட்டிணமூர்த்தி வழக்கறிஞர். பூ.இராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகிக்க, செயலர் இர். முருகேசன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

அரங்க நாடன், புரவலர். சா.சந்திரகாசன், ந.சோழநம்பியார், தமிழாசிரியர் கழகச் செய லர். சி.பன்னீர் செல்வம் ஆகியோர் பாரதிதா சன் அவர்களின் தமிழ்ப் பற்று, சமுதாய சீர்திருத்தக் கொள்கை ஆகியவை பற்றிப் பேசி னர்.

தமிழ்ச் சான்றோர் பேரவை நிறுவனர் நா.அருணாசலம் அவர்கள் தமிழர் தமிழராக வாழ்ந்தால்தான் தமிழ் வாழும் எனவும், முனைவர் எழுத்தாளர் அருகோ அவர்கள் தமிழ் வழிக் கல்விக்கு ஆதரவாகவும், தமிழ் வழியில் படித்தவர்க்கே வேலை வாய்ப்பில் தமிழக முன்னுரிமை அளிக்கவும், தமிழக அரசு சட்டம் இயற்ற வேண்டும் எனவும் பேசினர். பொருளாளர் ப.தங்கராசு நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது. 'பேரவை யின் தொடர்பாளர் பா.ஸ்டாலின் அவர்கள் கூட்ட ஏற்பாடுகளை சிறப்பாகச் செய்திருந் தார்.

படிப்பகம்

www.padippakam.com



# கி.பி. 2010இல் ஈழத் தமிழர் நிலை

ச.அ. டேவிட்



'கி.பி.2010 ஆம் ஆண்டில் ஈழத் தமிழர்கள்' என்கிற இக் கட்டுரையின் தலைப்பு 1999 டிசம்பர் மாத 'Hot Spring' ('ஹாட் ஸ்பிரிங்' ஆங்கில மாத ஏடு, இலண்டன்) இதழிலிருந்து எடுக்கப்பட்டதாகும். இந்த இதழின் ஆசிரியர் சிவஞானம் அவர்கள் இத் தலைப்பு குறித்து வாசகர்கள் தம் கருத்தைத் தெரிவிக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

'பெரியார் ஊழி' (Periyar Era) மாத ஏட்டில் கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழீழம் பற்றி 36 கட்டுரைகள் எம்மால் எழுதப்பட்டுள்ளன. தமிழீழம் என்ற தலைப்பு மிகவும் முதன்மையானது என்பதால், Hot Spring ஆசிரியர் சிவஞானம் அவர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப மகிழ்ச்சியுடன் எம் கருத்தைத் தெரிவிக்கின்றோம்.

ஈழத் தமிழர்களின் இன்றைய நிலை

1927 ஆம் ஆண்டு வயது வந்த அனைவர்க்கும் வாக்குரிமை பற்றிய டோனோமூர் குழுவின் (Donoughmore commission) அறிக்கை வெளியிடப்பட்டது. அப்போது சர். பொன்னம்பலம் இராமநாதன் ''சிங்களர்கள் தங்கள் பேரினவாத ஆதிக்கத்தால் சிறுபான்மையினராக உள்ள தமிழர்களை அழிப்பார்கள்'' என்று தொலை நோக்குப் பார்வையுடன் கருத்துரைத்தார். அவர் கூறியது போலவே, கடந்த 72 ஆண்டுகளாகச் சிங்களவர்கள் பலவகையிலும் தமிழர்களை ஒடுக்கி அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

சிங்களர்கள் 70,000 தமிழர்களைக் கொன்றிருக்கிறார்கள். இவர்களில் 12,000 பேர் தமிழீழ விடுதலைப் புலிகள். மேலும் 30,000 தமிழர்கள் சிங்களர்களின் கொடுந் தாக்குதலால் படுகாயமடைந்து முடமாகிவிட்டனர். நூற்றுக்கணக்கான தமிழ்ப் பெண்களைக் கற்பழித்தார்கள். பல நூறு கோடி உருபாய் மதிப்புள்ள தமிழர்களின் சொத்துக்களைக் கொள்ளையடித்தனர்; தீயிட்டு எரித்தனர்.

தற்போது உலகின் பல பகுதிகளிலும் அய்ந்து இலட்சம் ஈழத் தமிழர்கள் அகதிகளாக இருக்கின்றனர். நான்கு இலட்சம் ஈழத் தமிழர்கள் - யாழ்ப்பாணத்தில் சிங்கள இராணுவக் கொடுங் கோலாட்சியின் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். சிங்களர் பகுதிகளில் மூன்று இலட்சம் ஈழத் தமிழர்கள் அச்சத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

வன்னி, திரிகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் வாழும் 25 இலட்சம் ஈழத் தமிழர்களில் 12 இலட்சம் ஈழத் தமிழர்கள் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் வாழ்கின்றனர்.

ஈழத் தமிழர் நாகரிகத்தின் வரலாற்றுச் சின்னமாகப் பெருமையுடன் கருதப்பட்ட யாழ் நகரம் சிங்களக் காடையர்களால் தரைமட்டமாக்கப்பட்டது. தமிழீழ விடுதலைப் போரில் வீர மரணமடைந்த 12,000 புலிப்படை மறவர்களின் நினைவுச் சின்னங்கள் சிங்களப் படையினரால் தாக்கி அழிக்கப்பட்டன.

ஈழத் தமிழர்களின் பொருளாதார, சமூக கலாச்சார வாழ்க்கை பெருமளவில் பாதிக்கப்பட்டது. கல்வி வாய்ப்பும், மருத்துவ வசதியும், நிர்வாகமும், போக்குவரத்தும் முடங்கிப் போயின.

1950 ஆம் ஆண்டு உயிர்ப்புடன் இலங்கையிலிருந்த ஈழத் தமிழ்களின் வாழ்நிலையுடன் ஒப்பிடும் போது இன்று அவர்களின் வாழ்க்கை பல

படிப்பகம்

www.padippakam.com



வகையான துன்பங்களுக்குள்ளாகி சீர்குலைந்து நிற்கிறது.

புதிய பாதை

கிரேக்கப் புராணக் கதையில், தன்னை எரித்த சாம்பலிலிருந்து புத்துயிர் பெற்றெழுந்த பறவையான பீனிக்ஸ் (Phoenix) போல, ஈழத் தமிழர்கள் மீண்டும் புதுவாழ்வு பெறுவது எப் படி? பண்டையப் பெருமை மிகு நிலையை அடைவது என்ற முடிவுடன் ஈழத் தமிழர்கள் ஒன்றுபட்டு முயன்றால் வெற்றி முரசு ஒலிக்கும்.

ஈழத்தில் ஆற்றல் மிக்க மனித சக்தி இருக்கிறது; போதுமான செல்வமும், வற்றா இயற்கை வளங்களும் இருக்கின்றன. தேவைப்படுவது ஒன்றே ஒன்றுதான் - அதுதான் ஈழத் தமிழர்களின் முழுச் சுதந்தரம்!

இவை அனைத்தையும் அடைவதற்கு நாம் மேற்கொள்ள வேண்டிய முதலாவது பணி எது? தனது இறுதி இலட்சியமாகவும் ஆவணமாகவும் தந்தை செல்வா கூறியிருப்பதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டியுள்ளது.

''கூட்டாட்சிக் கோட்பாட்டை நாங்கள் முற்றாகக் கைவிட்டு விட்டோம். நாங்கள் தனி நாடாகப் பிரிவது என்று முடிவெடுத்து விட்டோம். நாங்கள் தனியாகப் பிரியாவிட்டால், இழந்த எங்கள் உரிமைகளை ஒருபோதும் வென்றெடுக்க முடியாது. தனி நாட்டை உருவாக்குவதற்காக எல்லா வகையிலும் முயலுவோம். இது உறுதி! சிறீ லங்காவிற்கும் உலகிற்கும் இந்த அவையின் மூலமாக எங்கள் மக்களின் ஒருமித்த கருத்தாக இதைத் தெரிவிக்கின்றேன். தனி நாடாகப் பிரிவது என்பது எளிதான செயலன்று என்பதை நாங்கள் அறிவோம். இது கடுமையான பாதை ஏன்பதையும் அறிவோம். ஆயினும், ஒன்று, நாங்கள் சிங்கள ஆட்சியிலிருந்து பிரிந்து செல்ல வேண்டும். அல்லது அப்போராட்டத்தில் நாங்கள் மடிய வேண்டும். இதுவே எங்களின் இலட்சியம்'' (5-12-1976 அன்று இலங்கை நாடாளுமன்றத்தில் தந்தை செல்வா ஆற்றிய உரை)

தந்தை செல்வா 27-3-1977 அன்று மறைந்தார். தமிழர்களின் உரிமைகளுக்காகப் பல ஆண்டுகள் சிங்களர்களுடன் போராடிய அனுபவத்தின் அடிப்படையில் தன் வாழ்வின் இறுதியில் தமிழீழம் தனிநாடாக அமைவது ஒன்றே, ஈழத் தமிழர்களின் விடுதலைக்குத் தீர்வாகும் என்ற அவருடைய கருத்துதான் தெளிவான, உறுதியான சிறந்த முடிவாகும்.

தமிழீழமே தீர்வு என்ற தந்தை செல்வாவின் கருத்தை தம்பி பிரபாகரன் தன் இலட்சியமாக வரித்துக் கொண்டார். கொரில்லாப் போர் மூலம் கடந்த பதினாறு ஆண்டுகளாகச் சிங்கள இராணுவத்தைத் திணறடித்துக் கொண்டிருக்கிறார். தமிழீழ விடுதலைப் போராளிகளின் துணிவிற்கும் தியாகத்திற்கும் அடையாளமாகச் சயனைடு குப்பி திகழ்கிறது.

1983 இல் பிரபாகரன், ''நமது நாட்டில் நிலவும் தனித்தன்மையான சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு நன்கு ஆராய்ந்த பிறகே ஆயுதமேந்திய கொரில்லாப் போர் முறையே சிறந்தது என்று முடிவு செய்தோம். கொரில்லாப் போரைத் தொடர்ந்து நடத்தியும், மேலும் விரிவுபடுத்தியும் தமிழீழ விடுதலைக்கான மக்கள் போராக இதை மாற்றுவதே எங்கள் புரட்சிகரப் போராட்டத்தின் குறிக்கோளாகும்'' என்று போர் முழக்கம் செய்தார். (''நாட்டு விடுதலைக்கான தமிழர்களின் போராட்டம்'' - LTTE, 1983)

'ஓயாத அலைகள்' என்று பெயரிடப்பட்டு 1999 இல் வன்னியில்பிரபாகரன் ஈட்டிய வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியின் மூலம் விடுதலைப் புலிகளின் பேராற்றல் இடி முழக்கமாக ஒலித்தது. 2000 ஆண்டைப், போருக்கான ஆண்டாக, பிரபாகரன் அறிவித்திருக்கிறார்.

கொண்ட குறிக்கோளிலிருந்து இம்மியளவும் பின்வாங்குதல் என்பதற்கு இனி இடமில்லை! ஏனெனில் ஈழத் தமிழர்கள் எண்ணற்ற தியாகங்களைச் செய்திருக்கிறார்கள். 70,000 ஈழத் தமிழர்களின் இன்னுயிரை இழந்த பிறகு, சமரசம் செய்து கொள்வது என்றோ, சிங்களர்களுடன் சேர்ந்து வாழ்தல் என்றோ எண்ணுவதற்கு இடமே இல்லை! ஈழத் தமிழர் அனைவரும் மடிவதாயினும் நமது இறுதி இலட்சியத்தை அடைவதற்காக நாம் முன்னேறிச் செல்ல வேண்டும். இனிமேல் ஒருபோதும் சிங்களர்களின் அடிமைகளாக இருக்க மாட்டோம்.

படிப்பகம்

www.padippakam.com



நம் எதிர்காலத்திற்கான தெளிவான பாதையைத் தந்தை செல்வா அவர்களும் தம்பி பிரபாகரனும் வகுத்தளித்துள்ளார்கள். இப் போராட்டப் பாதையில் எவ்வாறு நாம் முன்னேறிச் சென்று வெற்றியடையப் போகிறோம்?

இஸ்ரேல் — ஒரு முன் மாதிரி

இஸ்ரேல் ஒரு முன் மாதிரியாக விளங்குகிறது என்பதை ஆய்வு செய்யும் போது இக் கட்டுரையைப் படிப்பவர்கள் மிகுந்த கவனமுடன் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம். இஸ்ரேலுக்கும் தமிழீழத்திற்கும் பல வற்றில் ஒற்றுமை இருக்கிறது. அதைப் போலவே கடும் முரண்பாடுகளும் இருக்கின்றன.

1960 இல் இலண்டன் செல்வதற்காக கொழும்புத் துறைமுகத்தில் நாங்கள் கப்பலில் ஏறியவுடன் எங்கள் நண்பராகவும் தத்துவ ஆசானாகவும் வழிகாட்டியாகவும் இருந்தவர் எங்களிடம் லியோன் உரில் என்பவர் எழுதிய 'Exodus' (குடிப் பெயர்ச்சி) என்ற நூலைக் கொடுத்து 'இந்நூலை ஆழ்ந்து படியுங்கள்' என்று கூறினார். நாங்கள் போர்ட்செட் (Portsaid) நகரை அடைவதற்கு முன் அந்நூலைப் படித்து விட்டோம். இசுரேலைப் பற்றிய சிந்தனைகள் எம்மை ஆட்கொண்டன. இசுரேல் நாட்டில் நிகழ்ந்துள்ளவற்றை நேரில் பார்ப்பதற்காக 1962இல் இசுரேலுக்குச் சென்றோம். அங்கு எங்கள் ஆய்வுப் பயணம் இரண்டு வாரங்கள் நீடித்தது.

இஸ்ரேல் நாட்டின் பரப்பு 8000 சதுர மைல்கள்; தமிழீழத்தின் பரப்பும் 8000 சதுர மைல்கள். ஆனால் இப்போது இது 6000 சதுர மைல்களாகக் குறுக்கப்பட்டுவிட்டது. இசுரேல் நாட்டின் மக்கள் தொகை 30 இலட்சம்; தமிழீழத்தின் மக்கள் தொகை 25 இலட்சம். இசுரேல் நாடு ஒரு பாலைவனம்; தமிழீழமோ வளங்கொழிப்பது. யூதர்கள் ஒடுக்கு முறைக்கு உள்ளான சிறுபான்மை இனம். செருமனியில் இட்லர் அறுபது இலட்சம் யூதர்களைக் கொடிய முறையில் கொன்றான். இலங்கையில் ஈழத் தமிழர்களும் ஒடுக்குமுறைக்குள்ளான சிறுபான்மையினர். யூதர்கள் பண்டைய இன மக்கள்; ஈழத் தமிழரும் ஈழத் தொல்குடியினர். யூதர்கள் உயர் கல்வி பெற்றவர்கள்; ஈழத் தமிழரும் ஓரளவு கல்வியறிவு பெற்றவர்கள்.

இனி, இசுரேலுக்கும் தமிழீழத்திற்கும் இடையே உள்ள முரண்பாடுகளைக் காண்போம். இசுரேல் நாட்டிற்கு அமெரிக்காவும் மற்ற முதலாளித்துவ நாடுகளும் முழு ஆதரவு அளித்து வருகின்றன. ஆனால் அமெரிக்கா விடுதலைப் புலிகள் அமைப்பை 'ஒரு பயங்கரவாதக் கும்பல்' என்று அறிவித்துள்ளது. அதே சமயம் அமெரிக்காவும் பிற முதலாளித்துவ நாடுகளும் சிங்கள அரசை ஆதரிக்கின்றன.

இசுரேல் நாட்டின் எதிரிகள் 12 கோடி முசுலீம்கள். தமிழீழத்தின் எதிரிகள் 1.40 கோடி சிங்களர்கள். வெளி நாடுகளில் பணக்காரர்களாக வாழும் 60 இலட்சம் யூதர்கள் இசுரேல் நாட்டிற்கு உறுதுணையாக விளங்குகின்றனர். ஆனால் தமிழீழத்திற்கோ அயல்நாடுகளில் வாழும் ஈழத் தமிழர்களில் பத்தாயிரம் பேர்களின் உதவி கூடக் கிடைப்பதில்லை. இசுரேல் நாட்டில் படைப் பயிற்சி பெற்றவர்கள் பத்து இலட்சம் பேர் இருக்கின்றனர். தமிழீழ விடுத்லைக்காகப் போர்ப் பயிற்சி பெற்றவர்கள் பத்தாயிரம் மறவர் மட்டுமே இருக்கின்றனர். இசுரேலிடம் அதி நவீன ஆயுதங்கள் இருக்கின்றன. தமிழீழப் போராளிகளிடம் ஏ.கே.47 துப்பாக்கிகளும், அரிதின் முயன்று பெற்ற சில ஏவுகணைகளும் மட்டுமே உள்ளன.

யூதர்கள் தங்கள் தாயகமாக இசுரேலை எவ்வாறு நிறுவினார்கள் என்று பார்ப்போம். இசுரேல் என்ற நாடு அமைக்கப்படுவதற்குப் பெரும் சக்தியாக யூதத் தாயக இயக்கம் (Zionist Organisation) விளங்கியது. இவ்வியக்கம் 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் தொடங்கப்பட்டது. யூதர்கள் உலகின் பல நாடுகளிலும் பரவி இருந்தனர். அவர்களுள் இசுரேல் நாடு அமைவதை ஆதரிப்பவர்களுடன் யூதத் தாயக இயக்கம் தொடர்பு கொண்டு நிதி திரட்டியது. இசுரேல் நாட்டை அமைப்பதற்கான வலிமையான படை உருவாவதற்கு இந்த இயக்கம் உதவியது. உலகில் உள்ள மிகச் சிறந்த உளவு அமைப்புகளில் ஒன்றான மொசாத் (Mossad) அமைப்பு உருவாகவும், இசுரேல் நாடு அமைவதற்கு உலக அளவில் ஆதரவு

படிப்பகம்

www.padippakam.com



திரட்டவும் யூதத் தாயக இயக்கம் துணையாக நின்றது.

இசுரேல் நாட்டிற்கு யூதத் தாயக இயக்கத்தைப் போலவே அதன் இராணுவமும் முதுகெலும்பாக விளங்குகிறது. 18 வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் கட்டாயமாக இராணுவப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 18 வயது முதல் 45 வயதிற்குட்பட்ட ஆண் பெண் அனைவரும் இசுரேல் நாட்டைக் காத்திட எப்பொழுதும் ஆயத்த நிலையில் உள்ளனர். இசுரேல் நாட்டின் முப்பது விழுக்காடு மக்கள் இவ்வாறு இராணுவத்தின் ஒரு பகுதியாக விளங்குகின்றனர். அரபு நாடுகளை யொட்டியுள்ள 270 மைல் எல்லைப் பகுதிகளை இசுரேல் நாட்டின் இராணுவம் தீவிரமாகக் கண்காணித்து வருகிறது. சிங்களப் பகுதியுடனான தமிழீழத்தின் எல்லை 200 மைல்கள்.

இசுரேல் நாட்டின் வளர்ச்சிப் பணிகள் மிகவும் நுட்பமாகத் திட்டமிடப்பட்டு குறித்த காலத்திற்குள் செயல்படுத்தப் படுகின்றன. இதில் எத்தகைய சுணக்கமும் ஏற்பட அனுமதிக்கப்படுவதில்லை. மருத்துவ மனைகள், பள்ளிகள், கட்டடங்கள், தகவல் தொடர்பு வசதிகள், மின்சாரம், சாலைகள், குடிநீர் வழங்கல் போன்ற அடிப்படைக் கட்டமைப்புப் பணிகள், அனைத்தும் மக்களின் தேவையை முன்கூட்டியே அறிந்து நிறைவேற்றப் படுகின்றன. இசுரேல் துடிப்பாற்றல் மிக்க நவீன நாடாகத் திகழ்கிறது.

இசுரேல் இன்று ஒரு முன்னோடி நாடாக உலக அரங்கில் கருதப்படுவதற்கு அமெரிக்காவில் வாழும் யூதர்கள் மூலமாக அமெரிக்கா அளித்து வரும் ஆதரவு ஒரு பெரிய காரணமாகும். இதனால் இசுரேல் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தொங்கு சதையாகிவிட்டது. இசுரேல் நாட்டில் உருவான கூட்டுப் பண்ணை முறை (Kibbuts - சோசலிச நாடுகளில் ஏற்படுத்தப்பட்ட கம்யூன் வாழ்க்கை முறை போன்றது) விவசாயிகள் இசுரேல் நாட்டின் முன்னேற்றத்தைத் தீர்மானிக்கும் சக்தியாக வளர்ந்திருந்தால் முதலாளியத்திற்கும் கம்யூனிசத்திற்கும் இடைப்பட்ட ஒரு சமூக அமைப்பு உருவாகியிருக்கும். ஆனால் இன்று இசுரேல் அமெரிக்க நாட்டிற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டிய நிலையில் இருக்கிறது. அமெரிக்காவின் போக்கிற்கு 'ஆமாம்சாமி' என்று கூறிவருகிறது. இசுரேல் அமெரிக்கத் தலைமைக்குக் கீழ்ப்படிந்து இலங்கையில் ஈழத் தமிழருக்கு எதிராக இழிசெயல்களில் ஈடுபட்டது.

### கி.பி. 2010இல் தமிழீழம் தனிநாடாகும்

தந்தை செல்வா அவர்களின் இறுதி விருப்ப ஆவணத்தில், இலங்கை அரசிற்கும், கொடுமதி கொண்ட அமெரிக்காவிற்கும், உலகிற்கும், ''நாங்கள் எங்களுக்கான தனிநாட்டை அமைப்போம்; இது உறுதி'' என்று அறிவித்தார். ஈழத் தமிழர்களை அழித்தொழிக்கும் சிங்களர்களின் செயல்பாடுகளுக்கு அமெரிக்கா உதவி வருகிறது. இதில் நாங்கள் மடிய நேரிட்டாலும் சாவை மகிழ்ச்சியுடன் ஏற்போமே தவிர, ஒரு போதும் சிங்களர்களின் அடிமைகளாக இனி உயிர் வாழ மாட்டோம் என்ற தந்தை செல்வா அவர்களின் தமிழீழ விடுதலைக்கான இந்த அறைகூவலை ஏற்று ஈழத் தமிழர்கள் எந்த அளவிற்குச் செயல்படப் போகிறார்கள்?

### தமிழீழத்தைத் தனிநாடாக எவ்வாறு அமைக்க வேண்டும்?

இசுரேலின் முன் மாதிரி. (1) யூதர் தாயக இயக்கம் உலகெங்கும் பரவியிருந்த யூதர்களுடன் தொடர்பு கொண்டு இசுரேல் நாடு அமைவதற்காக உலக அளவில் ஆதரவு உருவாகுமாறு செய்தது. (2) உலகம் முழுவதும் இருந்த யூதர்கள் இசுரேல் நாட்டிற்காகத் தொடர்ந்து பெருந்தொகையை அனுப்பிக் கொண்டேயிருந்தனர். (3) வலிமையான இசுரேல் இராணுவம் ஏற்படுத்தப்பட்டது.

ஈழத் தமிழர்கள் மேலே குறிப்பிட்டுள்ள முக்கியமான மூன்று செயல்பாடுகளையும் கருத்திற் கொண்டு கீழே குறிப்பிட்டுள்ளவற்றை உருவாக்க வேண்டும்.

(1) தமிழீழத்தின் உயர் அதிகார அவையொன்றை ஏற்படுத்த வேண்டும். இந்த அவை ஈழத் தமிழர்களுடனும் உலகில் பல நாடுகளில் வாழும் தமிழர்களுடனும், ஆதரவு தரும் நட்பு நாடுகளுடனும் நிலையான தொடர்பை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



(2) ஈழத் தமிழர்கள் தமிழீழ வங்கியை ஏற்படுத்தி அதில் அவர்களுடைய பணத்தைப் போட வேண்டும். தமிழீழக் காப்பு நிதிக்கு நண்பர்களையும் நட்பு நாடுகளையும் நிதி உதவி வழங்குமாறு செய்ய வேண்டும்.

(3) சிங்களவர்களிடமிருந்து வரக்கூடிய எத்தகைய தாக்குதலையும் முறியடிக்கக் கூடிய வலிமை கொண்டதாகத் தமிழீழ இராணுவத்தை உருவாக்க வேண்டும்.

இம் மூன்று கருத்துகளைப் பற்றி விரிவாக ஆராய்வோம்.

### தமிழீழ உயர் அதிகார அவை

தமிழீழத்தைக் காக்கும் பெரும் பொறுப்பை பிரபாகரன் தன் இளம் வய்திலேயே ஏற்றுக் கொண்டார். கடந்த 16 ஆண்டுகளாக 1,20,000 பேர் கொண்ட சிங்கள இராணுவத்தையும் இந்திய அமைதிப் படையையும் போரில் எதிர்த்து நின்று அவர்கள் தமிழீழத்தைக் கைப்பற்ற முடியாதவாறு தடுத்து வருகிறார். ஒப்பற்ற வீரமும் கட்டுப்பாடும் தியாக உணர்வும் கொண்ட விடுதலைப் புலிகள் பிரபாகரனின் கட்டளைகளைப் புலிப் பாய்ச்சல் வேகத்தில் செயல்படுத்துகின்றனர். விடுதலைப் புலிகள் படையில் இதுவரையில் இளம் ஆண்களும் பெண்களும் 12,000 பேர்கள் தமிழீழ விடுதலைப் போரில் தம் இன்னுயிரை ஈந்துள்ளனர்.

ஆகவே தமிழீழ உயர் அதிகார அவை பிரபாகரன் தலைமையின் கீழ் இயங்க வேண்டும். ஈழத் தமிழர்களில் மிகச்சிறந்த அறிவாளர்கள் பலர் இருக்கின்றனர்; உலகில் பல நாடுகளிலும் நிர்வாகத்தில் இணையற்ற அனுபவம் கொண்டவர்கள் இருக்கிறார்கள். இவர்களில் மிகச் சிறந்த அறிவாற்றலும் அனுபவமும் உடைய அய்ந்து பேர் தங்கள் சொந்த வாழ்க்கையைத் துறந்து தமிழீழ விடுதலைக்காக முழுமையாகத் தங்களை ஒப்படைத்துக் கொள்ள வேண்டும். தந்தை செல்வாவின் இலட்சியத்தை ஈழத் தமிழர்கள் ஏற்றுக் கொண்டார்கள் என்று உலகம் அறிவதற்கான அடையாளமாக இது இலங்கும்.

குறிப்பிட்ட எண்ணிக்கையில் ஈழத் தமிழர்கள் வாழும் ஊர்கள்தோறும் 'ஈழத்தமிழர் சங்கம்' ஏற்படுத்தப்பட வேண்டும். ஈழத் தமிழர் ஒவ்வொருவரும் இச்சங்கத்தில் உறுப்பினராக வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் தந்தை செல்வாவின் அறைகூவலை வெகு மக்களாக உள்ள ஈழத்தமிழர்களும் ஏற்றுச் செயல்படுத்த முனைந்து விட்டனர் என்பதை உலகம் உணரும்.

### ஈழத் தமிழர் வங்கி

தமிழீழத்தைத் தனிநாடாக அமைப்பதற்கும் அதன்பின் அதைக் காப்பதற்கும், அதன் வளர்ச்சித் திட்டங்களுக்கும் பல நூறு கோடி உருபாய் தேவைப்படுகிறது. ஈழத்தமிழர்கள் மனமுவந்து தாராளமாக ஈழத்தமிழர் வங்கிக்கு நிதி அளிக்க முன்வந்தால் உலகில் உள்ள நல்லெண்ணம் கொண்டோரும், சங்கங்களும், பிற அரசுகளும் நம்முடைய நியாயமான இலட்சியத்திற்கு உதவிட முன்வருவார்கள்.

5,00,000 ஈழத்தமிழர்கள் உலகின் பல நாடுகளிலும், அகதிகளாக வாழ்கின்றனர்.

தமிழ்நாட்டில் மட்டும்ஓர் இலட்சம் ஈழத் தமிழர்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஈழத்தமிழர் வங்கிக்கு நிதி அளிப்பதற்கான வசதி வாய்ப்பு இவர்களுக்கு இல்லை. இவர்கள் நண்பர்களின் உதவியாலும் மேலை நாடுகளில் உள்ள உறவினர்கள் அனுப்பும் பணத்தாலும் உயிர் வாழ்கின்றனர்.

மேற்கிலும் கிழக்கிலும் உள்ள வளர்ந்த நாடுகளில் நான்கு இலட்சம் ஈழத் தமிழர்கள் வாழ்கின்றனர். இவர்களில் ஓர் இலட்சம் பேர் நல்ல வருவாய் உள்ள வேலைகளிலும் தொழில்களிலும் இருப்பதாகக் கருதலாம். மீதி நான்கு இலட்சம் பேர் அகதிகளுக்காக வழங்கப்படும் உதவியால் உயிர் வாழ்வதாகக் கொள்ளலாம்.

ஒரு மாதத்தில் கிடைக்கக் கூடிய தொகை 74.50 கோடியாகும். இதன்படி ஓர் ஆண்டில் 894 கோடி உருபாய் நிதி உதவி கிடைக்கும். வழங்கப்படும் நிதி உதவித் தொகை நிதி வழங்கியவரின் பெயரில் வங்கியில் வரவு வைக்கப்படும். ஈழத் தமிழர் வங்கி, எதிர்காலத்தில், இத்தொகையை நிதி அளித்தவருக்கோ அல்லது அவரின் வாரிசுகளுக்கோ வட்டியுடன் வழங்கும் என்று அறிவிக்க வேண்டும். ஓர் ஆண்டில் கிடைக்கும் 894 கோடி உருபாய் என்பது ஈழ நாட்டின் இராணுவச் செலவின் தேவையுடன் ஒப்பிடும் போது சிறு

படிப்பகம்

www.padippakam.com



### தோராயமான ஒரு மதிப்பீடு

| ஈழத்தமிழரில் நன்தொடை அளிக்க வசதியுள்ள எண்ணிக்கையினர் | உத்தேச மாத வருவாய் (முதல் - வரை) (உருபாய்) | ஒவ்வொருவரும் அளிக்க வேண்டிய மாத நன்கொடை (உருபாய்) |
|---|---|---|
| 10,000 | 1,00,000 - 2,00,000 | ரூ 15,000x10,000 = 15,00,00,000 |
| 20,000 | 50,000 - 1,00,000 | ரூ 7500x20,000 = 15,00,00,000 |
| 20,000 | 20,000 - 50,000 | ரூ 3500x20,000 = 7,00,00,000 |
| 50,000 | 10,000 - 20,000 | ரூ 1500x50,000 = 750,00,000 |
| 3,00,000 | 10,000 - | ரூ 1000x3,00,000 = 30,00,00,000 |
| | ஆகக் கூடுதல் மாதந்தோறும் | ரூ. *74,50,00,000* |

முழு ஆண்டில் கிடைக்கக்கூடிய தொகை *74,50,00,000* x *12* = *894,00,00,000*

தொகைதான். ஆனால் இத்தொகையைக் கொண்டு விடுதலைப் புலிகள் வியத்தகு வெற்றிகளை ஈட்டுவர்.

ஈழத்தமிழர்கள் சுதந்தரமாகவும் சுயமரியாதையுடனும் வாழ வேண்டும் என்பதற்காக முதிராஇளம் போத்துகளான தமிழீழத்தின் ஆண்களும் பெண்களும் போர்க்களத்தில் தீரமுடன் போரிட்டு மரணத்தையும் மகிழ்ச்சியுடன் ஏற்று வருகின்றனர் என்பதை ஈழத் தமிழர்கள் தங்கள் நெஞ்சங்களில் நிலை நிறுத்திப் பார்த்தால் நிதி மலையெனக் குவியும்.

### தமிழீழ இராணுவம்



புலிப்படை தமிழீழத்தின் பெருமையையும் பேராற்றலையும் நிலைநாட்டிக் கொண்டிருக்கிறது. பிரபாகரன் இராணுவத் திறமையில் மாபெரும் அறிவாளி என்பதை உலகம் ஒப்புக் கொண்டுவிட்டது. பிரபாகரன் தலைமையில் கீழ் போராடுகிற - கழுத்தில் சயனைடு குப்பி அணிந்த கொரில்லா போர்ப்படை தங்களைவிட எண்ணிக்கையில் பத்து மடங்கு அதிகம் கொண்ட சிங்களப் புடைடையயும், நவீன ஆயுதங்கள் பெற்றிருந்த இந்தியப் படையையும் கடந்த 16 ஆண்டுகளில் பல போர் முனைகளில் எதிர்கொண்டு தீரமுடன் போர் புரிந்து தன் ஒப்பற்ற வீரத்தை உலகறியச் செய்திருக்கிறது.

"மக்கள் இராணுவத்தை" ஏற்படுத்தப் போவதாகப் பிரபாகரன் கூறியிருக்கிறார். தமிழீழத்தைக் காப்பதற்காக வலிமையான இராணுவ அடித்தளத்தை அடுத்த அய்ந்து ஆண்டுகளில் கட்டியமைப்பதற்கான அரும்பணியில் பிரபாகரனுக்கு நாம் உதவ வேண்டும்.

நம்பிக்கைத் துரோகம் செய்யக்கூடிய உலகில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நம்



வாழ்வின் முதல் நோக்கமாகப் பாதுகாப்பு ஏற்பாடு இருக்க வேண்டும். இசுரேல் நாடு செய்திருப்பது போல, நாமும் கட்டாய இராணுவப் பயிற்சி, பெற்ற மக்கள் படையை உருவாக்க வேண்டும்.

தமிழீழத்தில் 18 வயதடைந்த ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் கட்டாய இராணுவப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். அதன்பின் அவர்கள் 45 வயதை எட்டுகின்றவரை இடை

படிப்பகம்

www.padippakam.com





இடையே இராணுவப் புத்தூட்டப் பயிற்சி அளித்துக் கொண்டேயிருக்க வேண்டும். அப்போது தான் 18 முதல் 45 வயதுக்குட்பட்ட மக்கள் கூட்டம் எப்பொழுதும் தமிழீழத்தைக் காப்பதற்கான ஆயத்த நிலையில் இருக்கும். இசுரேல் நாட்டில் டெல்-அவிவ் (Tel-Aviv) நகரின் வீதிகளில் உயர் ரகத் துப்பாக்கி ஏந்திய இளம் பெண்களும் ஆண்களும் தமக்குள் மகிழ்ச்சியுடன் பேசியவாறே நடந்து சென்ற காட்சியை நாம் கண்டபோது மெய் சிலிர்த்தது. தங்கள் தாய் நாட்டைக் காத்திட அவர்கள் எப்போதும் விழிப்பாகவே இருக்கிறார்கள்.

தமிழீழத்தின் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் அதாவது எட்டு இலட்சம் மக்கள் மட்டுமே, தற்போது தமிழீழத்தில் இருக்கிறார்கள். அடுத்த இரண்டு ஆண்டுகளில் தமிழீழத்தில் குறைந்தது ஓர் இலட்சம் பேர்கள் கொண்ட இராணுவத்தைக் கட்டியமைக்க வேண்டும். இவர்கள் பிரபாகரனின் ஒப்பற்ற இராணுவத் தலைமையின் கீழ்ப் பயிற்சி பெற்று விட்டால், அதன்பின் ஈழத் தமிழர்கள் தங்கள், பாதுகாப்புப் பற்றி எள்ளளவும் அச்சமின்றி வாழலாம்.

2001 முதல் 2010 வரை உள்ள பத்து ஆண்டுக் காலத்தை இரண்டு அய்ந்தாண்டுகளாகப் பிரிக்க வேண்டும். முதல் அய்ந்தாண்டுக் காலத்தில் பாதுகாப்பு முயற்சிகளுக்கு முதன்மை தர வேண்டும். இரண்டாவது அய்ந்தாண்டுக் காலத்தில் வளர்ச்சித் திட்டப் பணிகளில் நாட்டம் செலுத்த வேண்டும். இத் தன்மையில் பத்து ஆண்டுகள் செயல்பட்டால் தமிழீழம் வலிமையான தனி அரசாக மலரும். அனைத்து நாட்டுச் சட்டப்படி உலக நாடுகளில் ஒன்றாகத் தமிழீழம் ஏற்றுக் கொள்ளப்படும்.

தமிழீழம் சோசலிச அரசாகத் திகழும். அதன் முன்னேற்றங்கள் அனைத்திற்கும் கல்வியே அடித்தளமாக இருக்கும். கலைகள், அறிவியல், தத்துவம் ஆகியவை ஒவ்வொரு குடிமகனுக்கும் கற்பிக்கப்படும். பகுத்தறிவின் அடிப்படையிலான மனித நேயமே மக்களின் கலாச்சாரமாக உருவாக்கப்படும். தமிழ் மொழியே ஆட்சி மொழியாகவும் பயிற்று மொழியாகவும் இருக்கும். ஆங்கிலம் ஒரு கட்டாயப் பாடமாக இருக்கும். இலங்கை, இந்தியா மற்றும் உலகின் பிற நாடுகள் ஆகியவற்றுடன் தமிழீழம் நட்புறவு பூண்டொழுகும்!

'HOT SPRING' ஆசிரியர் சிவஞானம் அவர்கள் நுண்ணிய அறிவுத்திறன் உடையவர். அதனால் அவர் மூன்று சிக்கலான கேள்விகளை எழுப்பி, அவற்றிற்கு வாசகர்கள் பதில் அளிக்குமாறு கேட்டிருக்கிறார்.

1. மேற்கு நாடுகளில் வாழும் ஈழத் தமிழர்களின் எதிர்காலம்.

2. சிங்களர்களின் எதிர்காலம்

3. எதிர்காலத்தில் தமிழ் நாட்டுடனும், இந்தியாவுடனுமான உறவு.

இம் மூன்று கேள்விகளுமே மிகவும் பொருள் பொதிந்தவை; சிக்கலானவை.

ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு நூல் வடிவில் விரிவான விளக்கங்கள் அளிப்பதே கேள்வியின் தகுதிக்குச் சிறப்புச் செய்வதாக அமையும். ஆனால் உடனடியாக அவ்வாறு செய்ய இயலாது என்பதால், மூன்று வினாக்களுக்கும் சுருக்கமான விடையை அளிக்கின்றோம்.

### 1. மேற்கு நாடுகளில் வாழும் ஈழத் தமிழர்களின் எதிர்காலம்

மேற்கு நாடுகளில் வாழும் ஈழத் தமிழர்கள் பற்றி நாங்கள் செவியுறும் செய்திகள் அதிர்ச்சியடையச் செய்கின்றன. அங்கு வாழும் ஈழத் தமிழர்களின் இல்லத் திருமணங்கள் மிகுந்த ஆடம்பரத்துடனும், பலவகையான உயர்வகை உணவுகள், குடிவகைகள் நிரம்பியதாகவும் நடக்கின்றன. எல்லாத் திருமணங்களிலும் குறைந்தது

படிப்பகம்

www.padippakam.com



இரண்டு மணி நேரம் வீடியோ படம் எடுக்கப் படுகிறது. புகைப்படங்களின் தொகுப்புகள் அதிகச் செலவில் உருவாக்கப் படுகின்றன. காஞ்சிபுரம் பட்டுப் புடவைகளையும், சென்னை லலிதா ஜுவெல்லரி நகைகளையும் அணிவது மேட்டுக் குடியினரின் சின்னங்களாக விளங்குகின்றன. திருமணங்களில் கலந்து கொள்ளவும், தங்கள் பேரக் குழந்தைகளின் பிறந்தநாள் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளவும் வேண்டி, வயதான பெண்களும் கூட கண்டம் விட்டுக் கண்டத்திற்கு விமானங்களில் பறந்து கொண்டிருக்கிறார்கள். சென்னையில் நடைபெறும் திருமணங்களில் கலந்து கொள்வதற்காக கொழும்பு, இலண்டன், டொரான்டோ, நியூயார்க், சிட்னி முதலான நகரங்களிலிருந்து ஈழத் தமிழர்கள் விருந்தின்ராக வருகின்றனர். தங்கள் பணக்காரத் தனத்தைக் காட்டிக் கொள்வதற்காக உயர் நட்சத்திர வகை விடுதிகளில் தங்குகிறார்கள். உலகின் பல பகுதிகளிலிருந்து புட்டபர்த்தி சாயிபாபாவையும் மேல் மருவத்தூர் பங்காரு அடிகளையும் தரிசிக்க ஈழத்தமிழர்கள் வருகிறார்கள்; காசி போன்ற பல கோயில்களுக்குச் செல்வதற்காகவும் வருகிறார்கள். இவற்றிற்காகத் தங்களின் பெரும் பணத்தையும் நேரத்தையும் செலவிடுகிறார்கள். இவற்றிற்காக ஈழத் தமிழர்கள் பல கோடி உருபாய் பாழாக்குகிறார்கள்.

உலகின் பல பகுதிகளிலும் முருகனுக்குக் கோயில் கட்டி ஆண்டுதோறும் ஆடம்பரமான வகையில் திருவிழா நடத்துகின்றனர். ஆனால் இதே சமயத்தில் இவர்களுடைய சுற்றத்தினரும் நண்பர்களும் வன்னி நிலப்பகுதியில் மரத்தடிகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்; உண்ண உணவும் மருத்துவ வசதியும் கிடைக்கப் பெறாமல் மடிந்து கொண்டிருக்கிறார்கள். ஈழ விடுதலைப் போராளிகளோ போதிய ஆயுதங்கள் இல்லாமையால் வீர மரணம் அடைந்து கொண்டிருக்கிறார்கள். இவையெல்லாம் தவிர்க்கப்பட வேண்டாமா?

ஈழத்தமிழர்களின் பிள்ளைகள் தமிழ் படிக்க விரும்பவில்லை என்பதைப் பத்திரிகைகள் வாயிலாக நாங்கள் அறிகின்றோம். கனடா நாட்டு அரசு தமிழ் படிப்பதற்காகத் தாராளமாக நிதி உதவி அளித்துள்ள நிலையிலும் பத்து விழுக்காடு தமிழ் மாணவர்கள் மட்டுமே தமிழைக் கற்கின்றனர் என அறிகிறோம். இளைஞர்கள் தன்னலம் கொண்டவர்களாகவும், கட்டுப்பாடு அற்றவர்களாகவும், மூத்தோரை மதியாதவர்களாகவும் இருப்பதாகக் கேள்விப்படுகின்றோம். மேலும் இவர்கள் புகைபிடிப்பவர்களாக, மது குடிப்பவர்களாக, போதைப் பொருளுக்கு அடிமைகளாகி விட்டவர்களாக இருக்கிறார்கள் என்பதை அறிகிறோம்.

அய்க்கிய நாடுகள் அவையில் பணியாற்றி ஓய்வு பெற்ற நடராசன் என்பவர் அண்மையில் எழுதிய ஒரு நூலில் இங்கிலாந்து நாட்டில் ஈழத் தமிழர்கள் 2000 பேர் மருத்துவர்களாக உள்ளனர்; ஆனால் இவர்களில் 500 பேர்கள் மட்டுமே தமிழீழப் பாதுகாப்பிற்காக உதவுகின்றனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஈழத் தமிழர்களின் இத்தகைய வாழ்க்கை முறை மிகுந்த கவலையும் அச்சமும் தருவதாக இருக்கிறது. ஈழத் தமிழர்களில் சிறுபிரிவினர் மட்டுமே இத்தகு இழிந்த வாழ்க்கையை நடத்துகின்றனர் என்று நம்புகின்றோம். இவர்களும் திருந்துவார்கள் என்று எண்ணுகின்றோம். இத்தகையவர்கள் திருந்தாவிடில் மேற்கத்திய நாடுகளிலேயே வாழட்டும். இவர்களுக்கு மலரப்போகும் புதிய தமிழீழத்தில் இடமிராது என்பது உறுதி!

தமிழீழத்தின் உயர் அதிகார அவை தமிழ் மொழிக்கும் தமிழ்க் கலாச்சாரத்திற்கும் முதன்மை தர வேண்டும்.

யூதத் தாயக இயக்கத்தினர் முற்றாக வழக்கொழிந்து போன தங்கள் தாய்மொழியாக இருந்த ஹெப்ரூ மொழிக்குப் புத்துயிரூட்டினர்; அவர்களுடைய மதத்திற்கும் கலாச்சாரத்திற்கும் முதன்மை தந்தனர். உலகெங்கும் வாழும் யூதர்கள் தங்கள் மதத்திற்கும் கலாச்சாரத்திற்கும் மிகுந்த மதிப்பளித்து அதன்படி நடக்கின்றனர்.

புதிய தமிழீழம், தற்போது சிங்களப் பகுதியின் கொல்லைப்புறம் போல் அமைந்துள்ள வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை மட்டும் கொண்டதாக இருக்காது. தமிழர்களைக் கொண்ட, தமிழர்களின் நலனுக்காகத் தமிழர்களால் ஆளப்படுகின்ற, புத்தெழுச்சியும் புதுமையும் கொண்ட புதியதோர் தமிழ்த் தேசமாக அது அமையும். அப்போது பண்டை நாளில் இருந்தது போல் தூய பதநீருக்கும் நண்டுக் கறிக்கும் ஈழ மக்களிடையே பெரும் வரவேற்பு இருக்கும் என்று நாம் கருதுகின்றோம்.

படிப்பகம்

www.padippakam.com



## 2. சிங்களர்களின் எதிர்காலம்

பழி தீர்க்கும் வெறியுடன் சிங்களர்கள் மீண்டும் போரிடுவார்கள் என்பதில் அய்யமில்லை. பௌத்தத் துறவிகள், 'தமிழீழம் அமைய விட மாட்டோம்; "சிறீலங்கா முழுவதையும் நாங்களே ஆளுவோம்" என்று சூளுரைத் திருக்கிறார்கள். சிங்கள அரசியல் வாதிகள் பௌத்தத் துறவிகளின் முகமூடிகளாகவே செயல்படுகிறார்கள். பிரபாகரன் இந்த உண்மையை அறிவார். அதனால்தான் கி.பி. 2000 ஆம் ஆண்டைப் போருக்கான ஆண்டு என்று அறிவித்தார்.

ஈழத்தமிழர்கள் மிகவும் ஆபத்தான எதிரிகள் என்ற உண்மையை உணரும்போது சிங்களர்கள் தாமாகவே அடங்கி விடுவர். இதற்காகத்தான் 2001 முதல் 2005க்குள் ஈழத் தமிழர் அனைவரும் இராணுவப் பயிற்சி பெறுவதற்கான கால எல்லையாகக் குறித்துள்ளோம்.

பிரபாகரனுக்குப் போதுமான நிதியையும் ஆயுதங்களையும் அளித்தால், சிங்கள இராணுவத்தின் முதுகெலும்பை முறித்து விடுவார் என்பது திண்ணம். ஆனால் அந்நிலையிலும் சிங்களப் படையினரை முற்றாக அழித்தொழிக்க முனைய மாட்டார். ஏனெனில் பிரபாகரனின் ஒரே குறிக்கோள் தமிழீழத்தைத் தனிநாடாக ஆக்குவது மட்டுமேயாகும். சிங்களர்கள் அவர்களுடைய நிலப்பகுதியில் அவர்கள் விரும்புவது போல் அமைதியாக வாழலாம்.

தமிழீழம் அமைந்த பிறகு கண்டிப் பகுதி சிங்களர்களும், கரையோரச் சிங்களர்களும் (Low Country) தமக்குள் சண்டையிட்டுக் கொள்வார்கள். அப்போது, இருதரப்பினருமே, இப்போது தமிழர்களிடம் வாக்குக் கேட்பது போல், ஈழத் தமிழர்களிடம் ஆயுதம் கேட்பார்கள்.

1927 இல் அனைவர்க்கும் வாக்குரிமை குறித்த அறிக்கை வெளியிடப்பட்ட போது அதற்கு எதிராக சர். பொன்னம்பலம் இராமநாதன் தலைமையில் கிளர்ச்சி நடந்தது. கண்டி சிங்களர்களும் இக்கிளர்ச்சியில் கலந்து கொண்டனர். ஏனெனில் அவர்களும் எண்ணிக்கையில் சிறுபான்மையினராக இருந்தனர். ஆனால் இப்போது கண்டி சிங்களர்கள் தாம் இலங்கையை ஆளுகின்றனர். சிறுபான்மையினராக இருந்த கண்டி சிங்களர்கள் ஆளும் வர்க்கமாக உயர்ந்தது எப்படி? கண்டி சிங்களரான சிரிமாவோவின் தளதளப்பான இளமை அழகில் எஸ்.டபள்யூ. ஆர்.டி. பண்டார நாயகே மயங்கி விழுந்ததுதான் காரணம்!

இலங்கையின் தென் பகுதியில் ஜனதா விமுக்தி பெரமுனா (ஜெ.வி.பி.) என்கிற சிங்கள வெறி அமைப்பு இருக்கிறது. சிங்கள இளைய தலைமுறையினர் ஜெ.வி.பி.யின் ஆதரவாளர்களாக இருக்கின்றனர். கண்டி சிங்களர்களைத் தோற்கடிக்கவும், கீழ்ச்சாதி மக்களின் எழுச்சியை நசுக்கவும் உதவி புரிந்ததற்காக அமெரிக்காவின் கொடிய முதலாளித்துவ பலிபீடத்தில் 30,000 ஜெ.வி.பி.யின் சிங்கள இளைஞர்களைப் பலியிட்டார் ஜெ.ஆர்.ஜெயவர்த்தனே!

ஜெ.வி.பி. கொண்டிருந்த பொதுவுடைமைத் தத்துவம் முதலாளியத்திற்கு ஒரு சவாலாக உருவாகி வந்த நிலையில், ஜெ.வி.பி.யைப் பூண்டோடு ஜெயவர்த்தனே அழித்தற்காக அமெரிக்கா அகமகிழ்ந்தது. இதற்குக் கைம்மாறாக அமெரிக்காவும் அதன் தலைமையில் இயங்கும் பிற முதலாளித்துவ நாடுகளும் இலங்கைக்குப் பெருமளவில் நிதியும் ஆயுதங்களும் அளித்தன. இவற்றைக் கொண்டுதான் சந்திரிகா தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஒடுக்க முயலுகிறார். நடத்தை கெட்ட தமிழரான இலட்சுமண் கதிர்காமர் மானங்கெட்ட ஒரு தரகராகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.

ஆகவே இலங்கையில் சிங்களர் ஆட்சியின் கீழ் உள்ள சிங்களர் பகுதியிலும் ஒருபோதும் உண்மையான அமைதி நிலவாது. ஜெ.வி.பி. வெற்றி பெற்றால் சீனர்கள் இலங்கையில் சிங்களப்பகுதியில் நுழைவார்கள். ஜெ.வி.பி. தமிழர்களை மிகக் கடுமையாக எதிர்க்கும் அமைப்பாகும்! அதைப் போலவே இந்தியாவிற்கும் அது எதிரானது. ஆகவே இலங்கையில் சிங்களர்களின் எதிர்காலமும் மோசமானதாகவே இருக்கும். இதன் தாக்கம் தமிழீழத்தின் மீதும் படியும். ஆகவே தமிழீழத் தமிழர்கள் மிகுந்த விழிப்புடன் இருந்தால்தான் தங்கள் சுதந்தரத்தைக் காத்துக் கொள்ள முடியும்.

## 3. தமிழ்நாடு மற்றும் இந்தியாவுடனான எதிர்கால உறவு

தமிழீழம் இறையாண்மை உடைய தனி நாடாக மலரும் போது, தமிழ்நாட்டில் உள்ள தமிழர்களின் உள்ளங்களில் பெரும் கிளர்ச்சியும்

படிப்பகம்

www.padippakam.com



மகிழ்ச்சியும் தோன்றும். இது மனித இயற்கை. தமிழ்நாட்டில் வெகு மக்களிடையே தமிழீழத் திற்குப் பேராதரவு இருக்கிறது. தமிழ் நாட்டு இளைஞர்களின் நெஞ்சங்களில் முன்பு குடி கொண்டிருந்த திரைப்பட கதாநாயகர்கள் பேரி லான கவர்ச்சி தூக்கியெறியப்பட்டு தற்போது பிரபாகரன் வீற்றிருக்கிறார். பிரபாகரன் தமிழ் நாட்டில் காலடி வைத்தால் அவரைக் காணவரும் மக்கள் கூட்டத்தைத் தமிழ்நாட்டுக் காவல் துறை யால் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படும். ஆனால் அரசியல் நிலையிலோ தமிழ் நாட்டு அரசு பார்ப்பன - பனியா ஆதிக்கத்தில் உள்ள மத்திய ஆட்சிக்கு அடிபணிந்ததாகவே இருக் கும். தமிழ்நாட்டில் பிரிவினைக்கான அறிகுறி கள் தென்பட்டதும், மய்ய அரசு தன்னிடம் உள்ள 15 இலட்சம் இராணுவத்தை ஏவி தமிழர் களை ஈ, எறும்பு போல நசுக்கி விடும்! நெடிய போர் மரபு கொண்ட சீக்கியர்களை, சீக்கியரான கில் என்கிற உயர் காவல் துறை அதிகாரி மூலமாகவே மய்ய அரசு அடக்கி ஒடுக்கியது. இந்தியாவில் உள்ள எல்லாச் சிறுபான்மை இனத் திற்கும் இது பொருந்தும்.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பும், இந்து தீவிரவாதப் போக்கும் மேலும் வளர்ந்து இந்தியாவை இந்து பாசிச நாடாக மாற்றும். 25.3.2000 அன்று அமெ ரிக்காவில் அதிபர் பில் கிளிண்டனின் இந்திய வருகை, அமெரிக்க - இந்திய உறவை மேம்படுத் துவதற்காக என்று கூறப்பட்டாலும் சீனாவை அச்சுறுத்துவதையும் உள்நோக்கமாகக் கொண்டி ருந்தது.



ஆர்.எஸ்.எஸ். வளர்ச்சி

ஈழச் சிக்கலில் இராணுவ முறையில் இந் தியா இலங்கையில் தலையிட வாய்ப்பு இல்லை. ஏனெனில் இந்திய அமைதிப்படை இலங்கையில் பெற்ற படுதோல்வி இன்னும் இந்தியர்களின் நினைவில் அப்படியே இருக்கின் றது. மேலும் தமிழீழத்தில் இருப்பவர்கள் இந் துக்கள் - சிங்களர்கள் பௌத்தர்கள் என்பதும் ஒரு காரணியாக அமையக் கூடும்.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், இந்தியா வில் உள்ள முசுலீம்கள் இந்தியாவின் வடகிழக் குப் பகுதி நக்சலைட்டுகள், வங்காளத்திலும் கேரளத்திலும் உள்ள கம்யூனிஸ்டுகள், பெரும் கடன் சுமை முதலான பல்வேறுபட்ட சிக்கல் களை இந்தியா எதிர்கொண்டு சமாளிக்க வேண் டிய நிலையில் இருக்கிறது. வாஜ்பாய் தூக்கத்தில் நடப்பவரைப் போல் செயல்பட்டுக் கொண்டி ருக்கிறார். அத்வானி திரை மறைவில் இருந்து கொண்டு செயல்பாடுகளை முடுக்கி விட்டுக் கொண்டிருக்கிறார். இந்திய அரசு எவ்வாறு செயல்பட வேண்டுமென்று ஆர்.எஸ்.எஸ். வழி காட்டிக் கொண்டிருக்கிறது.

அடுத்த பத்து ஆண்டுகளுக்கு தி.மு.க பெரும் அச்சுறுத்தல் ஏதுமின்றிக் காலூன்றி நிற் கும்! பெரும்பாலும் செயலலிதா சிறையில் அடைக்கப்படுவார். அதனால் அ.தி.மு.க. சரி யும். கலைஞர் கருணாநிதி தன் மருமகன் முர சொலி மாறன், மகன் மு.க. ஸ்டாலின் ஆகியோர் மூலம் தன் குடும்ப ஆட்சி தொடர ஏற்பாடு செய்து வருகிறார். ''தமிழீழம் தனிநாடானால் நான் மகிழ்வேன்'' என்று கருணாநிதி கூறுகிறார். தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட நான்கு ஈழத் தமிழர்களில் ஒருவருக்கு மன்னிப்பு வழங்க வேண்டும் என்று சோனியா காந்தி வெளிப்படை யாகக் கூறினார். கருணாநிதியோ மௌனம் சாதிக்கிறார். (மார்ச்சு 2000). தமிழ்நாட்டு அரசி யல் அந்த அளவிற்குத் துரோகம் இழைப்பதாகி விட்டது.

தமிழ்நாட்டில் ஈழத்தமிழர்கள் பிச்சைக்காரர்க ளைப் போல அவமானப் படுத்தப்படுகிறார்கள். அகதிகளுக்கான அதிகாரிகளிடம் தங்கள் பெய ரைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று போனால் பலவகையிலும் தொல்லைப் படுத்தப்ப டுகின்றனர். ஈழத் தமிழர்களுக்கு வழங்கப்படும் அனுமதிச் சீட்டில் ஏற்கெனவே குறிக்கப்பட்ட 'அகதிகள்' என்ற சொல்லை எடுத்துவிட்டு 'அய லார்' (Alien) என்று இப்போது எழுதப்படுகிறது. தமிழ்நாடு நம்பிக்கைத் துரோகம் செய்யும் இடமா

படிப்பகம்

www.padippakam.com



கும்! ஈழத் தமிழர்கள் தமிழ்நாட்டிற்கு வராமல் இருப்பதே நல்லது! தமிழ்நாடு காவல்துறை ஈழத் தமிழர்களை அச்சுறுத்துகிறது.

முடிவுரை:

கடந்த அய்ம்பது ஆண்டுகளில் ஈழத் தமிழர்கள் உடலாலும், உள்ளத்தாலும் சிங்களர்களால் பெருந்துன்பத்திற்கு ஆளானார்கள். அமைதி வழியில் தீர்வு காணத் தந்தை செல்வா பெரிதும் முயன்றார். ஆனால் சிங்களர்கள் அவருடைய முயற்சிகளைக் குலைத்தனர். 1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்கு இந்தியா தீர்வு காண முயன்றது. ஆனால் இலங்கை அரசு இந்த ஒப்பந்தத்தை மதிக்காததுடன் இந்தியாவை இழிவுபடுத்தியது.

இப்போது சந்திரிகா வெட்கமில்லாமல் விடுதலைப் புலிகளைப் பேச்சு வார்த்தைக்கு அழைக்கிறார். 'இனிப் பேச்சு வார்த்தைக்கே இடமில்லை; போர் ஒன்றே வழி' என்று பிரபாகரன் அறிவித்து விட்டார். இதைத்தான் சந்திரிகாவும் எதிர்பார்த்தார். இதைக் காரணமாகக் காட்டி அமெரிக்காவிடமும் நட்பு நாடுகளாக உள்ள மற்ற முதலாளித்துவ நாடுகளிடமும் நிதி உதவியும் ஆயுதங்களும் கேட்டுப் பெற்றுத் தொடர்ந்து போரை நடத்துவார்; தானும் ஆடம்பரமாக வாழ்வார்.

தமிழீழம் தனிநாடாக வேண்டும் என்று ஈழத் தமிழர்கள் விரும்பினால் அதை பிரபாகரன் தலைமையின் கீழ் தான் அடைய முடியும். ஓர் இலட்சம் பேர் கொண்ட இராணுவத்தை உருவாக்க பிரபாகரனுக்கு நாம் உதவ வேண்டும். அப்போதுதான் மீண்டும் தலைதூக்க முடியாதவாறு சிங்களர்களைப் போரில் தோற்கடிக்க முடியும். தமிழீழ மண்ணில் ஒரேயொரு சிங்கள சிப்பாயும் இருக்க அனுமதிக்கக் கூடாது.

அய்ந்தாண்டு காலத்திற்குள் அய்ந்து இலட்சம் பேர்கள் கொண்ட மிகச்சிறந்த இராணுவத்தைக் கட்டியமைக்க வேண்டும். தமிழீழ இராணுவத்தினர் என்றாலே சிங்களப் படையினருக்கு சிம்ம சொப்பனமாக இருக்க வேண்டும்.

தமிழீழத்தில் போர் ஓய்ந்து அமைதி நிலவத் தொடங்கிய பிறகு தமிழீழத்தை நவீன மயமாக்கவும், எல்லாத் துறைகளிலும் எழுச்சி பெற்று துடிப்புடன் செயல்படச் செய்யவும், தகுதி சான்ற, அறிவு சான்ற ஈழத் தமிழர்கள் பலர் இருக்கின்றனர்.

தமிழீழச் சிக்கலுக்கு அமைதி வழியில் தீர்வு காண முயன்று வரும் நார்வே நாட்டிற்காக நாம் இரக்கப்படுகின்றோம். நார்வே தன் நேரத்தையும், பணத்தையும், திறமையையும் இதில் வீணாக்கிக் கொண்டிருக்கிறது. சிங்களர்கள் எந்தவொரு ஒப்பந்தத்தையும் என்றும் மதித்து நடந்து கொண்டதில்லை. இது அவர்களின் குருதியில் படிந்து விட்டிருக்கிறது. சமாதானப் பேச்சு என்ற போர்வையில் காலத்தைக் கடத்தி, இதற்கிடையில் ஈழத் தமிழர்கள் மீது பெருந்தாக்குதல் நடத்தத் தன் இராணுவத்தைத் தயார்படுத்தி வருகிறார் சந்திரிகா! இதுவே இன்றைய நிலை.

தமிழில்: க. முகிலன்

## கவிதை மற்றும் கவிதை நூல்களுக்கான பரிசுப் போட்டி

கருப்பண்ணன் - செல்லம்மாள் இலக்கிய அறக்கட்டளையினர் ''புயலுக்கு அசையாத பூந்தமிழ்!'' என்ற தலைப்பில், கவிதைப் போட்டியை நடத்துகின்றனர். கவிதை 24 அடிகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும். 1995 முதல் வெளிவந்த சிறந்த கவிதை நூல்களையும் அனுப்பி வைக்கலாம். தேர்வு செய்யப்படும் கவிதைக்கும், கவிதை நூலுக்கும் ரூ 1000 பரிசு அளிக்கப்படும். கவிதைகள், கவிதை நூல்கள் அனுப்ப வேண்டிய கடைசி நாள் 1-9-2000.

முகவரி:

க.துரையரசன், செயலாளர்
புகழூர்த் தமிழ்ச் சங்கம்,
44, முல்லை நகர்,
வேலாயுதம்பாளையம்,
கரூர் மாவட்டம் - 639117.

படிப்பகம்

www.padippakam.com



# பெரங்கியம் பொன். இராமசாமி மறைந்தார்



பெரியார் பெருந் தொண்டர் பெரங்கியம் பொன். இராமசாமி தம் 69ஆம் வயதில் 13.6.2000 பகல் 1.30 மணிக்குத் திடீரென மாரடைப்பால் இயற்கையெய்தினார் என்ற செய்தி நம்மை அதிர்ச்சியடையச் செய்தது. அன்னார் சிவந்த மேனியர், நல்ல உயரமும், அதற்கேற்ற உடற்கட்டும், பார்த்தவுடன் மனதில் பதியும் மீசையும் உடையவர்.

அர்ப்பணிப்பு உணர்வுடன் இடைநிலை ஆசிரியர் பணியை திட்டக்குடி, தொழுதூர் மற்றும் சில ஊர் மேல்நிலைப் பள்ளிகளில் ஆற்றியவர். மாணவர்கட்குப் பாடம் நடத்தும் போது நடிப்பதுபோன்றே இருக்கும். இதனால் அவரிடம் மாணவர்கள் விரும்பிப் பாடம் கேட்பர்.

பெரியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் பயின்ற போது புலித் தேவனாக நாடகத்தில் நடித்ததால் 'புலித்தேவன்' இராமசாமி என்றே நண்பர்களால் அழைக்கப் பெற்றவர்.

பெரியார் சமவுரிமைக் கழகம் தோன்றியதிலிருந்து, நம் மா.பெ.பொ.க மேற்கொண்ட முயற்சிகட்கு ஆதரவு அளித்து வந்தவர். 1979 ஆம் ஆண்டு நம் நடவடிக்கைகளில் கலந்து கொண்டு தில்லிக்கு வந்தவர். தொழுதூர் வட்டாரத்தில் மா.பெ.பொ.க., சிந்தனையாளன் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர். ஆற்றல் மிக்க பேச்சாளர்.

அன்னாரை இழந்து வருந்தும் அவருடைய துணைவியார் செல்லப்பாங்கி, தம்பி மதிவாணன், மகள்கள் தேன்மொழி, மான்விழி, மகன்கள் பாரதிதாசன், ஆசைத்தம்பி ஆகியோர்க்கும், மருமகன்கள் மற்றும் உறவினர்கள், நண்பர்கட்கும் மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மறைந்த பொன். இராமசாமியின் படத் திறப்பு விழா 25-6-2000 அன்று து.தில்லைவனம் தலைமையில் பெரங்கியத்தில் நடைபெற்றது. புலவர் வை.இளவரசன் அவருடைய தொண்டினை நினைவு கூர்ந்து உரையாற்றினார். சி.வரதராசன், க.முத்துசாமி, ஆசிரியர் புலவர் பொன்னையன், வாகையூர் பெரியசாமி, வாகையூர் இராசாங்கம், த.சதாசிவம், கே.ஏ. பெரியசாமி, முத்து, முருகன், சி.மாணிக்கம், பொன்.பிச்சமுத்து, எஸ்.ஏ.பொன்னுசாமி, இரா. முருகேசன், ஆ. திருஞானசம்பந்தம் மற்றும் செல்லமுத்து, மான்விழி எத்திராசன் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

## கு.ச. ஆனந்தன் படத்திறப்பு விழாவும் நூல் வெளியீட்டு விழாவும்



மறைந்த சிந்தனைச் செம்மல் கோபி கு.ச. ஆனந்தன் அவர்களின் படத்திறப்பு விழாவும், அவர் எழுதிய "தமிழ் வழிபாடு தமிழர் பிறப்புரிமை' என்ற நூல் வெளியீட்டு விழாவும், 16.6.2000 வெள்ளி மாலை 6 மணிக்கு கோபி செட்டிப் பாளையம் பெரியார்த் திடலில் நடைபெற்றது. கு.ச. ஆனந்தன் படத்தைத் திறந்து வைத்தும் நூலை வெளியிட்டும் கல்வி அமைச்சர் க. அன்பழகன் சிறப்புரையாற்றினார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பி.ஏ.சாமிநாதன் தலைமை ஏற்றார். அமைச்சர்கள் என்.கே.கே. பெரியசாமி, அந்தியூர் ப.செல்வராஜ் ஆகியோர் கு.ச. ஆனந்தனின் தமிழ்த் தொண்டை எடுத்தியம்பினர். டாக்டர் செந்தில்நாதன் முதல் படியைப் பெற்றுக் கொண்டார். புலவர் பண்ணன் வரவேற்புரையாற்றினார். இறுதியில் ஆ. கௌதமன் நன்றி நவிலலுடன் விழா இனிதே முடிவடைந்தது.

## பெரியார் பெருந்தொண்டர் உறையூர் கோ. முத்துகிருஷ்ணன் 3ஆம் ஆண்டு நினைவு நாள் விழா



திருச்சி உறையூர் பெரியார் பெருந் தொண்டர், சிந்தனையாளர் கழகச் செயல் வீரர் கோ. முத்துகிருஷ்ணன் 15-6-1997 இல் மறைவுற்றார். அன்னாரின் மூன்றாம் ஆண்டு நினைவு நாளை ஒட்டி, 15-6-2000 அவர் தம் இல்லத்தில் படம் அலங்கரித்து வைக்கப்பட்டு, நினைவு நாள் நிகழ்ச்சியைச் சிறப்புடன் நடத்தினர். நினைவு நாளை முன்னிட்டு 'சிந்தனையாளன்' வளர்ச்சி நிதியாக அன்னாரின் மருகர் மு. செகந்நாதன் ரூ 200 வழங்கினார்.

புடிப்பகம்

www.padippakam.com



# சங்கமித்ரா விடையளிக்கிறார்



? தமிழ் ஈழ ஆதரவு மாநாட்டுக்குக் கோர்ட்டில் மனு, தமிழ் வழிக்கல்விக்கு உச்ச நீதி மன்றத்தில் மேல் முறையீடு – என்று என்ன தமிழ் சமாச்சாரம் என்றாலும் கோர்ட்டில் போய் நிற்க வேண்டியிருக்கிறதே!

வா. திருமலை, திருப்பரங்குன்றம்.

○ இப்ப புரியுதா இங்கே நடப்பது தமிழ் எதிர்ப்பு - பார்ப்பன ஆட்சி, இருப்பது மனுநீதி ஆதரவு நீதிமன்றங்கள் என்பது! கோர்ட்டுக்குப் போனால் மட்டும் என்ன ஆகிவிடும் - ஓட்டக் கூத்தன் பாட்டுக்கு ரெட்டைத் தாழ்ப்பாள் என்பார்கள். பார்ப்பன மேலாண்மை தேசத்தில் தமிழர்கள் அடிமைகள் என்பதை உணருங்கள்.

? சமசுகிருதம் தெரிஞ்சா அமெரிக்காவில் வேலை காத்திருக்கிறது என்று 'தினமலர்' செய்தி வந்திருக்கே – சமசுகிருதம் படிக்கட்டுங்களா?

வே.முனியாண்டி, பனைமரத்துப்பட்டி

○ அது சமசுகிருதம் இல்லிங்கோ. சன்ஸ் = திருத்தி அமைக்கப்பட்ட, கிருத் = எழுத்து, மொழி. சம்ஸ் = ஒன்று சேர்; கிருத் = மொழி. மத்திய ஆசிய நாடோடிக் கும்பல் இங்கே வந்து சேரும்வரை - இங்கே இருந்தது - அங்கே இருந்தது — வழியில் பொறுக்கியது எல்லாம் சேர்த்து ஒரு மொழி ஆக்கினாங்கள்.

அதுவும் பண்டித மொழியாக. பாலி மொழி என்று அப்பவும் வெகு மக்கள் மொழி வேறதான். என்ன செய்தியின் சாரம் என்றால் - மத்திய அரசு பேங்கு இங்கெல்லாம் வேலை பார்ப்பனர்கள் உருவாக்கும் கோவில்களுக்கு வந்து ''சுக்லாம் பரதரம் — சசிவர்ணம் - சதுர்புஜம்னு சொல்லிப் போட்டு, ஒரு லட்சம் இரண்டு லட்சமின்னு சம்பளம் வாங்கிக் கோங்கடா'' என்று பார்ப்பனர்களுக்குப் பார்ப்பனப் பத்திரிகையில் வந்த செய்தி. முனியாண்டிக்கும் மூக்காயிக்கும் எப்பவும் சாணி சுமக்கிற வேலை தானுங்கோ.

? ஏன் பிராமணர்களை மட்டும் சவுண்டி - சவுண்டி என்கிறீர்கள்?

வே. பாலசுப்பிரமணியன், திருப்பராய்த்துறை.

○ சோற்றுக்காக வாழ்கிறவர்களைஎங்கள் பகுதியில் [முடிகொண்டான் சன்னா நல்லூர் தூத்துக்குடி] சவுண்டி என்பார்கள். ஒரு விருந்துக்கு எல்லாரையும் கூப்பிடுங்கள். பார்ப்பனர்கள் மட்டும் மூன்று வேளையாவது பட்டினி கிடந்து வருவார்கள். மேற்கொண்டு இரண்டு வேளைக்கும் சேர்த்து ஒரே மூச்சில் சாப்பிட்டு விடுவார்கள். ஆக இரண்டு நாள் சாப்பாடு. ஒரு திடீர் செக்அப் ஆக எதிரே வரும் பத்துப் பேருக்கு மார்பு சுற்றளவு - வயிறு சுற்றளவு எடுங்கள். அதில் பார்ப்பனர்களுக்கு மட்டும் மார்பு:வயிறு = 1:3 என்று இருக்கும். அல்லது 1:3 இருப்பவர்களை சங்கராச்சாரி சத்தியமா பார்ப்பான் என்று சொல்லி விடலாம். எனவேதான் சவுண்டிங்கறேன்.

? கோடிக் கணக்கில் விமானக் கட்டணம் பாக்கி வைத்துள்ள முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் அந்த பாக்கியைக் கேட்ட போது – பிரதமருக்கு என்று சொந்த வாழ்க்கை இல்லை – எல்லாப் பயணமும் அதிகார பூர்வ பயணம்தான் என்று சொல்லி விட்டாரே!

கா.வள்ளி, தூத்துக்குடி.

○ உண்மைதானே! பிரதமருக்குச் சொந்த சொத்து, பங்களா, பணம், உடம்புதான் உண்டு. பதவியில் இருக்கும்போது கண்டபடி திங்கலாம், பங்களா வாங்கலாம், சொத்து சேர்த்துக் கொள்ளலாம். ஓர் இலட்சம் கோடி திருடிய நரசிம்மராவுக்கு சொந்த வாழ்க்கை ஏழு ஜென்மம் தாண்டித்தான். அது வரை அரசு பணத்தில் வாழ்க்கை.

? தமிழகம் என்ற சின்னக் குழந்தையை – வாராய், வாராய் எனப் பாடி அழைத்து, விடுதலைப் புலி என்ற மலைஉச்சியில் வைத்து டாக்டர் ராமதாசு உருட்டிவிடப் போவதாக துக்ளக் [17.5.2000] அட்டைப் படம் பார்த்தீர்களா?

இரா.பாக்கியம், மேட்டூர் அணை.

○ துக்ளக் சோ.இராமசாமிக்கு அறிவு கிடையாது என்பதற்கு இந்த அட்டைப் படமே நல்ல சான்று. தி.மு.க - அஇஅதிமுக வை ஆளுங்கட்சி, எதிர்கட்சி என்று கொண்ட தமிழகம் சின்னக் குழந்தை இல்லை. வெங்கட்ராமன், வெங்கடசுப்பிரமணியன், சோபோன்ற விஷப் பார்ப்பனர்களும்; வீரமணி, கருணாநிதி போன்ற பார்ப்பன ஜால்ராக்களும் மலிந்த தமிழகத்தை - நான்கு எம்.எல்.ஏ-க்களை மட்டும் கொண்ட பா.ம.க விடுதலைப் புலி ஆதரவு மலை உச்சியில் கொண்டு போய்ப் பிறகு உருட்டிவிடும் என்பது குடுமிகளின் விஷமப் புத்தியையும், சிங்களர் மீதான பாசத்தையுமே காட்டுகிறது.

? போலிச் சாமியார்கள் பற்றிய விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை கி.வீரமணி தமுக்கு அடித்து 16.5.2000ல் திருச்சியில் தொடங்கி வைத்திருக்கிறார். நல்ல பணிதானே?

வி.ஏழுமலை, திருச்சி–14.

படிப்பகம்

www.padippakam.com



○ நல்ல பணிதான். வீரமணி போன்ற கல்வி வியாபாரிகள் பற்றிய விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை - யாராவது தமுக்கு அடித்துத் தொடங்கி வைக்காமல் இருக்க வேண்டும்.

? மலேசியக் கல்லூரிகளில் - இளங்கலை - முதுகலை - தமிழ்ப் பட்டப் படிப்பு தொடங்க உதவுமாறு தமிழக அரசுக்கு எழுதியதாகவும், தமிழக அரசிடமிருந்து பதில் இல்லை என்றும் மலேசியத் தமிழ்அறிஞர் மணி வெள்ளையன் ஒரு பேட்டியில் சொல்லி இருக்கிறாரே, கருணாநிதியின் தமிழ் வளர்ச்சிப் பணி இவ்வளவுதானா?

[நற்றமிழ் 14.5.2000]

கு.அன்பழகன், புதுவை-9.

○ தோழர் வே.ஆனைமுத்துவின் 'தமிழால் வுய்க்கும் தமிழர்கள்' நூலை நீங்கள் படிக்கவில்லை போலிருக்கிறது. அதைத் தேடிப் படியுங்கள். இங்குள்ள தலைவர்களுக்குப் பேசவும் பிழைக்கவும்தான் தமிழ் - வளர்க்கப்படுவதற்கு அல்ல.

? அய்ம்பதாண்டு சுதந்தரத்தில் - இந்தியாவின் 30 - மாநிலம் மற்றும் மைய நிலப்பகுதிகளில் 103 தடவை குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப் பட்டிருப்பது எதைக் காட்டுகிறது?

வ. ஜீவன், உடுமலை.

○ மண்ணும் மக்களும் இல்லாவிட்டாலும் வானளாவிய அதிகாரம் மட்டும் மைய அரசுக் குடுமிகளின் கையில் குவிந்து கிடக்கிறது என்பதை,

? மீண்டும் ஒருமுறை தலைவர்கள் எல்லாரும் அம்பேத்கர் சிலைக்கு மாலை போட்டு விட்டார்கள். அவ்வளவு தானே - தலித் மேம்பாடு?

வே.புகழேந்தி, சென்னை-33

○ இது பரவாயில்லை. காந்தி சிலையை அங்கங்கே உடைக்கிறார்கள் [விக்கிர வாண்டி காந்தி சிலை உடைப்பு - தினமணி 15.4.2000] தலித் ஒடுக்கு முறையாளர்களிடம் தலித் மேம்பாட்டை யாசித்துக் கொண்டிருந்தால் மேம்பாடு எப்படி வரும்? மேம்பாடு என்பது நாம் சாதிப்பது; மற்றவர்கள் கொடுப்பது அல்ல.

? சில புகழ்பெற்ற எழுத்தாளர்கள் - சிறு பத்திரிகைகளை விரும்பிப் படிப்பதாகச் சொல்லுகிறார்களே - பெருமைக்குத் தானே?

மா. முருகேசன், விருத்தாசலம்.

○ சிறு பத்திரிகைகளில் சில சமயம் மிகவும் ஆழமான — அதிர்ச்சியான செய்திகள் வருகின்றன. அதை உருட்டி - புரட்டி உல்டா செய்து சொந்தச் சரக்கு மாதிரி விற்பனை செய்யும் ஏழைத் தோட்டத்தில்திருடும் எழுத்தாள எருமைகள் சிலர் உண்டு. பலர் உண்மையான தேடலும் ரசனையுமாக சிறு பத்திரிகை படிக்கிறார்கள். எப்படிப் பார்த்தாலும் பெருமை தான் சிறு பத்திரிகைக்கு.

? அது என்ன - பெப்சி படைப்பாளி பிரச்சினை?

வே.அறிவுமணி, திருமுல்லைவாயில்.

○ பார்ப்பான் - பார்ப்பான் அல்லாதவன் பிரச்சினைதான். தமிழ்நாட்டுக்கு என்று எதுவும் தனியாக இருப்பதை ஏக இந்தியா குடுமிகள் எதிர்த்தே வந்திருக்கிறார்கள். கேரளாவில் - கேரளத் திரைப்பட சங்கம், கர்நாடகாவில் - கர்நாடக திரைப்பட சங்கம் - தமிழ்நாட்டில் மட்டும் தென்னிந்தியத் திரைப்பட சங்கம் எதற்கு என்றால் - தமிழ்நாட்டுக்குள் - பாலசந்தர் போன்ற பார்ப்பனர்கள் - தமிழர் அல்லாதவர்களை வளர்த்து விடத்தான். வளர்த்து விட்டார்களா இல்லையா - கன்னடத்து ரஜினிகாந்தை?

? கல்யாணம் ஆகவில்லை என்பதற்காக ஒரு வாசகி - பிள்ளையாரைக் கட்டிப் போட்டாராமே, காலம் உங்கள் கையில் செய்தி படித்தீர்களா? [தினமணி, 14.4.2000]

பெ.மல்லிகா, ஈரோடு

○ ஆமாங்க, பாவம். பிள்ளையார் என்ன செய்வார்? அப்பா அம்மாவைக் கட்டிப் போட்டாலாவது ஏதாவது வழிபிறக்கும்.

? ஓய்வூதியம் வாங்குகிறவர்கள் சாதிச் சங்கங்களில் சேரக் கூடாது என்று தமிழக அரசு ஆணை பிறப்பித்திருக்கிறதே!

அ.சுகுமார், திருநெல்வேலி

○ செத்துப் போனவர்கள் பேயாக அலையக்கூடாது என்றுகூட முட்டாள் தனமாக தமிழக அரசு ஆணை பிறப்பிக்கலாம். சாதி இருக்கும்; சங்கம் இருக்கும். அதில் எல்லாரும் சேரலாம் - பென்ஷனர் தவிர என்பது என்ன நியாயம்? பென்ஷன் - நேற்று செய்த வேலைக்கு வாங்கும் ஓய்வூதியம். ஆளும் கட்சியின் அடிமையாக இன்று நடந்து கொள்வதற்குத் தரப்படும் கூலி அல்ல.

? விடுதலைப் புலிகளைத் தமிழகத்தில் உள்ளவர்கள் வளர்த்து விடுகிறார்கள் என்று காஞ்சிபுரத்தில் மூப்பனார் பேசியிருக்கிறாரே!

வே.அன்பரசு, காஞ்சிபுரம்.

○ மானம் என்றால் கிலோ என்ன விலை என்று கேட்கும் தமிழகத்துத் தலைமைக் கும்பல் - மானச் சுடர்களாக இருக்கும் விடுதலைப் புலிகளை எப்படி வளர்க்க முடியும்? காஞ்சிக்குப் போனால் மூப்பனாருக்குப் புத்தி பேதலிப்பது உண்டு.

**வினா விடுப்போர்க்கு....**
**சங்கமித்ரா முகவரி:**

பா. இர்ராமமூர்த்தி
1/429, மலைநோக்குக் குடியிருப்பு
ஜி.எஸ்.டி. சாலை, வண்டலூர் இரயிலடி
சென்னை - 600 048.

படிப்பகம்

www.padippakam.com



# முல்லைப் பெரியாறு அணை...

து.தில்லைவனம்

வினா: கருநாடகத்திடம் காவிரித் தண்ணீரைக் கேட்டும், கேரளத்திடம் முல்லைப் பெரியாறு அணையின் உயரத்தை உயர்த்தக் கோரியும் இன்னும் எத்தனை ஆண்டுகளுக்குத்தான் தமிழன் போராடிக் கொண்டிருப்பது?

சி. அறிவழகன், நெய்வேலி.

விடை: சென்னை மாநகருக்கு வரும் கிருஷ்ணா ஆற்று நீரை ஏன் விட்டு விட்டீர்கள்? ஒரு காலத்தில் அதுவும் பெரும் பிரச்சினையாகி, சென்னைக்குக் குடிநீர் கிடைப்பதில் இன்னும் சிக்கல் ஏற்படலாம்.



(இடமிருந்து) எதிர்க்கட்சித் தலைவர் ஜகதீஷ் ஷெட்டார், முதல்வர் எஸ்.எம். கிருஷ்ணா, பாசன அமைச்சர் எச்.கே. படேல், சட்ட அமைச்சர் சந்திரே கௌடா, முன்னாள் முதலமைச்சர் ஜே.எச்.படேல்.

மேலே உள்ள படத்தைப் பாருங்கள். காவிரி ஆற்று நீர் ஆணையத்தின் தலைவரான தலைமையமைச்சர் வாஜ்பேய் மே 19, 2000இல் தில்லியில் கூட்டியிருந்த கூட்டத்திற்கு கருநாடக முதலமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா செல்ல வேண்டியதில்லை என்று முடிவெடிப்பதற்காக பெங்களூரில் மே 18, 2000இல் கூடிய அரசியல் வாதிகளில் சிலரின் படம்தான் அது.

(இடமிருந்து வலம்) கருநாடக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ஜகதீஷ் ஷெட்டார், முதலமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, மாநில பாசனத் துறை அமைச்சர் எச்.கே.பட்டில், சட்ட அமைச்சர் டி.பி.சந்திர கௌடா, முன்னாள் முதலமைச்சர் ஜே.எச்.பட்டேல்.

மேலும் இந்தக் கூட்டத்தில் அம்மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர்களான எஸ்.ஆர். பொம்மை, வீரப்ப மொய்லி, மேலவையின் எதிர்க்கட்சித் தலைவர் கே.எச்.சீனிவாசா, ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதி எச்.ஜி.பாலகிருஷ்ணா, உயர்நிலை அலுவலர்கள் மற்றும் பொறியாளர்கள் முதலியோரும் கலந்து கொண்டனர்.

முன்பு ஒரு தடவை காவிரிப் பிரச்சினையில் கருநாடகத்தின் நிலையைத் தில்லியில் விளக்கிக் கூற நிஜலிங்கப்பா, ஜாட்டி, ராமகிருஷ்ண ஹெக்டே, பங்காரப்பா, படேல் போன்றவர்கள் - இவர்கள் அனைவரும் பல்வேறு சமயங்களில் - பல்வேறு அரசியல் கட்சிகளின் சார்பில் - ஒருவரை ஒருவர் கவிழ்த்து விட்டுக் கூட - அந்த மாநிலத்தின் முதலமைச்சர்களானவர்கள் - ஒரே விமானத்தில் ஏறி தில்லிக்குச் சென்று அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், உயர் அலுவலர்கள் ஆகிய அனைவரிடத்திலும் ஒரே குரலாகத் தங்கள் மாநிலத்தின் நிலையை எடுத்துக் கூறினர்.

அதனைக் கேட்ட அனைவரும் - கருநாடகத்தின் பக்கத்தில் ஞாயம் இல்லாவிட்டாலும், அவர்களிடையே உள்ள ஒற்றுமையைக் கண்டு மலைத்துப் போய்க் கருநாடகத்துக்கு எதிராகக் கருத்து கூறவே அஞ்சினர்.

கேரளாவைப் பாருங்கள். அகில உலக அரசியல் பேசுவோர், அகில இந்திய அரசியல் பேசுவோர், உள்ளூர்ப் பிரச்சினைகளை முன் நிறுத்தியே, அரசியல் பண்ணுவோர் ஆகிய அனைவருமே முல்லைப் பெரியாறு அணையின் உயரத்தை உயர்த்தவே கூடாது என்று ஒரே குரலில் கூறுகின்றனர்.

இந்த நிலை தமிழகத்தில் தோன்றாத வரையில், தமிழன் தண்ணீரின்றியும், உரிமையின்றியும் சாக வேண்டியதுதான்.

ஒரே திராவிட பாரம்பரியத்தில் வந்த கருணாநிதியும் முன்பு எம்.ஜி.இராமச்சந்திரனும், தற்போது செயலலிதாவும் எப்போதாவது சென்னையிலோ, தஞ்சாவூரிலோ, திருச்சியிலோ, தில்லியிலோ ஒரே மேடையில் அல்லது அரசு ஏற்பாடு செய்திருந்த ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டதுண்டா?

படிப்பகம்

www.padippakam.com



அது போலவே ஒரு மரத்துப் பறவைகளான மூப்பனாரும், வாழப்பாடி இராமமூர்த்தியும், அடிக்கடி மாற்றப்படும் தமிழ்நாடு காங்கிரஸ் (இ) கட்சித் தலைவரும் எதிலாவது ஒன்றாகக் கலந்து கொண்டதுண்டா?

எல்லாத் தலைவர்களும், பொதுவான சிக்கல் பற்றி ஒரே குரலில் பேசுவதுதான் தமிழகத்தின் உரிமையினைப் பெற உதவும் என்ற எண்ணமாவது இவர்கட்கு ஏற்பட்டதுண்டா?

தமிழ்நாட்டுப் பொதுமக்கள் அவர் செய்தது தான் சரி, இவர் வகுத்த வியூகம்தான் சரியானது, அவர் தமிழ் நாட்டின்நலன்களைக் காட்டிக் கொடுத்து விட்டார், இவர் தமிழக விவசாயிகளை ஓட்டாண்டிகளாக ஆக்கத் துணை போய் விட்டார் என்றெல்லாம் எழுப்பப்படும் கருதுவது போல், கட்சி நலனை மட்டுமே அடிப்படையாகக் கொள்ளாமல், பொதுச் சிக்கல்களுக்குச் செவிசாய்த்தது உண்டா?

தமிழக அரசியல் வாதிகளே ஒன்று சேருங்கள்!

தமிழ்நாட்டின் தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்க ஒன்றாய் நின்று குரல் கொடுங்கள்! என்று மக்கள் உரத்த குரலில் கூற வேண்டிய காலம் நெருங்கிக் கொண்டுள்ளது.

மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி, காவிரிப் பிரச்சினை உட்பட பல பிரச்சினைகளில் தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் கட்சி வேறுபாடுகளை மறந்து இவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று அவ்வப்போது வலியுறுத்தி வந்துள்ளது.

அண்மையில் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் மருத்துவர் ச.இராமதாசு, 'ஈழப் பிரச்சினை' தொடர்பாகத் தமிழ்நாட்டிலிருந்து சென்றுள்ள 40 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றாகக் குரலெழுப்ப வேண்டும்' என்று கூறியுள்ளார்.

இது மிகவும் வரவேற்கத் தக்க கருத்து. ஆயினும் ஈழப் பிரச்சினை தொடர்பாகத் தமிழ் நாட்டில் உள்ள அரசியல்கட்சிகள் வெவ்வேறு நிலைபாடுகள் எடுத்துள்ளனவாதலால், இந்தக் கருத்து விவாதத்திற்குக் கூட எடுத்துக் கொள்ளப் படவில்லை.

சூன் 2இல் தமிழ் மாநில காங்கிரசும், இந்திய தேசிய காங்கிரசின் தமிழ்நாட்டுப் பிரிவும் சேர்ந்து முல்லைப் பெரியாறு அணையின் உயரத்தை உயர்த்த வேண்டும் என்று ஆர்ப்பாட்டம் செய்தன. இந்தப் போக்கு வளர்த்தெடுக்கப் பட வேண்டும்.

பொதுப் பிரச்சினைகளில் தமிழ்நாட்டின் எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும். இவ்வாறு செய்யத் தவறினால் தமிழன் இருப்பதையும் இழக்கப் போவது உறுதி! உறுதி!

## ''ஏழை தாசன்''

ஆசிரியர் செய்தி

கடந்த ஐந்து மாதங்களாக ஏழைதாசன் இது வரை எப்போதுமில்லாத் துயரத்தோடு பயணித்திருக்கிறது. 31.12.1999 அன்று தமிழ்நாட்டில் இருந்து வெளிவரும் அனைத்துச் சிறுபத்திரிகைகளுக்கும் அஞ்சல்துறை ஒரு கடிதம் அனுப்பி, 'உங்களது பத்திரிகையில் 50 சதவீதம் செய்தி இல்லாததால் அஞ்சல் சலுகை இரத்து செய்யப்படுகிறது' எனத் தடாலடி உத்தரவு பிறப்பித்தது. அதன் பின், நமது இதழ் ஒன்று அனுப்ப ரூ 1-/ செலவாகி, ஐந்து மாதத்தில் கைப் பொருளெல்லாம் கரைந்து விட்டது. எனினும், நமது தீவிர முயற்சிக்குப் பிறகு, 25.05.2000 அன்று அஞ்சல் சலுகைக்குரிய உத்தரவு வழங்கப்பட்டு, இவ்விதழ் சொல்லவொண்ணாத் துயரத்தைத் தாங்கி உங்கள் முன் முகிழ்க்கிறது. அஞ்சல் சட்டவிதிப்படி கதை, கட்டுரை, துணுக்கு, நகைச்சுவை, கேலிச்சித்திரம் ஆகியன Articlesல் அடங்கும். இவைகளைத் தாங்கி (வார, மாத) வருவது தான் பருவ இதழாகும். இது தெரியாத அரசு உயர் அதிகாரிகள் தினசரிகளில் உள்ள செய்திகளைப் போல் பருவ இதழ்களில் தேடிப் பார்த்து இவையெல்லாம் செய்தி இல்லை என்பது என்ன நியாயம்? மேலேஉள்ள ''கவிஞர்'' அரசாங்கமும், கீழே உள்ள ''கலைஞர்'' அரசாங்கமும் என்ன செய்து கொண்டிருக்கின்றன?

## எல்லைப் போர் மறவர் ந.அ. இரசீத் மறைந்தார்

தமிழகத்தின் வட எல்லைப் போராட்டத்தில் பங்கேற்று திருத்தணியை மீட்டு வரலாறு படைத்த தளபதிகளில் ஒருவரான தோழர் ந.சு. இரசீத் அவர்கள் 30.5.2000 அன்று மறைவுற்றார். அன்னாரின் குடும்பத்தார்க்கும் நண்பர்கட்கும் ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறோம்.

மா.பெ.பொ.க.

படிப்பகம்

www.padippakam.com



## வருகைபுரி பேராசிரியராக மலேசியப் பாவலர் முரசு.நெடுமாறன் அமர்த்தம்



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் மலேசியப் பாவலர் முரசு. நெடுமாறன் வருகை தரு பேராசிரியராக நியமிக்கப்பட்டார். ஏப்பிரல் திங்கள் முதல் தம் பணியைத் தொடங்கினார்.

மலேசியக் கல்வித் துறையில் 34 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழ் ஆசிரியராகவும் விரிவுரையாளராகவும் பணிபுரிந்து ஓய்வு பெற்றவரும், பன்னூல் ஆசிரியரும், குழந்தை இலக்கியத்தில் தனிமுத்திரை பதித்தவரும், நீண்ட நெடுங்காலம் இலவச வகுப்புகள் மூலமும் பண்பாட்டு விழாக்கள் மூலமும் வழிகாட்டிச் செயலாக்கம் மிக்க மாணவர் படை வரிசையை உருவாக்கியவரும், சீர் திருத்த நோக்கமுடைய சமுதாயத் தொண்டருமான மலேசியப் பாவலர் முரசு.நெடுமாறன் அவர்களுக்கு உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் அண்மையில் வருகை புரி பேராசிரியராய்ப் பதவியளித்துச் சிறப்புச் செய்துள்ளது. இச் சிறப்பைப் பெறும் முதல் மலேசியக் குடிமகன் இவர் என்பது குறிப்பிடத் தக்கது.

இவர் தம் 15-ஆம் அகவை முதல் அரிதின் முயன்று திரட்டிப் பாதுகாத்து வந்த மலேசியத் தமிழ்க் கவிதைகளைத் தொகுத்து மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் என்னும் பெயரில் 1080 பக்கங்கள் கொண்ட மிகப் பெரிய கருவூலத்தை உருவாக்கி வெளியிட்டார் (1997). அந்நூல் தமிழ் கூறு நல்லுலகின் பெரும் வரவேற்பையும் பாராட்டையும் பெற்றது. இவரின் கவிதை ஆற்றல், இலக்கியத்திற்கு இவரின் பங்களிப்பு, மலேசியத் தமிழர் வாழ்வைப் படம் பிடித்துக் காட்டும் வண்ணம் மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியத்தை உருவாக்குவதில் கொட்டிய கடும் உழைப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு இவருக்கு உயரிய விருதான பாவேந்தர் விருதை வழங்கியது (1998). அவ்விருதைப் பெற்ற முதல் அயலகத் தமிழ் மகனார் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழகம் முழுவதும் 5.6.2000 அன்று உயர்நீதிமன்றத் தீர்ப்பு கண்டன ஆர்ப்பாட்டம்

தமிழ் வழிக் கல்விக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கிய மூன்று நீதிபதிகளின் தீர்ப்பினைக் கண்டித்து 5.6.2000 அன்று தமிழகம் முழுவதும் உள்ள மாவட்ட நீதிமன்றங்களின் முன்னால் தமிழ்ச்சான்றோர் பேரவையின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. சென்னையில் இந்த ஆர்ப்பாட்டத்தை உயர்நீதி மன்றத்தின் முன்னால் நடத்த அனுமதி மறுக்கப்பட்டு, சிந்தாதிரிப்பேட்டை மே நாள் பூங்கா அருகில் நடத்திக் கொள்ள இசைவு கிடைத்தது. அன்று காலை 9மணி முதலே பல்வேறு கட்சி மற்றும் தமிழ் அமைப்புகளைச் சேர்ந்த தோழர்கள் திரளத் தொடங்கினார். 11மணியளவில் கவிஞர்-தமிழேந்தியின் ஒலி முழக்கத்துடன் ஆர்ப்பாட்டம் தொடங்கியது. அரு.கோபாலன் தலைமையில் வே.ஆனைமுத்து, திரைப்பட இயக்குநர் சேகர், மணிமேகலை கண்ணன், புலவர் இறைக்குருவனார், புலவர் கி.த.பச்சையப்பன், தியாகு, ஆனூர் செகதீசன், நா.அருணாசலம் உள்ளிட்டோர் கண்டன உரை நிகழ்த்தினர். இறுதியில் பழ.நெடுமாறன் ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்துச் சிறப்புரை யாற்றினார். மா.பெ.பொ.கட்சித் தோழர்கள் பலர் பங்கேற்றனர்.

## தனலட்சுமி இல்லம் திறப்புவிழா

திருச்சி புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றம் மற்றும் திருச்சி சிந்தனையாளர் கழகச் செயல் மறவர் உறையூர் இரா. கலிய பெருமாள் — தனலட்சுமி துணைவர்கள் உறையூரில் புதிதாகக் கட்டியுள்ள 'தனலட்சுமி இல்லம்' எனும் இரண்டு மாடிக் கட்டடத்தை 12-6-2000 திங்கள் காலை 8 மணிக்கு வே.ஆனைமுத்து திறந்து வைத்தார். திருச்சி மாவட்ட தி.க. துணைத் தலைவர் து.மா. பெரியசாமி உரையாற்றினார். தொடக்கத்தில் இரா.கலிய பெருமாள் வரவேற்புரையாற்றினார். விழா முடிவில் ந. கருணாகரன் நன்றி நவின்றார். நகர தி.க. தலைவர் குப்புசாமி, மு.வெங்கடேசன் மற்றும் பல பெரியார் அன்பர்கள் பங்கேற்றனர்.

தனலட்சுமி இல்லத் திறப்பு விழாவை யொட்டி ரூ. 500 சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக வழங்கப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



# கட்டுரைப் போட்டி



## "தமிழீழ விடுதலை: பார்ப்பனர் போக்கும் தமிழர் கடமையும்"

### என்னும் தலைப்பில் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன

★ கட்டுரை 450 வரிகளுக்குள், தாளின் ஒரு பக்கத்தில், தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். வரும் கட்டுரைகள் திருப்பி அனுப்பப் பெறமாட்டா.

★ கட்டுரைகள் தக்க வரலாற்றுச் சான்றுகளுடன் எழுதப்பட வேண்டும்.

★ பரிசுக்குரிய மூன்று கட்டுரைகள் 'சிந்தனையாளன்' ஆசிரியர் குழுவினால் தேர்வு செய்யப்படும். இக்குழுவின் முடிவே இறுதியானது.

★ பரிசுகள்: முதற் பரிசு ரூ.2,000; இரண்டாம் பரிசு ரூ.1,500; மூன்றாம் பரிசு ரூ.1000.

★ கட்டுரை அனுப்பும் ஒவ்வொருவர்க்கும் ஓராண்டுக்குச் 'சிந்தனையாளன்' இதழ் அன்பளிப்பாக விடுக்கப்படும்.

● **கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்: 31.8.2000 வியாழன்.**

● கட்டுரைப் போட்டித் தொடர்பாகக் கடிதப் போக்குவரத்து ஏற்கப்பட மாட்டாது.

● தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரையாளர்களுக்கு உரிய பரிசுத் தொகை, 17.9.2000 அன்று தந்தை பெரியார் அவர்களின் 122வது பிறந்த நாள் விழாவில் அளிக்கப் பெறும்.

**கட்டுரை அனுப்பிட முகவரி:**

ஆசிரியர், 'சிந்தனையாளன்'
**(கட்டுரைப் போட்டி)**
19, முருகப்பா தெரு,
சேப்பாக்கம், சென்னை - 600 005.

படிப்பகம்

www.padippakam.com



மா.பெ.பொ.க மேற்கொண்ட தமிழ் வழிக் கல்வி பரப்புரைப் பயணம் 30.5.2000 அன்று எழுச்சியோடு நிறைவெய்தியது

# பழ.நெடுமாறன், பெ.மணியரசன், இராசேந்திர சோழன், தியாகு, புலவர் இறைக்குருவனார் உள்ளிட்ட தோழமை அமைப்பினர் பங்கேற்பு

(சூன் இதழ் தொடர்ச்சி)

## 18.5.2000 விழுப்புரம்

*17.5.2000* அன்று ஈரோடு பரப்புரையை முடித்துக் கொண்டு, இரவோடு இரவாகப் பயணக் குழுவினர் விழுப்புரம் நோக்கிப் புறப்பட்டனர். இருநாள் மட்டும் குழுவினரோடு இருக்க முடியும் என்கிற ஏற்பாட்டோடு வந்த தோழர். தியாகு மேலும் இரண்டு நாள் தங்க ஒப்புக் கொண்டது. எல்லோர்க்கும் மகிழ்ச்சி தந்தது. பின்னிரவு 2மணியளவில் திருக்கோவிலூர் கவிஞர் தோழர். திர.விசயன் இல்லத்திற்கு அனைவரும் சென்று கண் அயர்ந்தனர்.

18 வியாழன் காலை கவிஞர் வீட்டில் சிற்றுண்டி முடித்து 9மணிக்குத் திருக்கோவிலூர் பேருந்து நிலையத்தில் திரளாகக் குழுமியிருந்த மக்கள் கூட்டத்தின் முன் தோழர்கள் வல்லவன், தமிழேந்தி, தியாகு உரையாற்றினர். ரிஷிவந்தியம் வந்தபோது சென்னைக்குணம் தோழர் ஆறுமுகம் பயணக் குழுவோடு இணைந்து கொண்டார். அங்கேயும் அரை மணிநேரம் பரப்புரைப் பணி. பாலையாய் எரித்த வெயில் நேரத்தில், பகல் 11மணிக்கு, தியாக துருகத்தில் அனல் பறக்கும் பிரச்சாரம். விழுப்புரம் மாவட்ட தி.மு.க இலக்கிய அணி அமைப்பாளரும், எழுச்சிக் கவிஞருமாகிய புலவர். கு.சீத்தா தி.மு.க. தோழர்கள், திரளான மகளிர் அணி வீராங்கனைகளுடன் குழுவினரை வரவேற்று தியாக துருகத்தின் மையமான மூன்று இடங்களில் மிக விளக்கமான முறையில் தமிழ் வழிக் கல்வியின் தேவை பற்றித் தோழர்கள் கருத்துரையாற்ற ஏற்பாடு செய்து உதவினார். எல்லாத் தோழர்களுக்கும் இனிய பகல் விருந்து தந்து அன்புடன் வழியனுப்பி வைத்தார்.

உளுந்தூர்ப் பேட்டையிலிருந்து - கரடுமுரடான சாலையின் வழியாகப் பயணக் குழுவினர் பிற்பகல் 3மணிக்கு களமருதூரை அடைந்தனர். மறைந்த பெரியார் பெருந்தொண்டர் மாசிலாமணி அவர்களின் துணைவியார் சானகியம்மையார், அவர்தம் அன்பு மக்கள் ஆசிரியை மா.அறிவுக்கண்ணு, மருத்துவர். மா.அன்புமணி, தோழர் எழில் நிலவன் ஆகியோரின் இனிய வரவேற்பு குழுவினரின் பயணக் களைப்பை எங்கோ துரத்திவிட்டது. களமருதூரில் தோழர்கள் தியாகு, அன்புமணி ஆகியோரின் உரைகள் மிகச் சிறப்பாய் அமைந்தன. சானகியம்மையார் குடும்பத்தினரின் இனிய உபசரிப்பை அசைபோட்ட உணர்வோடு பயண ஊர்தி விழுப்புரம் நோக்கிப் பறந்தது.

பயணக் குழுவினர் மாலை 5மணிக்கு விழுப்புரம் மாவட்டச் செயலாளரும், இயக்கத்தின் முதுபெரும் தோழரும் ஆகிய க.திருப்பாண்டியன் அவர்களைச் சந்தித்தனர். குழுவினரைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்த க.திருப்பாண்டியன் அவர்கள் தம் சொந்தப் பங்காக ரொக்கப் பணம் ரூபாய் 1000/- மற்றும் வங்கி வரைவோலை ரூ 500/- உடனே தந்து தமிழ் வழிக் கல்விப் பரப்புரைப் பணியைத் தொய்வின்றி நடத்திச் செல்லுமாறு ஊக்கப்படுத்தினார். அவரிடமிருந்து விடைபெற்ற தோழர்கள் மாலை 6 மணியளவில் விழுப்புரம் பேருந்து நிலையத்திலிருந்து தம் பரப்புரைப் பணியைத் தொடங்கினர்.அந்த இடத்தில் பயணக் குழுவினரைத் தோழர்கள் இராசேந்திர சோழன், புலவர் கி.த.பச்சையப்பன், சீ.தங்கராசு, க.பாலமுருகன், த.பாலு, இரா.பாலசுப்பிரமணியன், பேராசிரியர் திருநாவுக்கரசு, திராவிடர் கழகத் தலைவர் சி.அப்பாவு ஆகியோர் அன்புடன் வரவேற்றனர்.

விழுப்புரம் பேருந்து நிலையம், காந்தி சிலை, மந்தைக் கரை ஆகிய மூன்று இடங்களில் நடந்த விளக்கக் கூட்டங்களில் தோழர்கள் தியாகு, இராசேந்திரசோழன், கி.த.பச்சையப்பன், த.பாலு, க.பாலமுருகன், வல்லவன், தமிழேந்தி ஆகியோர் எழுச்சி உரையாற்றினர். இடையிடையே கவிஞர். தி.ர.விசயன், தமிழ்க்கனல் ஆகியோரின் புரட்சிகரப் பாடல்களும் இடம் பெற்றன. விழுப்புரம் நகர நிகழ்ச்சிகள் யாவும் முடிய இரவு 10மணி ஆனது. தோழர் சீ.தங்கராசு ஏற்பாட்டில் அனைவர்க்கும் இரவு உணவு. விழுப்புரம் தாய்த் தமிழ்ப்பள்ளி உறங்கி ஓய்வு கொள்ளப் புகலிடம் தந்தது.

## 19.5.2000 கடலூர் மாவட்டம்

19 வெள்ளி காலை 7 மணிக்கெல்லாம் காலைக் கடன்கள் முடித்துத் தோழர்கள் கடலூர் மாவட்டச் சுற்றுப் பயணத்திற்கு அணியமானார்

படிப்பகம்

www.padippakam.com



கள். தந்தை பெரியார் உணவு விடுதி உரிமையாளர் தோழர் சீனிவாசன், அவருடைய மகன் தோழர் சீ.தங்கராசு ஆகியோர் பயணக் குழுவினர்க்கு இனிய சிற்றுண்டி வழங்கி வழி அனுப்பி வைத்தனர்.

பண்ருட்டி, வடலூர், நெய்வேலி, சேத்தியாத் தோப்பு ஆகிய ஊர்களைக் கடந்து பயண ஊர்தி பகல் 11 மணிக்கு மீன் சுருட்டியை அடைந்தது. கடலூர் மாவட்டச் செயலாளர் பா.மோகன், சிந்தனையாளன் ஆசிரியர் குழு உறுப்பினர் து.தில்லைவனம் அன்புடன் வரவேற்றனர். 12 மணியளவில் இராமதேவநல்லூர், வீரானந்தபுரம், புங்கனேரி, கண்டமங்கலம், குறுங்குடி, பாப்பாக்குடி ஆகிய ஊர்களில் பரப்புரை. வீரானந்தபுரத்தில் பெரியார் பெருந்தொண்டர் தோழர். ந.கணபதி மற்றும் அவர் குடும்பத்தினர் தோழர்களுக்குக் குளிர் குடிப்பிகள் அளித்து மகிழ்வித்தனர்.

நண்பகல் 1மணி வரை காட்டுமன்னார் குடி பெரியார் நகர் முழுவதும் பரப்புரை செய்தபின் தோழர் துதி வீட்டில் அன்னாரின் அன்பு மகள் நிலா ஏற்பாட்டில் பசித்த வயிறுகளுக்குப் பாங்கான பகலுணவு. தியாகு, தமிழேந்தி ஓய்வு கொள்ளச் சற்றே படுத்தும் மற்ற தோழர்கள் சுற்றியுள்ள ஊர்ப்புறங்களில் பரப்புரை செய்யக் கிளம்பி விட்டனர்.

மாலை 7மணிக்குக் காட்டுமன்னார் குடி கலைமகள் நடுநிலைப் பள்ளியில் தோழர். பா.மோகன் தலைமையில், தோழர். வீ.இராசாப் பிள்ளை முன்னிலையில், அஞ்சா நெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரிசாமி நூற்றாண்டு விழா மற்றும் தமிழ்வழிக்கல்வி விளக்கக் கூட்டம் தொடங்கியது. வை.உமாநாத், வே.காசிநாதன், கோ.செயராமன், து.தில்லைவனம், பூ.இர. இராசசேகரன், வாலாசா வல்லவன், கவிஞர் தமிழேந்தி ஆகிய தோழர்கள் பேசி முடித்தபின் தோழர் தியாகு சிறப்புரையாற்றினார். சுவேதாரண்யம் உள்ளிட்ட வெளியூர்த் தோழர்களும் நிகழ்ச்சிக்கு வந்தனர். இரவு 10மணியளவில் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

நான்கு நாள்கள் முழுமையாகப் பயணக் குழுவோடு இருந்து சிறப்பான ஒத்துழைப்பு வழங்கிய தோழர். தியாகு 'தமிழ்த்தேசம்' இதழ்ப் பணி மற்றும் தமிழ்-தமிழர் இயக்கக் கட்சிப் பணிகளின் பொருட்டு இரவு 10.30 மணிக்குச் சென்னைக்குப் பயணமானார். பயணக் குழுவினர் இரவுப் படுக்கைக்காக வடக்கு மாங்குடி பயணமானார்கள். அங்கே எப்போதும் போல் தோழர் அ.பாலகிருட்டிணன், தோழர். பா.மோகனின் துணைவியார், மகன் புரட்சித் தமிழன் ஆகியோர் நள்ளிரவு நேரத்திலும் எழுந்து பயணக் குழுவினர் தங்குவதற்கான ஏந்துகளைச் செய்து உதவினர்.

### 20.5.2000 சிதம்பரம் வட்டத்தில்

20ஆம் தேதி காலை உணவு தோழர் பா.மோகன் இல்லத்தில் முடித்தவுடன் பயணக் குழுவினர் புயல் வேகப் பரப்புரைப் பணியில் இறங்கினர். முற்பகலில் வடக்கு மாங்குடி, வல்லம் படுகை, வேளக்குடி, கடவாச்சேரி, அம்மாப் பேட்டை, சிதம்பரம், கண்ணங்குடி, மதுராந்தக நல்லூர், பூந்தோட்டம், வாக்கூர், ஓடாக்க நல்லூர், வெய்யலூர், வாழைக் கொல்லை, பரிபூரண நத்தம், சேத்தியாத் தோப்பு ஆகிய இடங்களில் தோழர்கள் உரையாற்றினர். பயணக் குழுவினர்க்குத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் தோழர் மு.பால குருசாமி நல்ல ஒத்துழைப்பு நல்கினார்.

பயண ஊர்தி பிற்பகலில் மஞ்சக் கொல்லை, மிராளூர், பெருமாத்தூர், புவனகிரி, கீரப்பாளையம் ஆகிய ஊர்களில் பரப்புரையை முடித்துக் கொண்டு மாலை 6மணிக்குச் சிதம்பரம் நகரை அடைந்தது. தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் தலைமைக் குழு உறுப்பினர் தோழர்.கி. வெங்கடராமன் தலைமையில் அவருடைய கட்சித் தோழர்களும், சீர்காழி மா.முத்துச் சாமி, அ.பாலகிருட்டிணன், வீ.இராசாப் பிள்ளை, சி.இரா. இளங்கோவன் முதலான மா.பொ.பொ.க. தோழர்களும் இணைந்து பயணக் குழுவினரை இனிதே வரவேற்றனர். சிதம்பரம் தெற்குவீதி, பேருந்து நிலையம் காந்தி சிலை ஆகிய இரண்டு இடங்களிலும் திரளான மக்கள் குழுமி இருந்து உரைகளைச் செவிமடுத்தனர். பா.மோகன், வல்லவன், மா.முத்துச்சாமி, தமிழேந்தி ஆகியோர் உரையாற்றிய பின் தோழர்.கி. வெங்கடராமன் நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்தி சிதம்பரம் நகரின் பரப்புரைப் பணியை எழுச்சியோடு முடித்து வைத்தார். பயணக் குழுவினர் சிதம்பரம் நகரில் உள்ள தந்தை பெரியார் படிப்பகத்தைப் பார்வையிட்ட பின் இரவு 9 மணியளவில் வடக்கு மாங்குடி பா.மோகன் இல்லத்தை அடைந்தனர். தோழர். மோகன் தாம் கடலூர் மாவட்டச் செயலாளர் என்பதை மெய்ப்பிக்கும் வண்ணம் இருநாள்களிலும் ஏராளமான ஊர்களில் சுற்ற வைத்துப் பயணக் குழுவினரைக் கடுமையாக வேலை வாங்கிவிட்டார். அதிகமாகச் சுற்றிக் களைத்த அயர்ச்சியில் தோழர்கள் உணவு முடித்தவுடன் கண்ணயர்ந்து விட்டனர்.

### 21.5.2000 நாகை மாவட்டம்

21 ஞாயிறு காலை 7மணி வரையில் தோழர்

படிப்பகம்

www.padippakam.com



கள் நாகை, திருவாரூர், தஞ்சை மாவட்டங்களில் நான்குநாள் பரப்புரைக்காகப் புறப்பட்டனர். வழியில் வல்லம் படுகையில் இரா.அறிவுமணி இரா.அறிவுச்செல்வி ஆகியோர் வாழ்க்கை ஒப் பந்தவிழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, தோழர் தமிழேந்தி மணமக்களை வாழ்த்தி உரை நிகழ்த்தனார். வல்லம் படுகை குட்டிமணி திரும ணக் கூடத்தில் நடந்த இந்த நிகழ்ச்சிக்குப் பெரி யார் பற்றாளரும், தொழிலதிபருமான தோழர் வி.என். சூரியமூர்த்தி தலைமை தாங்கினார். இரண்டு நாள் கடலூர் பயணத்தை முடித்துக் கொண்டு புறப்பட்ட தோழர்களைத் தோழர். அ.பாலகிருட்டிணன் அன்புடன் வழி அனுப்பி வைத்தார்.

சீர்காழி நகர் எல்லைக்குள் நுழைந்த பய ணக் குழுவினரைத் தோழர்கள் மா.முத்துச்சாமி, சோ. கோவிந்தராசன், மு.அன்பழகன், மு.இரணி யன், விவசாயிகள் விடுதலை முன்னணித் தோழர் ந.அம்பிகாபதி, பெரியார் செல்வன் உள்ளிட்டவர்கள் அன்புடன் வரவேற்றனர். கொள்ளிடம் முக்கூட்டுச் சாலை, சீர்காழிப் பேருந்து நிலையம், தென்பாதி ஆகிய இடங்க ளில் அனல் தெறிக்கும் பிரச்சாரம் நண்பகல் 2மணி வரை நடந்தது. பின்னர் வயிற்றின் சூடுத ணிய தோழர் மா.முத்துச்சாமி இல்லத்தின் வாகான பகலுணவு. மாலை 4மணிவரை ஒய்வு கொண்டபின் மயிலாடுதுறை நோக்கிப் பய ணம். இடையில் வைத்தீஸ்வரன் கோயில், சேந் தங்குடி ஆகிய ஊர்களில் பா.மோகன், வல்ல வன், மா.முத்துச்சாமி ஆகியோர் கருத்துரை ஆற் றினர். மயிலாடுதுறையில் பேராசிரியர் த.செயரா மன், ந.இரகுபதி, தமிழ் நம்பி, சீர்காழி நடராசன் உள்ளிட்ட தோழர்கள் எல்லோரையும் இனிதே வரவேற்று மகிழ்ந்தனர். மயிலாடுதுறை லாக டம், தொடர்வண்டி நிலையம் ஆகிய இரு இடங்களிலும் பேராசிரியர். த.செயராமன் ஆற் றிய விளக்கவுரை சாலையில் செல்வோரையெல் லாம் ஆடாமல் அசையாமல் நிற்க வைத்து 'ஆம்! ஆம்! தமிழ் வழிக் கல்வியே உண்மைக் கல்வி' என மக்களைத் தலையாட்டச் செய்துவிட்டது. இரவு 7மணியளவில் மயிலாடுதுறை முத்தமிழ் மன்றத்தில் செந்தமிழ்ப் பேரவையின் சார்பில் தமிழ் வழிக் கல்வியை விளக்கி அரங்கக் கூட்டம் தொடங்கியது. புலவர். வே. புகழேந்தி தலை மையேற்க, கு.தமிழ்நம்பி வரவேற்றார். தமிழ்க்க னல், திர.விசயன் ஆகியோரின் எழுச்சி இசைக் குப்பின் தமிழ் வழிக் கல்வியை விளக்கி வல்ல வன், தமிழேந்தி, தனித்தமிழ் நாவலர் த.சரவ ணத் தமிழன் ஆகியோர் உரையாற்றினர். தமிழன் பர்கள் பலரும் திரளாகக் கலந்துகொண்டு கூட் டத்தைச் சிறப்பித்தனர். தோழர். கு.தமிழ்நம்பி, புலவர். வே.புகழேந்தி ஆகிய இருவரும் இணைந்து பயணக் குழுவினர்க்கு உணவும் உறையுளும் ஏற்பாடு செய்து மகிழ்வித்தனர்.

(தொடர்ச்சி 37ம் பக்கம் பார்க்க)

## திருநெல்வேலியில்
## தமிழ்வழிக்கல்வி விளக்கப் பொதுக்கூட்டம்

3.6.2000 அன்று மாலை திருநெல்வேலி நகரம் காந்தி சதுக்கத்தில் தமிழ்வழிக் கல்வி விளக்கப் பொதுக்கூட்டம் சிறப்பாக நடைபெற் றது. ந.மணி வரவேற்க வழக்கறிஞர் சி.தங்கசாமி தலைமை ஏற்றார். இரா.சௌந்திர பாண்டியன், புலவர் ஆ.மு.சுந்தரவிநாயகன், அ.கண்ணம் மாள், புலவர். இரா.சமுத்திரப் பாண்டியன், பொறியாளர். கு.ம.சுப்பிரமணியன், புலவர் வே.தமிழ்மாறன் ஆகியோர் உரையாற்றிய பின் வே.ஆனைமுத்து இறுதியாகப் பேசினார். திர ளான மக்கள் கூட்டத்தைச் செவிமடுத்தனர்.

### உலக அமைச்சரவையில் பிரபாகரன் 50 பேர்களில் ஒருவர் பிரபாகரன் 48வது பெயர் சந்திரிகா 49வது பெயர்

'ASIA WEEK' என்னும் வார ஏடு ஆண்டு தோறும் உலக அரசியல் தலைவர்கள் பட்டியல் ஒன்றை வெளியிடுகிறது.

26.5.2000 இதழில் புத்தாயிரம் ஆண்டின் 'கனவுலக அமைச்சரவை' எனப் பெயரிட்டு 50 பேர்கள் கொண்ட ஒரு பட்டியலை வெளியிட் டுள்ளது. இந்த அமைச்சரவையின் பிரதமர் வாஜ்பேயியாம்!

இதில் 48வது பெயராக உள்ளவர் வேலுப் பிள்ளை பிரபாகரன்; 49வது பெயர் சந்திரிகா குமார துங்காவுடையது; 50வது பெயர் கிழக்குத் தைமூர் குஸ்மோவுடையது.

('தி இந்தியன் எக்ஸ்பிரஸ்' '19.6.2000)

www.padippakam.com



(36ம் பக்க தொடர்ச்சி)

22.5.2000 - திருவாரூர்

22 திங்கள் காலை கண்விழித்தவுடன் தோழர்கள் தம் காலைக் கடன்களைச் சிக்கென முடித்துத் திருவாரூர் நோக்கிப் பயணமானார்கள். மா.முத்துச்சாமியும், பா.மோகனும் இணைந்து குழுவினரை வழிநடத்தினார்கள். திருவாரூர் செல்லும் வழியில் எலந்தக்குழி, மங்கைநல்லூர், பூந்தோட்டம், சன்னா நல்லூர் ஆகிய இடங்களில் ஊர்தியை நிறுத்திச் செம்மையான தன்மையில் தோழர்கள் விளக்கவுரை ஆற்றினார்கள்.

முற்பகல் 10 மணி முதல் 12 மணிவரை திருவாரூர் நகரின் தெற்குத் தேர் வீதி, கிழக்குத் தேர் வீதி, புதிய பேருந்து நிலையம், விசயபுரம், துர்காலயா சாலை மின் வாரியம் ஆகிய இடங்களில் பரப்புரை பணி தொடர்ந்தது. மின் வாரியத்தில் வேலூர் சா.குப்பன் மற்றும் அவரது தோழர்கள் பயணக் குழுவினர்க்குக் குளிர்க் குடிப்புகள் அளித்து அவர்கள் பணியினை ஊக்குவித்தனர்.

திருவாரூரில் இருந்து வேளாங்கண்ணி செல்லும் வழியில் கீழ்வேளூர், சிக்கல் ஆகிய இடங்களில் எரிக்கும் வெயில் அனலோடு தோழர்களின் கருத்து மழையும் தொடர்ந்தது. நண்பகல் 1மணிக்கு வேளாங்கண்ணியில் தம் பரப்புரையை முடித்துக் கொண்டு தோழர்கள் உணவு கொண்டனர்.

பிற்பகல் 2மணிக்கு நாகப்பட்டினம் வந்த தோழர்களுக்குப் பெரியார் பெருந்தொண்டர் ஆ.மீனாட்சி சுந்தரம் பயணக் களைப்பு தீர பரிவோடு உதவி தம் இல்லத்தையே ஓய்விடமாகத் தந்தார். மாலை 4மணிக்குப் பயண ஊர்தி பரப்புரைக்குக் கிளம்பிற்று. நாகூர் தர்கா, நாகூர் பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் பேசிய பின், 5மணிக்கு நாகை திரும்பி, நாகை வெளிப்பாளையம், புதிய பேருந்து நிலையம், நாகை மீன் அங்காடி, பழைய பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் இரவு 9மணி வரை பரப்புரை நீடித்தது. தோழர்கள் வல்லவன், தமிழேந்தி ஆகியோரின் நீண்ட விளக்கவுரைகள் எல்லா இடத்திலும் திரளாகக் கூடிய நாகை மக்களைச் சிந்திக்கத் தூண்டும் தன்மையில் அமைந்தன. தோழர் ஆ.மீனாட்சி சுந்தரம் பயணக் குழுவினரின் சிறப்பான பணியினை வாய்விட்டுப் பாராட்டிய வண்ணமிருந்தார். இரவு உணவு, தங்கும் வசதி போன்ற எல்லா ஏற்பாடுகளையும் அவரே பார்த்துக் கொண்டார்.

23.5.2000 - திருமரைக்காடு

23 செவ்வாய் காலை 7மணி பயண ஊர்தி வேதாரண்யம் புறப்படத் தயாராய் நின்றது. பயணக் குழுவினரின் பரப்புரைப் பணியால் மிகவும் மகிழ்ந்து போன தோழர் ஆ.மீனாட்சி சுந்தரம் தாமும் உடன் வர அணியமானார். காலைச் சிற்றுண்டிக்கும் அவரே ஏற்பாடு செய்தார். வேதாரண்யம் செல்லும் வழியில் பரவை, தோப்புத் துறை ஆகிய இடங்களில் தெருமுனை விளக்கக் கூட்டங்கள், 10மணிக்கு வேதாரண்யத்தை அடைந்தோம். உள்ளூர்த் தோழர் கா.ஆறுமுகம் குழுவினரோடு இணைந்து அவர் வழிகாட்டலில் கோடியக்காடு, கோடியக்கரை, அகத்தியன்பள்ளி, மறைநாய நல்லூர், கருப்பம்புலம், ஆயக்காரன்புலம், மருதூர், தகட்டூர் ஆகிய ஊர்களில் பகல் 2மணிவரை பரப்புரை நடந்தது.

தகட்டூரில் பகலுணவு முடிந்தவுடன் தானிக் கோட்டம், கரியாப்பட்டினம், சென்பகராய நல்லூர், குரவப்புலம், நெல்விளக்கு, திருமறைக் காட்டின் கடைவீதியில் பரப்புரை தொடர்ந்தது. வேதாரண்யம் அண்ணா திடலில் நடந்த சிறப்பான பொதுக் கூட்டத்தில் தோழர்கள் கா.ஆறுமுகம், மா.முத்துச்சாமி, வல்லவன், தமிழேந்தி ஆகியோர் உரையாற்றினார். திரளான மக்கள் கூட்டம்; பொறுமையாய் இருந்து கேட்டனர். இரவு 8 மணிக்குத் தோழர் கா.ஆறுமுகத்திற்கு நன்றி கூறி விடை பெற்றோம். இரவு 9மணிக்குத் திருத்துறைப் பூண்டியில் பரப்புரை. தோழர். ஆ.மீனாட்சி சுந்தரம் அனைவர்க்கும் இரவு உணவு ஏற்பாடு செய்த பின் அங்கிருந்து அவர் விடைபெற்றுக் கொண்டார். ஊர்தி இரவு தங்கலுக்காக குடந்தை நோக்கிப் பறந்தது. இரவு 12 மணிக்குத் தோழர் முத்துசாமி உறவினர் ஒருவர் வீட்டில் தங்கும் ஏற்பாடு செய்யப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



## 24.5.2000 - கும்பகோணம்

24 புதன் காலை தோழர். வே.ஆனைமுத்து பயணக் குழுவினருடன் மீண்டும் இணைந்து கொண்டார். தமிழர் உணவு விடுதி உரிமையாளர் தோழர் கோ.மோகன் அனைவர்க்கும் காலை உணவு அளித்து மகிழ்ந்தார். முற்பகலில் குடந்தை புதிய பேருந்து நிலையம், மகாமகம் குளம், டவுன் ஆல்ரோடு, மடத்துத் தெரு, நீதிமன்றம், மேலக்காவேரி, சுவாமிமலை, திம் மக்குடி ஆகிய இடங்களில் பரப்புரை தோழர்கள் வல்லவன், தமிழேந்தி, மா.முத்துச்சாமி, வே.ஆ னைமுத்து ஆகியோர் பேசினர்.

பகலுணவு திம்மக்குடி சிற்பக் கலைஞர் தோழர் எஸ்.இராசன் சிற்பக் கூடத்தில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. உணவுக்கு முன் அந்தச் சிற்பக் கூடத்தையும், சிற்பக் கலைப் பயிற்சி பெறும் மாணவர்களையும் சந்தித்து உரையாடுதல். பகலுணவுக்குப் பின் அங்குக் குழுமி இருந்த நாற்பதுக்கும் மேற்பட்ட இளை ஞர்களிடையே தோழர் ஆனைமுத்து உரையாற்றி னார். அவர்கள் எழுப்பிய அய்யங்களுக்குப் பொறுமையுடன் விடை பகன்றார். மாலையில் தாராசுரம், சாரங்கபாணி கிழவீதி, கும்பேசுவரர் திருமஞ்சன வீதி ஆகிய இடங்களில் பரப்புரை முடிந்தபின், இரவு அரங்கக் கூட்டம் 7மணியள வில் தமயந்தி திருமணக்கூடத்தில் தொடங்கியது.

தமிழ்க்கனல், தி.ர.விசயன் ஆகியோரின் எழுச்சிப் பாடல்களுக்குப் பின் மா.முத்துச்சாமி தலைமை உரையாற்றிட வல்லவன், தமிழேந்தி, வே.ஆனைமுத்து ஆகியோர் தமிழ் வழிக் கல்வி ஏன் என்பது பற்றி விரிவாகப் பேசினார்கள். இரவு 9 மணிக்குக் கூட்டம் முடிந்தது. குடந்தை யில் பயணக் குழுவினர்க்கு உதவியாய் இருந்த தோழர்கள் பாலசுப்பிரமணியம், கோவி தமிழ் வேந்தன், இரா.புஷ்பதுரை, வ.அய்.கும்பலிங் கன் ஆகியோர்க்கு நன்றி கூறி, 10 மணிக்குத் திருச்சி நோக்கிப் பயணமானோம். இரவுப் படுக்கை உறையூர் தோழர், மறைந்த பெரியார் பெருந்தொண்டர் கோ.முத்துக்கிருட்டிணன் மரு மகன் இல்லத்தில்; பின்னிரவு நேரத்திலும் அவர் தம் குடும்ப உறுப்பினர்கள் தொல்லை பாராமல் தங்க ஏற்பாடுகள் செய்து உதவினர்.

## 25.5.2000 - திருச்சி நகரம்

25 வியாழன் காலை தோழர்கள் இரா.க.நாத் திகன், ந.கருணாகரன் ஆகிய இருவரும் சுறுசு றுப்பாக ஏற்பாடுகளில் இறங்கினர். காலைக் கடன்கள் முடிந்தவுடன் திருச்சி மாநகரைச் சுற்றி சூறாவளிச் சுற்றுப்பயணம். முற்பகலில் திருச்சி சந்திப்பு (ஜங்ஷன்), சோனா மீனா திரையரங்கப் பகுதி, வருமான வரி அலுவலகம், புத்தூர் பெரிய மருத்துவமனை, புத்தூர், நாச்சியார் கோயில், பாண்டமங்கலம், உறையூர், செயந்தி சாலை, அண்ணாசிலை, சிந்தாமணி, சத்திரம் பேருந்து நிலையம், தெப்பக் குளம், மரக்கடை, காந்தி மார்க்கெட், பென்ஷனர் தெரு, பாலக்கரை சாலை உள்ளிட்ட பல இடங்களில் பரப்புரை நடந்தது.

மாலையில் நீதிமன்றக் கட்டடங்கள் வளா கம், உறையூரைச் சுற்றியுள்ள பல பகுதிகளில் உறையூர் நாச்சியார் கோயில் சாலை முகப்பில் நடைபெற்ற பொதுக்கூட்டம் பற்றிய அறிவிப்பு செய்யப்பட்டது. முதல்நாள் இரவு பெய்த கடும் மழை காரணமாய் காலை 9மணி முதலே திருச்சி மாநகரம் முழுவதும் மின்தடை. இரவு 7மணியா கியும் அது சரி செய்யப்படவில்லை. ஆனாலும் தோழர்கள் மாற்று ஏற்பாடுகள் செய்து இரவு 7 மணிக்கு பிரம்மாண்டமான பொதுக் கூட்டத் தைத் தொடங்கி விட்டனர். தோழர். மா.முத்துச் சாமி தலைமை தாங்கினார். தமிழேந்தி, இரா.க. நாத்திகன், ந.கருணாகரன், தமிழரங்கன் ஆகி யோர் உரையாற்றினர். மழை மிரட்டல் ஒருபக் கம் இருந்தாலும் தோழர் வே.ஆனைமுத்து கடல் மடை திறந்ததுபோல் சொற் பெருக்கு ஆற்றத் தொடங்கினார். மிரட்டிய மழை அஞ்சி ஒதுங்கி யது. உறையூர் நகர மக்கள் திரண்டு வந்து தோழர்களின் உரைகளைக் கேட்டு உணர்வு பெற் றனர். புரட்சிக்கவிஞர் கலை இலக்கிய மன்றத் தின் சார்பில் தோழர்கள் நாத்திகன், கருணாகரன் ஆகியோர் இணைந்து அண்ணல் அம்பேத்கர், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்தநாள் மற்றும் பட்டுக் கோட்டை அழகிரிசாமி நூற்றாண்டு விழாவாக மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்

படிப்பகம்

www.padippakam.com



தார். கூட்டம் முடத்துக் கொண்டு பயண ஊர்தி அன்றிரவே செந்துறை நோக்கிப் பறந்தது.

26-5-2000 — உடையார்பாளையம் செயங்கொண்டம் பகுதி

25.5.2000 அன்று இரவு திருச்சி பொதுக் கூட்டத்தை முடித்துக் கொண்டு விடியற்காலை 2 மணிக்கு செந்துறை வந்தடைந்தோம். பொன். இராசமாணிக்ம் எங்கள் வருகைக்காகக் காத்திருந் தார். 26.5.2000 காலை செந்துறையில் சிற்றுண் டியை முடித்துக் கொண்டு, செயங்கொண்டம் நிலக்கரிச் சுரங்கத்தால் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய கிராமங்களை நோக்கிப் புறப்பட்டோம். அரங்க. இளவரசன், பு.செங்குட்டுவன், ந.ப. அன்பழகன், உழவன் பாரதி கே.கே.கிருஷ்ண மூர்த்தி, ப.வே.பரமசிவம் ஆகியோர் பயணத் தில் கலந்து கொண்டனர். காலை 9 மணிக்கு உடையார் பாளையத்தில் பிரச்சாரத்தைத் துவக்கி னோம். கச்சிப் பெருமாள், காசாம் பள்ளம், இளமங்கலம், இலையூர், வாரியங்காவல், புதுக் குடி ஆகிய ஊர்களில் ஒரு வீடு தவறாமல் செயங்கொண்டம் நிலக்கரிச் சுரங்கத்தால் பாதி புக்கு ஆளாகிற மக்கள் என்ன செய்ய வேண்டும் என்ற விளக்கத் துண்டறிக்கைகளை அனைவரும் வழங்கினர். பகல் உணவு செயங்கொண்டத்தில் முடித்துக் கொண்டு பிற்பகல் கிழக் குடியிருப்பு, கல்லாத்தூர் பிரசாரம் முடித்துக் கொண்டு, இரவு மேலூரில் சிறப்பான பொதுக் கூட்ட இடத்தை அடைந்தோம். ஊராட்சி மன்ற முன்னாள் தலை வர் மோ.கோ. கணேசன் வரவேற்புரை யாற்றி னார். ஊ.ம.து. தலைவர் இராமச்சந்திரன் தலைமை தாங்கினார். சி.கணேசன், சின்னதுரை, இ.குமாரசாமி, த.இராசகோபால், ம.கோசி மணி, இரா.இளங்கோவன், ச.கோவிந்தசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கிராம மக்கள் சுமார் 400 பேர் ஆண்களும், பெண்களுமாக ஆவலுடன் கூட்டத்தில் கலந்து கொண்டனர். வே.ஆனைமுத்து, வாலாசா வல்லவன், கே.கே. கிருஷ்ணமூர்த்தி சிறப்புரையாற்றினார். இரவு மருதூரில் தங்கினோம்.

27-5-2000 - நிலக்கரிச் சுரங்கப் பகுதியில்

27.5.2000 காலை 8மணிக்கு மருதூரில் சிற் றுண்டி முடித்துக் கொண்டு காலை 9மணிக்கு தேவனூர், குளத்தூர், மருக்கலாங்குறிச்சி, வடுகர் பாளையம், தண்டலை ஆகிய கிராமங்களில் பிரச்சாரத்தை முடித்துக் கொண்டு, குவாகத்தில் பகல் உணவு கொண்டோம். பிற்பகல் வல்லம், பொன்பரப்பி, கொடுக்கூர், இடையக் குறிச்சி ஆகிய ஊர்களில் பரப்புரையை முடித்துக் கொண்டு, மாலை குவாகத்தை அடைந்தோம். இரவு 8மணிக்கு தமிழ் வழிக்கல்வி ஆதரவுப் பொதுக் கூட்டம் ஊராட்சி மன்றத் தலைவர் புலவர் இராமாநுசம் தலைமையில் நடைபெற் றது. வே.ஆனைமுத்து, வாலாசா வல்லவன், உழவன் பாரதி கே.கே. கிருஷ்ணமூர்த்தி, தோழி யர் மலர்மணி, ந.ப.அன்பழகன் ஆகியோர் உரை யாற்றினர். குவாகம் சி.தங்கராசு பேருதவியாக இருந்தார். அன்று இரவு பரணம் அடைந்தோம்.

28-5-2000 செந்துறை, மாத்தூர் பகுதி

சிற்றுண்டி முடித்துக் கொண்டு, பரணம், குமிழியம், இரும்புலிக் குறிச்சி, சிறுகடம்பூர், உஞ்சினி, கீழ் இராயம்புரம், ஆதிக்குடிக்காடு இலங்கைச் சேரி ஆகிய ஊர்களில் பரப்புரை நிகழ்ந்தது. செந்துறையில் பகல் உணவு கொண்ட பின்னர், பிற்பகல் இடைக்கலம்பூர், நயினார் குடிக்காடு, ஆர்.எஸ்.மாத்தூர், நக்கம் பாடி ஆகிய ஊர்களில் பிரச்சாரம் செய்து விட்டு, மாலையில் செந்துறை அடைந்தோம். அங்கு சிறப்பான முறையில் பொதுக்கூட்டம் நடை பெற்றது. து.இராச மாணிக்கம் தலைமை ஏற் றார். இரா.கலியமூர்த்தி வரவேற்புரையாற்றி னார். தோழர்கள் வே.ஆனைமுத்து,அரங்க. இள வரசன், ந.ப.அன்பழகன், உழவன் பாரதி கே.கே.கிருஷ்ணமூர்த்தி, வாலாசா வல்லவன், தோழியர் மலர்மணி, சி.வீரபாண்டியன் ஆகி யோர் உரையாற்றினர். செ.மு.தமிழ்ஒளி நன்றி கூறலுடன் தமிழ் வழிக் கல்வி விளக்கப் பொதுக் கூட்டம் முடிவுற்றது.

(தொடரும்)

## ஆகஸ்டு இதழில்...

தமிழ்வழிக் கல்வி பரப்புரைச் செய்திகள், வாழ்க்கை ஒப்பந்த நிகழ்ச்சிகள் பற்றியவை ஆகஸ்டு இதழில் இடம் பெறும். பொறுத்த ருள்க!

**- ஆசிரியர் குழு**

படிப்பகம்

www.padippakam.com



# தலைமை மாற்றம்

- முனைவர் ச.சண்முக சுந்தரம்

சமுதாயச்
சந்நிதியின்
ஆக்கிரமிப்பாளர்களே!

ஆட்சியைப்
பற்றாமலும் கூட
ஆதிக்கம்
செலுத்திக்கொண்டு
நீங்கள்
இதுவரை
அமர்ந்திருந்தது
போதும்

எழுந்து
எமக்கு
இடம் விடுங்கள்.

உங்கள்
தகுதிக்ளையும் மீறி
சலுகைகளை
நீங்கள்
சுவைத்துக் கொண்டு
இருக்கிறீர்கள்.

நீங்கள்
பற்றியிருக்கும்
தலைமைத்
தவிசுகள்
எம்மால்
உவந்து
தரப்பட்டவையல்ல;
எம்மை
வருத்திப்
பிடுங்கப்பட்டவை

எந்தத்
தகுதியைக்காட்டி
இந்த ஏற்றம்
பெற்றீரோ

உங்களின்
பலமுனை
மறைப்பு
முனைப்பையும்
மீறி
நான்
வரலாறு
அறிவேன்.

உங்களிடத்தே
மனிதகுலம்
சுகப்படச்
சொல்லும்படியோ
அன்றி
செய்யும்படியோ
எதுவுமில்லை

எப்போதோ
ஒரு காலத்தில்
நீங்கள்
ஏதேதோ
சொல்லியிருக்கலாம்
நீங்கள்
சொல்லியதால்
சில
நல்லவையும்
நடந்திருக்கலாம்.

அதற்காக
உங்கள் ஆதிக்கம் தொடர
அனுமதிக்க முடியாது.

இனி
தலைமைகள்
எம்மிடம்
வந்ததாகவேண்டும்.

பகைமையுடன்
நாங்கள்
பறித்துக் கொள்ளுமுன்
நீங்களாகவே
பரிமாறிவிடுங்கள்
—உங்கள்
நன்மைக்காக.

தலைமை மாற்றத்திற்கு
அவசரம்
இருக்கிறதோ
இல்லையோ
அவசியம்
வந்திருக்கிறது.

இன்று
நாம்
சொல்ல வேண்டியதும்
மக்கள்
கொள்ள வேண்டியதும்
நிறைய
இருக்கின்றன.

●

## பட்டத்துராணி

- இ.மதியழகன்

படிப்பதென்பது
பட்டங்களைப்
பறக்க விடுவதற்கல்ல
அது சிறு குழந்தை
செய்வது...

வாலிபர்களே!
பட்டத்தை
வாங்க வேண்டிய
வயதில்
பட்டத்து ராணியைத்
தேடுவது ஏன்?

பட்டத்தைப்
பெற்றால்
பட்டத்து ராணியைப்
பெற்றோர்கள்
முடிவு செய்வார்கள்.

★

www.padippakam.com

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி - சூலை 2000

| பெயர் | ஊர் | ரூ.பை |
|---|---|---|
| டாக்டர் பெ. இளங்கோவன் | அரியலூர் | 200.00 |
| ச.நாத்திக நந்தனார் | வண்டலூர் | 100.00 |
| ஓர் அன்பர் | சென்னை | 30.00 |
| இரா. பத்மநாபன் | " | 25.00 |
| ப.இளங்கோவன் | " | 25.00 |
| வ.அருவி, வ.அரிமா | சென்னை | 10.00 |
| சீ.இளமதி, சீ.அகிலா | " | 20.00 |
| முத்து அன்பழகன் | சீர்காழி | 10.00 |
| அழகு அன்பழகன் | " | 10.00 |
| முத்து அ. அறிவுக்கடல் | " | 10.00 |
| பால்வண்ணன் | வடக்குமாங்குடி | 10.00 |
| க.முகிலன் | சோளிங்கபுரம் | 50.00 |
| கி.கலை | " | 50.00 |
| க.குப்புசாமி | " | 50.00 |
| ஜெ.அய்.ஏ.காந்தி | எரும்பி | 10.00 |
| வள்ளி விசயன் | திருக்கோவிலூர் | 20.00 |
| நா.பா. செந்தமிழ்க்கோ | வேலூர் | 50.00 |
| பகுத்தறிவன் | அரக்கோணம் | 25.00 |
| லோ.ரெ.குமார் | சென்னை | 200.00 |
| ந.அப்துல் ரகுமான் | " | 200.00 |
| சி.கோ. | இரும்புலிக்குறிச்சி | 206 |
| சிதம்பரன்.கி. | ஈரோடு | 100.00 |
| நாத்திகன் கேசவன் | சென்னை | 50.00 |
| இரா.பாண்டியச் செல்வன் - அகிலா துணைவர்களுக்கு விநோதன் (மகன் பிறப்பு மகிழ்வாக) | உடையார் குடி காடு | 100.00 |
| திருச்சி உறையூர் இரா. கலியபெருமாள் - தனலட்சுமி புதிய இல்லத் திறப்பு விழா மகிழ்வாக | | 500.00 |
| உறையூர் கோ. முத்துக் கிருஷ்ணன், 3ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மு. செகநாதன் | | 200.00 |
| த. அமலா | படப்பை | 50.00 |
| ச. செழியன் - கலைச் செல்வி திருமண மகிழ்வாக | | 200.00 |
| குமாரகுடி நா.பெரியசாமி - இராசலட்சுமி ஆகியோர் மூன்றாவது மகன் வெ. குமரேசன் திருமண மகிழ்வாக | | 100.00 |
| க. அங்கமுத்து - சத்திய வாணி ஆகியோர் மகள் அ.மீனா - ஏ.சம்பத்குமார் திருமண மகிழ்வாக | | 25.00 |
| இராசாராம் | திருச்சி | 50.00 |
| எம்.கே.சுப்பிரமணி | " | 250.00 |
| மு.நரசிம்மன் | " | 50.00 |
| டி.குணசேகர் | " | 40.00 |
| பா.சந்தானம் | " | 50.00 |
| பா.துரைராஜ் | " | 50.00 |
| சாமி. கங்காதரன் | " | 35.00 |
| து.மா. பெரியசாமி | " | 50.00 |
| நீ.சுப்ரமணியம் | " | 50.00 |
| அசோகன் | " | 100.00 |
| ஆர்.கோவிந்தராசு | " | 30.00 |
| ஆ.அப்பால் ரெங்கன் | அறந்தாங்கி | 30.00 |
| க.செல்வி - ப. தனசேகரன் திருமண மகிழ்வாக | முருகன்குடி | 100.00 |

### மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி

| | | |
|---|---|---|
| கி.விடுதலை | சோளிங்கபுரம் | 50.00 |
| சுகுணா - வடிவேலு | சென்னை | 10.00 |
| அப்துல் ரகுமான் | " | 200.00 |

### மதியொளி தோற்றம்

*கடலூர் மாவட்டம், திட்டக்குடி வழக்கறிஞர்கள் அ. பழநியாண்டி — தி. மலர்வாலண்டினா துணைவர்களுக்கு 22.5.2000 அன்று இரண்டாவது மகவாக பெண் குழந்தை பிறந்தது. மேற்படி பெண் குழந்தைக்கு ப.ம. மதியொளி எனப் பெயரிடப்பட்டது. இதன் மகிழ்வாக சிந்தனையாளன் வளர்ச்சிக்கு ரூ.100/- வழங்கப்படுகிறது.*

மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக வெளியிடுபவர், ஆசிரியர்: வே.ஆனைமுத்து,
19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம், சென்னை-5. அச்சுக்கோப்பு: என்.ஏ.எம். பிராசஸ், சென்னை-18
அச்சிட்டோர்: பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம், சென்னை-5. தொலைபேசி: 852 28 62

படிப்பகம்

www.padippakam.com

Licenced to post without prepayment WPP No.344
Registrar of Newspapers of India under licence No. 24452/74 'Sinthanaiyalan' TN/Chief PMG/618/2000

# வெல்ல முடியாத ஆயுதம்

— 'தமிழேந்தி

பிணந்தின்னி அரசியல்
பீகாரில்
மீண்டும் மீண்டும்
படுகொலைப் பயங்கரம்

ரண்வீர் சேனா
ரத்தப் பசிக்கு
முப்பத்தைந்து உயிர்கள்
மொத்தமாய் அழிவு

லல்லு என்னும்
தீவனத் திருடன்
யாதவ, முசுலீம்
வாக்குகள் பொறுக்கும்
கடைந் தெடுத்த
சுயவாளித் தலைவன்

இங்குள
வீரமணிக்கு
இனிக்கலாம்;
பிற்பட்ட மக்களின்
ரட்சகன் என்று
பெருமை பேசிப்
'பங்கு' கறக்கலாம்

காட்டு விலங்காண்டி
வாழ்விலும் கீழாய்க்
கடைக்கோடி நிலைக்குத்
தள்ளப் பட்ட

மக்களை மதியா
மமதையாளர்க்குச்
சாதி இங்கே
காப்பரண்; அதனைச்
சம்மட்டி அடியால்
நொறுக்க வேண்டும்

பண்ணையார் படையாம்
ரண்வீர் சேனா
நடத்தும் இந்த
நரபலி வேட்டையை
அடக்கும் ஆற்றல்
லல்லுவுக் குண்டா?

பிஜேபியால் இதைச்
செய்ய முடியுமா?
கால மெல்லாம்
ஆண்டு தொலைத்த
காங்கிரஸ் கட்சிதான்
கட்டுப் படுத்துமா?

அப்பாவி மக்களின்
மண்டையைப் பிளக்கும்
காவல்துறை என்ன
களைபிடுங்க உள்ளதா?

எல்லாமே பண்ணைக்குக்
கையாள்.
வேகும் பிணத்தில்-
'தலித்', 'பிற்பட்டோன்'
வேற்றுமை இல்லை

ஆதிக்க வர்க்க வரிசையில்
அடல்பிகாரி வாஜ்பாய்
தலித்பிதாமகர் பாஸ்வான்
எல்லாத் தலைவனும்
மக்களின் எதிரியே!

மேல்சாதிப் பண்ணைகள்
கொடுமையின் அதிர்வே
நக்சல்பாரி முழக்கம்!
சமூக நீதி
மதச்சார்பின்மை
லாலுவுடன் குலவும்
போலிக் கம்யூனிசம்
யாவுமே-
உண்மைச் செங்கொடி
நெருப்பில் கருகும்

பிணமாய் வீழ்ந்து
மடிந்தோர் தம்மின்
பிள்ளைகள் நாளை
எழுவர்;
இந்தப் பிணந்தின்னி
அரசியல் கழுகுகளுக்குப்
புதிய புரட்சியால்
பதிலடி தருவர்

அணிதிரட்டுவோம்
மக்களை!
என்றுமே-
வெல்ல முடியாத
ஆயுதம் அவர்களே!



19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம், சென்னை-600 005. தொ.பே.எண். 852 28 62

படிப்பகம்